# தமிழரசு

1-12-1981 50 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2012


துன்மதி—கார்த்திகை 16




"வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு"



**14-11-1981** அன்று மாலை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு *சாதிக் அலி* அவர்கள் மாண்புமிகு சட்டம் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு *சி. பொன்னையன்* அவர்கள் தலைமையில் திறந்து வைத்தார்கள்.





மாண்புமிகு முதல்வர் திரு *எம்.ஜி.ஆர்.* அவர்கள் **10-11-81** அன்று ஈரோட்டில் பால்பண்ணையைத் துவக்கிவைத்துக் குழந்தைகளுக்கு பால் வழங்கினார்கள்.





காவலர் குடியிருப்பினை **10-11-81** அன்று ஈரோட்டில் மாண்புமிகு முதல்வர் திரு *எம்.ஜி.ஆர்.* அவர்கள் துவக்கிவைத்தார்கள்.



சேரன் போக்குவரத்து பேருந்து வெள்ளோட்டத்தினை மாண்புமிகு முதல்வர் திரு *எம்.ஜி.ஆர்.* அவர்கள் **10-11-81** அன்று ஈரோட்டில் துவக்கிவைத்தார்கள்.







**14-11-1981** அன்று சென்னை ஸ்புர்டாங்க் சாலையில் உள்ள பல்கலைக் கழக விளையாட்டரங்கில் நடைபெற்ற குழந்தைகள் அணி வகுப்பினை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு




# தமிழரசு

மலர் : 12 இதழ் : 11

1-12-1981

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி—கார்த்திகை 16

# பாரத தேசம்

## மகாகவி பாரதியார்



பாரத தேசமென்று பெயர்சொல்லுவார்—மிடிப்
பயங்கொல்லு வார்துயர்ப் பகைவெல்லுவார்.

வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்—அடி
மேலைக் கடல்முழுதுங் கப்பல்விடுவோம்
பள்ளித் தலமனைத்துங் கோயில்செய்கு வோம்எங்கள்
பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்.

சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்
வங்கத்தி லோடிவரும் நீரின்மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர்செய்குவோம்.

வெட்டுக் கனிகள்செய்து தங்கமுதலாம்
வேறு பலபொருளுங் குடைந்தெடுப்போம்
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவைவிற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டுவருவோம்.

முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர்பல நாட்டினர்வந்தே
நத்தி நமக்கினிய பொருள்கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே

சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்,

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தங் கவிதைகொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.




காசி நகர்ப்புலவர் பேசுமுரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்
ராசபுத் தானத்து வீரர்தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கமளிப்போம்.

பட்டினி லாடையும் பஞ்சிலுடையும்
பண்ணி மலைகளென வீதிகுவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டுவருவார்
காசினி வணிகருக் கவைகொடுப்போம்.


ஆயுதம் செய்வோம்நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்கல்விச் சாலைகள்வைப்போம்
ஓயுதல் செய்யோம்தலை சாயுதல்செய்யோம்
உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள் செய்வோம்

குடைகள் செய்வோம்உழு படைகள்செய்வோம்
கோணிகள் செய்வோம்இரும் பாணிகள் செய்வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள்செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள்செய்வோம்.

மந்திரம் கற்போம்வினைத் தந்திரங்கற்போம்
வானை யளப்போம்கடல் மீனையளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டுதெளிவோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரங்கற்போம்.

காவியம் செய்வோம்நல்ல காடுவளர்ப்போம்
கலை வளர்ப்போம்கொல்ல ருலைவளர்ப்போம்
ஓவியம் செய்வோம்நல்ல ஊசிகள்செய்வோம்
உலகத் தொழிலனைத்து முவந்துசெய்வோம்.

சாதி இரண்டொழிய வேறில்லையென்றே
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்தமென்போம்
நீதி நெறியினின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர்மற்றோர்.



# கவியரசர் பற்றி தந்தை பெரியார்

தமிழ்மொழியின் சிறப்பை இந்நாளில் தமிழ் வளர்த்த கவியரசர் சுப்பிரமணிய பாரதியார்,

'' யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்
..........................................................
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்''

என்று கூறியிருந்தார். மற்றுமோரிடத்தில் அவர் தமிழர்களுக்கு ஓர் எச்சரிக்கையும் வழங்கியிருந்தார். அது வருமாறு:

'' மூன்று குலத் தமிழ் மன்னர்—என்னை
மூண்டநல் லன்போடு நித்தம் வளர்த்தார்''

'' இன்றொரு சொல்லினைக் கேட்டேன்! —இனி
ஏதுசெய் வேன்? என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை —இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்''



'' மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்''
'' என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ!
சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்!

'' தந்தை யருள்வலி யாலும்—இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை யென்று மிருப்பேன்''.

இப்பொன் மொழிகளை உற்று நோக்கி உண்மைப் பொருள் தேறுவோர் தமிழ் மொழியை வளர்க்க முயலாதிருப்பாரோ?

—தந்தை பெரியார்

(திருவண்ணாமலை 30-வது தமிழர் மாநாடு—தலைமையுரையில்— 'நவசக்தி' 21-11-1924).

## " பசிக்குத் தெரியுமாடா சூடு!"

சுதேசமித்திரன் காரியாலயம் ஜார்ஜ் டவுன் எர்ரபாலுசெட்டித் தெருவில் இருந்தபோது கவி பாரதியார் உதவி ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அச்சமயம் நான் ஆசிரியர் ஸ்ரீ. ஏ. ரங்கசுவாமி ஐயங்கார் அறை மற்றும் எடிடோரியல் அறையிலும் பியூனாக வேலை செய்து வந்தேன். எனக்குக் கவிபாரதியாரிடம் நெருங்கிய பழக்கமுண்டு. காரியாலயத்தில் பாரதி வேலைகள் முடிந்ததும் பாட்டுகள் பாடுவார். பாரதியார் தினசரி என்னிடம் கொத்தவால் பஜாரிலிருந்து மாம்பழம் வாங்கி வரும்படி பணம் கொடுப்பார். நானும் நாள் தவறாமல் வாங்கி வந்து கொடுப்பேன். கவி பாரதியாருக்கு மாம்பழத்தின் மீது அலாதி பிரியமுண்டு. அடிக்கடி மாம்பழம் சாப்பிடுவதைக் கண்ட நான் பாரதியாரிடம், ''சாமி! மாம்பழம் அதிகமாகச் சாப்பிடாதீர்கள். அது சூடு. உடம்பிற்கு ஆகாது'' என்பேன். அதற்கு பாரதியார், ''தம்பி சம்பந்தம்! பசிக்குத் தானடா மாம்பழம் சாப்பிடுகிறோம். பசிக்குத் தெரியுமாடா சூடு'' என்று நம்மையே திருப்பிக் கேட்டு விடுவார். (தகவல் : எம். சம்பந்தம், முன்னாள் சுதேசமித்திரன் ஊழியர்).

தொகுத்தது : ரகமி.



# மக்கள் கவிஞர்



## பேரறிஞர் அண்ணா

*பேரறிஞர் அண்ணா 1950-ல் வானொலியில் ஆற்றிய People's Poet என்னும் ஆங்கில உரையின் தமிழாக்கத்தின் சில பகுதிகள்*

கடவுளர்களுக்குப் பாமாலைப் பதிகங்கள் பாடுவதோடு நின்றுவிடவில்லை பாரதி. மண் ஆளும் மன்னவர்களுக்கு விண்ணப்பப் பாக்கள் எழுதி விடுக்கவில்லை. உழவு சால் ஓட்டும் சாதாரண உழவனுக்குப் பாட்டுப் பாடினார். தொட்டில் ஆட்டும் தாய்மார்கள், விளையாட்டு வெளிகளிலே ஓடி விளையாடும் குழந்தைகளுக்குக் கவிதைகள் இசைத்தார். கடந்த காலப் புலவர் சிகாமணிகளைப் போல வேதாந்த வியாக்கியானங்களைச் சுதந்தரக் கோரிக்கைக்குச் சப்பைக் கட்டாக உபயோகிக்கவில்லை. உலகத்தின் தூர தொலைவிலுள்ள நாட்டு மக்களின் சுதந்தரப்போராட்டங்களைக் கவிதைகளாக்கி மக்களுக்குச் சமர்ப்பித்தார். இத்தாலிய சுதந்தர உதயத்தை, மாஜினி என்ற தேசீய வீரனின் சலியா உழைப்பால் மக்கள் புத்துயிர்ப்புப் பெற்று உரிமைப் போரில் வெற்றிகரமாக ஈடுபட்டதை உன்னத சொற் சித்திரமாகத் தீட்டிக் கொடுத்தார். புரட்சிக்குப் பின் உருவான பிரெஞ்சு நாட்டுக் காட்சியைப் பாடினார். ஜாரின் தளைகளைத் தகர்த்து நொறுக்கி வீறுடன் எழுந்து நின்ற ரஷ்யாவைப் பற்றிப் புதுமை ஓவியம் தீட்டினார். சுதந்தர பெல்ஜியம், பிரான்சு, சிகப்பு ரஷ்யா குறித்த சொற் சித்திரங்களே அவர் மக்களுக்குப் பரிசாக அளித்தது.

பிஜித்தீவு வாழ்வு பற்றிய பேனாச் சித்திரத்தை மக்கள் முன் வைத்து, பாருங்கள் சகோதரர்களே உம்முடன் பிறந்த சோதரர் நிலையை எனக் காட்டினார். ஆங்கில நாடகாசிரியன் ஷேக்ஸ்பிரியரின் தன்மையிலே, மக்கள் கவிஞனின் லட்சணம் அதுதான். தன் நாட்டு மக்களின் முட்டாள் தனத்தையும், குற்றங் குறைகளையும் சுட்டிக் காட்டத் தயங்க மாட்டான் மக்கள் கவிஞன். சிந்தையிலும் செயலிலும் அவர்கள் எவ்வளவு பிற்போக்கானவர்களாக இருக்கிறார்கள். அதே வேளையில் உலகத்தின் இதர நாடுகள் எவ்வளவு வேகமாக முன்னேறுகின்றன, எவ்வளவு சிறப்பாகச் செயல் புரிகினறன, அங்கெல்லாம் வாழ்வு எப்படி வளம் பெறுகிறது என எடுத்துக் காட்ட அஞ்சமாட்டான்.

வாழ்க்கை வசதிகள் பெற்று மேட்டுக் குடிகளாகத் திகழ்ந்தவர்களைக் கண்டு தொடை நடுங்கவில்லை பாரதி. அவர்களது தவறுகளையும் தயங்காமல் மக்கள் முன் வைத்தார். வஞ்சகத்தையும், துரோகத்தையும் அவற்றின் உண்மை சொரூபத்திலே கொணர்ந்து நிறுத்தினார். ஒப்பற்ற திரம், அளவற்ற உற்சாகத்தோடு இத்தகைய பணி புரிந்தார் அவர்.

பாரதியைத் தேசீயக் கவி என அளவுக்கு அதிகமாகப் பாராட்டுவதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள் ஒரு சாரார். கவிஞர் மீதுள்ள காதல் அல்ல காரணம். இப்படிச் சித்திரித்துக் காட்டுவதன் மூலம் கவிஞரின் மற்றொரு தன்மையை— அதாவது பாரதி மக்களின் கவிஞர் என்ற உண்மையை— மறைத்து விடலாம் என்பது அவர்கள் எண்ணம். சுற்றி வேலி கட்டிக்கொண்டு அந்த எல்லைக்குள் அடங்கி ஒடுங்கி விடுபவையல்ல பாரதியாரின் பாக்கள். வேதாந்த, தேசீயச் சிமிழ்களில் அவற்றை அடைக்க முடியாது. புராதன சம்பிரதாயங்களின், புராணக் கற்பனைகளின் ஊழல்களை அம்பலப்படுத்த அவர் அஞ்சவில்லை. பழைமைப் பாதுகாவலர்களாக, சம்பிரதாய உடும்புகளாக விளங்குபவர்களை நோக்கி ஆவேசமாக எறிகிறார்.

புராதன காலத்தில் அறியாமையும், குள்ளக் கருத்துக்களும் இல்லவே இல்லை என்று எண்ணுகிறீர்களா நீங்கள்? செத்த சிந்தனைகள் என்ற பிணத்தை ஏன் இன்னும் நீங்கள் கட்டி அழவேண்டும்? நிகழ்காலத்தில் வாழ்ந்து எதிர்கால வாழ்விற்கு வகை செய்யுங்கள். இறந்தகால அந்தகாரத்தில் துழவ வேண்டாம். கடந்த காலம் கடந்து போனது போனதுதான். சென்றது இனி மீளாது. இது பாரதி வாக்கு. இங்கேதான் மக்கள் கவிஞரை நாம் சந்திக்கிறோம். வாழ்வோடு ஒட்டிய ஒழுக்க முறையை மக்கள் சமுதாயத்திற்காக அமைத்துக் கொடுத்துள்ளார் அவர்.

புராணக் கோட்பாடுகளைப் போல மண்ணோடு ஒட்டாத சித்தாந்தம் அல்ல அவர் காட்டும் வழி, மக்களுக்கு ஒரு புதிய விழிப்பு

ஊட்டினார். உலகம மாயை என்ற சாக்குருவி வேதாந்தம்-பாழுலகம் பொய்யே பரம பதம் போ என்ற படுபாடாவதிப் பண்பாடு— மக்களிடையே பரவுவதைத் தடுத்தார். அத்தகைய நம்பிக்கையைக் கண்டு சிரித்துத் துப்பினார். ஆசிரம வாசிகளுக்கு ஆத்திரம் வரச் செய்தார். விளைவு என்னாகுமோ என வீண பீதி கொள்ளவில்லை. அத்தகைய சோம்பேறி வேதாந்தங்களில் ஊறிய மக்கள் உதவாக்கரைகளாக, ஒன்றுக்கும் உதவாத பிற்போக்கு வாதிகளாக ஆகிவிடுவார்கள் என்பது அவர் கொள்கை.

பசி, வறுமை, அறியாமை முதலிய வற்றை அவரால் சகிக்க முடியாது. பணக்காரர்களின் கொடுமையைப் பலமாகச் சாடுகிறார் அவர். தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் எனக் கர்ஜிக்கிறார். வாழ்வு வசதிகள் அனைத்தும் பெற்று மக்கள் வாழ வேண்டும். வர்த்தகம் வளமாக வேண்டும், இயந்திரத் தொழில்கள் பெருக வேண்டும், புதுயுகத்தின் நலன்களெல்லாம் நாட்டிலே குவிய வேண்டும் என்றெல்லாம் விரும்புகிறார். பூசாரித்தனமும், சுலோக ஊளையும் அவரது மதக் கோட்பாடுகள் அல்ல. மக்களுக்கு உழைத்தலே— சகோதர ஜீவர்களின் பணி புரிவதே— அவரது மதம்.



# தமிழ் மறவாப் பெரும்புலவர்



—நாவலர் சோமசுந்தர பாரதியார்

தமிழர் மறந்தாலும் தமிழ் மறவாத இப்புலவர் பெருமானின் பாக்கள் என்றும் இறவாது நின்று நிலவும். இவர் மூட்டிய தேச நேச நெருப்பு அவியாது வளர்ந்து, தமிழக முழுதும், இருளகற்றி, ஒளிரச்செய்து நிற்கும் ஜோதியாய் விட்டது.

புதுச் சிறு விளக்குகளைக் கண்டு அதிசயிக்கும் மாந்தர் செம்பரிதி யொளி கண்டு புகழ்வதில்லை. சிற்றுண்டிச் சுவைக்கு மகிழ்பவர் அமிர்தம் சிறந்த ருசியுடையதென்று அதிசயிப்பதில்லை. வெயிலிடுவது பரிதிக்கும் சுவையினால் உயர்வது அமிர்தத்துக்கும் இயற்கையாகி, அவைகள் அந்தந்தக் குணத்தில் ஒப்பற்றுயர் திருப்பதால், ஒருவரும் அது கண்டு வியப்பதில்லை. சிறிது குறைந்த உயர்வளவில் மட்டே மாந்தர் கண்டு வியந்து, நயப்பது வழக்கம். சாமானியமாக, பரிசுக்குப் பாடாமலும், பணமுடையோர் குற்றங்களை மறைத்துப் பொய்யாகப் புகழாமலும் உண்மையில் வாழ்ந்த இவ்வுயர் புலவரை, அளப்பரிய அவர் தலைமைப் பெருமித மிகுதியால் மட்டுமே நமதுலகம் அறிய முடியாதாயிற்று போலும்.

பாரதியார் ஏனைப்புலவர் போலாது, புதுமுறைகளையே சிருட்டித்தார். தமிழ் மொழியில் பாக்களும் பாவினங்களும் மலிந்து கிடந்தும், அவைகளைவிட்டுப் புதுக்கருத்துக்களும், புதிய உணர்ச்சிகளும், மலிந்து விளங்க, அவைகளுக்குப் பொருத்தமான புதிய நடைகளையும் புதிய யாப்புகளையும் உண்டு பண்ணியிருக்கிறார். அநாயாசமாய், இயற்கையியல்புகளிலிருந்து, உருவகங்கள் உண்டுபண்ணிக் கையாளுவதும், எளிய உவமைகளால், பெரிய விஷயங்களை விளக்கத் துணியும், தனித்திறலும், முன்னைய புலவரிடத்தில்லாத இவரது அரிய குணங்கள், வாய்மை, வீரம் பெண்களைப் பேணல், எளியாரை ஏற்றல், ஓரமில்லா ஒற்றுமையுணர்ச்சி, சுதந்தரம் முதலிய இவர் பாராட்டிப் பாடிய பல குணங்களும், இவர்க்கு இயல்பானவை. இவையெல்லாம் இவர் பாக்களில் இனிது காணலாம். இவரது ''கண்ணன் பாட்''டையும், ''பாஞ்சாலி சபத''த்தையும் படித்தவர்களுக்கு, இவரது குணங்களும் திறமையும் விசிதமாகும். இவை உள்ளபடி அறிய விரும்புவோர்க்கு இவர் கவிகளைவிடச் சிறந்த கருவி கிடையாது. ஆதலால், இவர் நூல்களைப் படித்து ''நடுநிலையில் சிந்திப்பார்க்கு உள்ளத்தனையதிவர் உயர்வு என்பது தெளிவாகும்.



# பாரதியாரின் இளவல் விசுவநாத ஐயர் பேட்டி

பாரதியார் ஒரு மேதை. மேதை மட்டுமல்ல; ஒரு சிறந்த அறிவாளியுங்கூட. சிறிய வயதிலிருந்து தமிழ் மீது பற்று கொண்டு கவி புனைவதிலும் அதை அழகாக இலக்கிய நயத்தோடு பாடுவதிலும் மிக்க ஆர்வங்காட்டியவர். 1882 ஆம் ஆண்டு எட்டையபுரத்தில் பிறந்தார். எங்களது தந்தையார் சின்னச்சாமி அய்யர் தமிழ் மீது அளவிலாத பற்றுதல் கொண்டவர். சமஸ்தானத்தில் பலருடன் தொடர்பு கொண்டவராதலால் ,சிறந்த அறிவாற்றலையும் கொண்டவராயிருந்தார். முத்துச்சாமி தீட்சிதர் போன்றவர்கள் வாழ்ந்த காலத்திலேயே பாரதியாரின் கவிதைகள் பாராட்டுப் பெற்றன. அப்பாடல்கள் மக்களிடையே வீர உணர்ச்சியை தூண்டின என்றே சொல்லவேண்டும். எங்கள் தந்தையார் எங்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு மிகவும் சிரத்தை எடுத்துக் கொண்டார்.

பாரதியார் தனது ஐந்தாவது வயதிலேயே தாயை இழந்துவிட்டார். அதன்பின் எங்களது தந்தைதான் தாயாகவும் தந்தையாகவும் இருந்து பேணி வளர்த்து வந்தார். கல்வி கற்பிப்பதற்பான ஏற்பாடுகளைச் செய்தார். அதன்பின் இரண்டாவது மனைவியாக எனது தாயான திருமதி வள்ளியம்மாளை மறுமணம் செய்து கொண்டார். என் தாயாருக்கு நானும், எனது தமக்கை ஆக இரண்டு பேர். முதல் மனைவியின் பிள்ளை பாரதியார் மட்டுமே. என் தாயாரை பாரதி தன் சொந்தத் தாயாக பாவித்து அன்பு செலுத்தி வந்தார். சில நேரங்களில் கஷ்டங்களைக் கூட என் தாயாரிடத்தில் சொல்லி ஆறுதல் பெறுவதுண்டு. அப்பொழுதெல்லாம் பாரதியை எங்கள் தந்தையார் சுப்பையா என்றுதான் கூப்பிடுவது வழக்கம். அவருடன் நெருங்கிப் பழகிய நண்பர்களில் நாவலர் சோமசுந்தர பாரதி ஒருவர். பாரதி தன் ஏழாவது வயதிலேயே கவிகள் புனைந்தார். அருங்கவிகள் திருஞான சம்பந்தர், பராசக்தி அருள்பெற்ற குமரகுருபரர் போன்றோர் இளம் வயதிலேயே கவி பாடினார்கள் என்று சொல்லப்படுவதற்கு நிகராக விளங்கினார் பாரதி என்றுகூட சொல்லாலம். அதனால் பிற்காலத்தில் பெருங்கவியாக விளங்கினார். தமிழ் இசையிலும், இலக்கியத்திலும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். பாடல்களை இயற்றுவதோடு மட்டுமின்றி, அவற்றை இசைபட, இலக்கியநடையில் தானே பாடியும் வந்தார்.

எங்கள் தந்தையார் எட்டயபுரத்தில் நடத்திவந்த காட்டன் ஜின்னிங் மில்லை அந்நிய அரசு ஆதரவின்மையால் நசித்து மேற்கொண்டு நடத்த முடியாமல் போய்விட்டது. அதனால் எங்களது தந்தையார் மனம்நொந்து போனார். 1898-ல் எங்கள் தந்தையார் மறைந்துவிட்டார். அதன்பின்னால் 'தந்தை போயின் கல்வி போம்' என்பதற்கேற்ப பாரதி தன் கல்லூரிப் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டார்.

1893ஆம் ஆண்டிலே இருந்து-பாரதிக்கு 8 அல்லது 9 வயதாகியிருக்கும் போதே பெரும் புலவர்கள் கூடும் கூட்டத்தில் தானும் பங்கேற்று அவர்களுக்கு நிகராக விளங்கினார் தனது 16-வது வயதிலே அப்பெரும் புலவர் கூட்டத்தில் தான் 'பாரதியார்' என்ற பட்டத்தை அளித்துச் சிறப்பித்தார்கள். பாரதியின் புகழைப் பாராட்டாதவர்கள் எவருமிலர். பாரதியின் வளர்ச்சியைக் கண்டு

பொறுக்காத காந்திமதிநாத பிள்ளை என்ற புலவர், பாரதியை 'சின்னப் பயல்' என்று ஒரு பாடல் மூலம் கூற, அதற்கு பதிலடியாக பாரதியார் ஒரு பாடலைப் பாடி அதில்தம்மை 'சின்னப் பயல்' என்று கூறியவரை 'அதி சின்னப் பயல்'என்று கூறி அனைவரது பாராட்டுதலையும் பெற்றார்.

1879ம் ஆண்டில் பாரதிக்குக் கல்யாணம் நடந்தது. செல்லம்மாள் என்ற பெண்ணை மணந்து கொண்டார். அப்போது பாரதிக்கு வயது 16½ தான். மனைவியின் வயது 10 இருக்கும். அக்காலங்களில் குழந்தைக் கல்யாணம் நடப்பது சகஜம். பாரதிக்கு கல்யாணம் நடந்த சமயத்திலேயே என் தமக்கைக்கும், என் அத்தை மகனுக்கும் கல்யாணம் செய்வித்தார்கள். தமக்கைக்கு வயது 4 கூட ஆகவில்லை. என் அத்தை மகனுக்கு வயது 10.

# எழுச்சிமிகு தேசியகவி



**வி. சக்கரைச் செட்டியார்**

ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார், தமிழ் மறுமலர்ச்சியினை (RENAISSANCE) முன்கொண்டு கட்டியங்கூறிய பெருமான்; எழுச்சிமிக்க தேசீயகவி இறந்துவிட்டார், ஆயினும் காலலர்ந்த காரத்துள் மறைந்த வீரபுருஷர்களைப் போன்று, அவர் தமது கவிதைகளின் குழலிசையால் இன்னமும் நம்மோடு உரையாடியவாறிருக்கின்றார். அவர் என்றுமழியாப் புகழுக்கு உரிமை பெற்றிருப்பது, அவர்தம் வாழ்வில் ஒரு சமயம் பல ராஜிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருந்த போதிலும் அவை காரணம் பற்றியோ அதிகார வர்க்கத்தினரோடு சேர்ந்து கொண்டே அவருக்குக் கீழ்ப்பட்டோ ராஜீய மகாநாடுகளிலும், கமிட்டிகளிலும் பிரதம ஸ்தானங்கள் ஏற்றிருந்தா ரென்பது பற்றியோ அல்ல; ஆனால், அவரது ஒவ்விலா ஊக்க உணர்ச்சி அவர் தமிழ்நாட்டிற் களித்துள்ள இன்னிசைக் கீதங்களுள் எந்நாளும் தகதகவெனத் ததும்பி நிற்கின்ற தன்மையால் தான் ஆகும்.

இது போழ்து பாரதியாரின் பாடல்களை நால்வரின் பாடல்களைப் போல் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் பாடும்படி செய்வித்தல் எப்போதும் நல்ல பாடல்களைப்போற்றுவதான தமிழ்நாட்டின் கடமையாகும். இந்தப் பாடல் தொகுதிகளை வெளிவரும் போதே அவற்றை ஆயிரக்கணக்காகத் தமிழ் படிக்கும் ஜனங்கள் வாங்க வேண்டும். பாரதியாருக்குத் தனது பாடல்களை ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளும் எளிய வீடுகளிலும், பணக்காரர் மாளிகைகளிலும், ராஜீய மேடைகளிலும், நிம்மதி நிலவும் இல்லங்களிலும் பாடக் கேட்பதன்றி வேறொன்றும் மனச்சாந்தி உண்டாக்கக் கூடியதல்ல. என் நாட்டவரே! இந்திய நாட்டையும் தமிழ் மொழியையும் போற்றுபவரே! பாரதியாரின் ஞாபகார்த்தமாக எனது இச்சிறு மாலையைச் சமர்ப்பித்திருக்கிறேன். நான் செய்வீர்களென்று நம்புகிறபடி நீவிர் உங்கள் கடமையைச் செய்வீர்களா?

---

தன் கல்லூரிப் படிப்பை விட்டுவிட்ட பின் எங்களது குடும்பம் நிர்க்கதியாய் இருந்த போது, காசியிலிருக்கும் அத்தை ஊருக்குவந்து பாரதியை அழைத்துக் கொண்டு காசிக்குப் போய்விட்டார்கள். அங்கு ஜைய நாராயண கல்விச் சாலையில் படித்து வந்தார். சமஸ்கிருதத்தில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று விளங்கினார். எம்மொழியைக் கற்றாலும் தமிழ்மீதுதான் அளவிடாத ஆர்வம் காட்டினார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு எட்டையபுரத்திற்கே வந்து பின்பு சென்னையில் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் சப்-எடிட்டராக வேலையில் சேர்ந்தார்.

1920-21ஆம் ஆண்டில் சென்னையில் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் சப்-எடிட்டராக வேலை பார்த்தபோது, நாங்கள் சைதாப்பேட்டையில் தான் குடியிருந்தோம். பாரதியாருடைய நண்பர் துரைசாமி என்பவருடன் தான் நெருங்கிப் பழகினார். அவரிடம் தான் இயற்றிய கவிகளைப் பாடிக் காண்பித்து வருவார்.

பின்பு திருவல்லிக்கேணியில் துளசிங்கம் பெருமாள் தெருவில் இருந்தபோது எங்கள் வீட்டிற்கு வ.வே.சு. ஐயர் அவர்கள் அடிக்கடி வந்து போவார். சிந்துக்கவி என்று அக்காலத்தில் மிகவும் பிரபலமடைந்த ஒன்று. 'காயிலே புளிப்பதென்ன, கனியிலே இனிப்பதென்ன கண்ணபெருமானே' போன்ற சிந்துக்கவிகளை இயற்றி அதை அவருக்குப் பாடியே காட்டுவார்.

சென்னை வீட்டுக்கு ஒரு நாள் அவருடன் புதுவையில் பழகிய நீலகண்ட பிரும்மச்சாரி என்பவர், கையில் துப்பாக்கியை வைத்துக் கொண்டு, மயிலாப்பூரிலுள்ள வக்கீல்களை மிரட்டி பணம் கேட்டு வந்ததாகச் சொன்னார். இப்படி செய்வது தவறு உன் வறுமை அப்படி மிரட்டச் செய்திருக்கிறது என்று கூறி தன் கையிலுள்ள சில்லறைகளைக் கொடுத்தார். அவர் முன்னால் தான் 'இனியொரு விதிசெய்வோம் இதை எந்நாளும் காப்போம்' என்று பாடினார். அதில் 'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' ஏன்று அவர் புரட்சிக் குரல் கொடுத்து புத்துணர்வூட்டியதை மறக்கவே முடியாது. இந்த நாடு சுதந்திரம் அடைந்தபிறகு எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதை முன்னமேயே தனது கருத்தினைத் தெளிவாகத் தெரிவித்தார்.

ஒருசமயம் திருச்சியில் நான் படித்துக் கொண்டிருந்த போது சென்னையிலிருந்த பாரதிக்கு ஆங்கிலத்திலேயே ஒரு கடிதம் எழுதினேன். அதைக் கண்ட பாரதி, ''இனி இவ்வாறு ஆங்கிலத்தில் கடிதம் எழுதாதே. தமிழிலேயே எழுது - கொச்சையாக இருந்தாலும் பரவாயில்லை'' என்று பதில் கடிதத்தில் குறிப்பிட்டார்.

யாருக்கும் அஞ்சாமல் - தான் நினைத்ததைத் தைரியத்துடன் செயலில் நடத்திக் காட்டி நிமிர்ந்து நில் நட என்று கூறி வருவார். அவருடன் நடந்து சென்றால் கீழே பார்த்துக் கொண்டு வராதே நிமிர்ந்து நடந்துவா என்பார்.

[சென்னை தொலைக்காட்சி நிலையத்துக்கு அளித்த பேட்டியிலிருந்து.]



# பாவலர் பாட்டினில் பாரதிக் கவிஞர்




சாதி ஒழித்திடல் ஒன்று—நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடு மறந்தால்—மற்றப்
பாதி துலங்குவ தில்லை.
சாதி களைந்திட்ட ஏரி—நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்
சாதிப் பிணிப்பற்ற தோளே—நல்ல
தண்டமிழ் வாளினைத் தூக்கும்!

என்றுரைப் பார்என்னி டத்தில்—அந்த
இன்ப உரைகளென் காதில்
இன்றும் மறைந்திடவில்லை—நான்
இன்றும் இருப்பத னாலே!
பன்னும் நம் பாரதி யாரின்—நல்ல
பச்சைஅன் புள்ளத்தி னின்று
நன்று பிறந்தஇப் பேச்சு—நம்
நற்றமிழர்க் கெழில் மூச்சு!

மேலவர் கிழவர் இல்லை—இதை
மேலுக்குச் சொல்லிட வில்லை
நாலு தெருக்களின் கூட்டில்—மக்கள்
நாலா யிரத்தவர் காணத்
தோலினில் தாழ்ந்தவர் என்று-சொல்லும்
தோழர் சமைத்ததை உண்பார்
மேலும்அப் பாரதி சொல்வார்-'சாதி
வேரைப் பொசுக்குங்கள்' என்றே.

செந்தமிழ் நாட்டினிற் பற்றும்—அதன்
சீருக்கு நல்லதோர் தொண்டும்
நிந்தை இலாதவை அன்றோ!—எந்த
நேரமும் பாரதி நெஞ்சம்
கந்தையை எண்ணுவ தில்லை—கையிற்
காசை நினைப்பதும் இல்லை.
செந்தமிழ் வாழிய! வாழி—நல்ல
செந்தமிழ் நாடென்று வாழ்ந்தார்.



பாவேந்தர் பாரதிதாசன்

பாரதிநாள் இன்றடா?
பாட்டிசைத்து ஆடடா?

கற்றகல்வி காட்ட வென்று
கவிபுனைந்த தமிழ் மொழி
கண்டு கேட்டுப் பொருள் விளங்காக்
கசப்புக் கொண்ட நாட்களில்
சொற்றொடரில் இனிமை தந்தான்
சுப்ர மண்ய பாரதி;
தூயன் வாழ்க! வாழ்க! வென்று
சொல்லிச் சொல்லி ஆடடா!

ஒருமனிதன் உணவே யின்றி
உயிர்துடிக்கக் கண்டிடில்
உருக்குலைப்போம் உலகந்தன்னை
ஒன்றுகூடும் என்றவன்
அருமைப் பாடல் தமிழகத்தில்
அச்சம் போக்கி வருகுது !
அண்டமும் கிழித்தெறியும்
ஆற்றல்நமக் கூட்டுது!

நாட்டை யாளும் உரிமை சொந்த
நாட்டினருக் கல்லவோ?
நமது பாட்டன் சொத்தடா
நமது நாடு தமிழனே!
நாட்டில் வேறு ஆட்சி செய்து
நம்மை யாள்வ தேதென
நாளும்பாடி அறிவளித்தோன்
நமது பாரதி! ஆடடா!

வறுமைநோய் பிடித்து வீட்டில்
மனைவி மக்கள் வாடிட
வாட்டமோடு இந்தியத்தாய்
மனத்தில் காட்சி தந்திடச்
சிறுமை நீக்கிக் களிப்பினோடு
தேசத் தொண்டு செய்தவன்
சீர்த்தி இன்று மனத்தில் எண்ணில்
திரண்டுதோ ளுயருது !

கார்மயில் போல் தமிழர் இங்குக்
களித்திருந்த நாட்கள் போய்க்
கண்ணிருண்டு அடிமை வாழ்வில்
கதிகலங்கி நின்றிடத்
தார்மொழியால் உணர்வளித்துத்
தலைநிமிரச் செய்தவன்
தமிழ்க்கவிகள் வாழ்க வென்று
தலைநி மிர்த்தி ஆடடா!

-கவிஞரேறு வாணிதாசன்

ஆன்ற கவிஞர் அனைவோர்க்கும் முன்முதலாய்த்
தோன்றுங் கவிதைச் சுடரொளியே! நீவாழ்க!

பேசுந் தமிழிற் பெரும்பொருளைக் கூறிவிட்ட
வாசத் தமிழ்மலரே! வாரிதியே! நீவாழ்க!

தொட்டதெல்லாம் பொன்னாகத் துலங்கும் கவிக்கடலே!
பட்டமரந் தழைக்கப் பாட்டெடுத்தோய்! நீ வாழ்க!

எங்கே தமிழ் என்று என்தமிழர் தேடுகையில்
இங்கே தமிழென் றெடுத்துவந்தோய்! நீ வாழ்க!

கருக்கிருட்டில் பாழ்குழியில் கால்பதிந்த செந்தமிழை
உருக்குமொளி மண்டபத்தில் உலவவிட்டோய்! நீ வாழ்க!

நெஞ்செலும்பு கூடாகி நிலைகுலைந்த மானிடரை
அஞ்சுதலை விட்டு அழைத்துவந்தோய்! நீவாழ்க!

முட்டறுந்து கால்முடங்கி மூக்கா லழுதவரைக்
கூட்டிவந்து வேல்கொடுத்த கொற்றவனே! நீ வாழ்க!

நாடுமொழி நாடாது நாடுவென கேடாகக்
கூடெடுத்தோர் மேனிக்குக் குருதிதந்தோய்! நீவாழ்க!

இமயமலை மேற்றொடங்கி இளங்குமரி எல்லைவரை
தவழ்ந்துவரும் சந்திரனே! சாரதியே! நீவாழ்க!

என்றுவரும் என்றே ஏங்கிநின்ற சுதந்தரத்தைக்
கண்டவன்போல் பாடிவைத்த கற்பனையே! நீவாழ்க!

தாயின் மணிக்கொடியைத் தலைமேல் மிதக்கவிட்டுச்
சேயாய் அகங்குளிர்ந்த சித்தனே! நீவாழ்க!

காலக்கடல் கடந்து கவிதையெனும் தோணியிலே
நீளவழி வந்தவனே! நித்திலமே! நீவாழ்க!

பாரதத்தை வாழவைக்கப் பாட்டெழுதிப் பாட்டெழுதிப்
பூரதத்தில் ஏறிவிட்ட பொன்மகனே! நீவாழ்க!

**—கவியரசு கண்ணதாசன்**



சோற்றினுக் கறிவை விற்றுத்
தூர்த்தரைப் புகழ்ந்து பாடிச்
சோம்பரைச் செல்வ ரென்று
தொழுதுடல் சுகித்து வாழ்ந்து
கூற்றினுக் குடலம் போகக்
குப்பையிற் கவிகள் சோரக்
குறிவிடா திறந்து போகும்
கவிகளின் கூட்டம் சேரார்
வேற்றவர்க் கடிமை நீங்கும்
விடுதலை வரமே வேண்டி
வீரமும் ஞானம் பொங்கச்
சக்தியின் வேள்வி பாடி
நாற்றிசைத் தமிழ ரெங்கும்
நாட்டினைப் பணியச் செய்த
நாவலர் சுப்ர மண்ய
பாரதி நாமம் வாழ்க!

**— நாமக்கல் கவிஞர்**

# பாவலர் பாட்டினில் பாரதிக் கவிஞர்

ஊரறிய நாடறிய உண்மை யெல்லாம்
ஒருவரையும் அஞ்சாமல் எடுத்து ரைத்தோன்
ஆரமுதம் அனையகவி பாடித் தந்தோன்,
அமரகவி யென்றெவரும் புகழப் பெற்றோன்,
சீருயரும் தமிழ்மக்கள் செய்த வத்தால்
தென்னாடு சிறக்கவந்த சுப்ர மண்ய
பாரதியார் பெயர்போற்றி ஏத்து வோமே
பாமாலை புனைந்தவற்குச் சாத்து வோமே!

## பாரதி மண்டபம்

தேவருமே இங்குவந்து செந்தமிழைக் கற்றினிய
காவலராய் வாழமனம் பற்றுவரே; பூவுலகில்
வானுயரும் பாரதியார் மண்டபத்தை எட்டப்பன்
மாநகரில் கண்டு மகிழ்ந்து.

பாரதத்தாய் செய்ததவப் பயனாய் வந்த
பாவலன்சுப் பிரமணிய பாரதிக்குச்
சீருயரும் எட்டய்ய புரத்திற் கண்ட
திருக்கயிலை யனையமணி மண்ட பத்தைப்

பெருவகை தருசர்வ ஜித்தில் கன்னி
பிறந்தஇரு பானேழில் திறந்து வைத்தான்
தாரணியில் வங்கவள நாட்டை யாளும்
சக்கரவர்த்தி ராஜகோ பால மாலே!

**—கவிமணி**

பாரதியாரின் கவிதைகள் இன்று நமக்கு உணர்த்துகின்ற முக்கிய படிப்பினை என்ன, தலையாய செய்தி என்ன என்று நாம் ஆராய்ந்து பார்த்தால், அது நாட்டின் ஒருமைப் பாடே. அன்றே அவர் வற்புறுத்தி வலியுறுத்தியதை, அன்றே அறிவுறுத்தியதை, இன்று நாம் சொல்லிலும், செயலிலும், சிந்தையிலும், நம்முடைய திட்டங்களிலும், பொது வாழ்விலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும், சமூக இயல்களிலும், கலாச்சார எழுச்சிகளிலும், நிகழ்ச்சிகளிலும், போற்ற வேண்டும்; அந்த ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க வேண்டும். பாராட்ட வேண்டும், பலப்படுத்த வேண்டும், வளமாக்க வேண்டும், உண்மையானதாக்க வேண்டும், உயிருள்ளதாக்க வேண்டும் என்பதுதான் பாரதியாரின் பாடல்கள் இன்று நமக்குத் தரும் படிப்பினை.

நாட்டுக்கு என்ன நேரிட்டாலும் அது நாட்டு மக்களின் ஒரு பகுதியினருக்கு மட்டும் நேரிட்டதல்ல; நாட்டு மக்களின் அடித்தளத்திலிருந்து அரண்மனைகளில் வாழ்கின்ற மக்கள் வரையில் அனைவருக்கும், நாட்டுக்கு ஏற்படுகின்ற ஒரே கதிதான் ஏற்படும்; நாட்டிற்கு ஏற்படும் நல்லதிலும், கெட்டதிலும் இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் குடிமக்கள் அனைவருக்கும் பங்கு இருக்க வேண்டும், பங்கு உண்டு, என்பதை அவர் வலியுறுத்தினார்.

'எப்பதம் வாய்த்திடு மேனும் நம்மில்
யாவர்க்கும் அந்தநிலை பொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்— வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்'

அன்று அவர் கூறியதில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முப்பது கோடி என்பது மாறி விட்டிருக்கலாம்; பொருளற்றதாகவோ, பொருத்தமற்றதாகவோ ஆகிவிட்டிருக்கலாம்; ஆனால், வாழ்ந்தால் அத்தனைகோடியும் வாழ்வோம்; வீழ்ந்தால் அத்தனை கோடி முழுமையும் வீழ்வோம் என்ற உணர்வு, நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏற்படுவது, நாட்டின் நலனுக்கு இன்றியமையாத ஓர் ஊக்கச் சக்தியாகும். இந்த நாடு என்பது ஒரு பூகோளப் பாகுபாடு அல்ல, ஓர் அரசியல் நிலையல்ல, இந்த நாடு என்பது கோடானு கோடி மக்களின் உயிர்நிலையிலிருந்து பிறக்கின்ற உண்மை, வரலாற்றிலிருந்து, கலாச்சாரத்திலிருந்து, பாரம்பரியத்திலிருந்து, பொருளாதார வளத்திலிருந்து ஆதாரம் கண்டு வலுப்பெற்று வளம் பெறுகின்ற ஓர் உண்மை, இந்த நாட்டின் ஒருமைப்பாடு என்பது, அவருடைய பாடல்கள் பலவற்றிலே பரந்து கிடக்க நாம் காணலாம்.

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே'

என்ற அவர் சூத்திரம், நமக்குத் தாரக மந்திரமாக விளங்குவது. இந்த நாடு என்பது என்ன? இந்த நாடு என்பது இந்தியன் ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும், உதிக்கின்ற பெருமித உணர்வு, எழுகின்ற இலட்சிய வேகம், ஏற்படும் எக்காள உணர்வு. இந்த நாட்டிலே நான் வாழ்ந்தேன். இந்த நாட்டின் பாரம்பரியம் எனக்கு உரியது, இந்த நாட்டின் வரலாறு எனக்குச் சொந்தமானது, இந்த நாட்டின் பண்டைக் காலமும், தொன்மையும், தொன்று தொட்டு அவர்கள் கண்டு வந்த மாட்சியும் எனக்குச் சொந்தமானவை, இந்த நாட்டின் நிகழ் காலத்தினை உருவாக்குவதில் நான் பங்கு கொள்கிறேன். இந்த நாட்டின் எதிர் காலத்தில் எனக்கு உரிமை உண்டு என்று முக்காலத்தையும் தன்னுடைய சிந்தையாலும், செயலாலும், தன்னுடைய திட்டத்தாலும் கட்டித் தழுவுகின்ற உணர்வு ஒவ்வோர் இந்தியனுக்கும் ஏற்படுவதுதான், நாட்டின் ஒருமைப்பாட்டின் அடிப்படை.

**நாட்டுக்கு எல்லை, பாட்டிலே எல்லையற்ற நாட்டுப்பற்று:**

அந்த உணர்ச்சி பூர்வமான ஒருமைப் பாட்டிற்கு ஆதாரமாக ஒரு நாட்டிற்கு எல்லை வேண்டாமா? இந்திய நாட்டின் எல்லைகளை, பாரதியார் சந்தம் துள்ளுகின்ற நடையிலே சொல்லுகின்றார், சித்தரிக்கின்றார். நாட்டின் பெயரென்ன ?



# ஒருமைப்பாட்டுக்கு உருவம் கொடுத்த உயர் கவிஞர்

கா. திரவியம். ஐ.ஏ.எஸ்.,

'பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்—மிடிப்
பயங் கொல்லுவார், துயர்ப்பகை வெல்லுவார்

இந்த நாட்டின் பெயர், இந்த நாட்டின் பண்டைக் காலப் பெயர், இந்த நாட்டின் அரசியல் சாசனம் இட்ட பெயர், இந்த நாட்டின் பெயரெனறு உலகெங்கும் ஏற்றப்பட்டு-போற்றப்பட்டு வருகின்ற பெயர்—'பாரத தேசம்' அந்தப் பாரததேசத்திற்கு வடக்கே வெள்ளிப் பனிமலை ஓர் எல்லை. தெற்கே 'நீலத் திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் நித்தம் தவஞ் செய்யும் குமரி' எல்லை.

**பொதுவான பாரம்பரியப் பெருமை:**

இந்த எல்லைக்குள் அடங்கியது பாரத நாடு; எல்லை மட்டும்தான் நமக்குச் சொந்தமா? ஒரே பாரம்பரியம், ஒரு பொதுவான பாரம்பரியம், இந்த நாட்டுக்குச் சொந்தம். அந்தப் பொதுவான பாரம்பரியம் என்று, எவ்வாறு, உருவாகியது? நேற்று உருவானது அல்ல; இன்று உருவாகிக்கொண்டிருப்பதல்ல; ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக உருவான பாரம்பரியம். யாரால் உருவான பாரம்பரியம் ?

'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்து'— இந்நாட்டில் உருவாக்கிய பாரம்பரியம். முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்து உருவாக்கியது. அவர் வாழ்ந்தது மட்டுமா, அவர் வாழ்வின் பலன்களையும், அவர் வாழ்விலே கண்ட சிந்தனைகளின பலன்களையும், அவர்கள் சிந்தனைக்கு ஆதரவாக, அரணாக இருந்த செயல்களின் பலன்களையும், நாம் இப்பொழுது வரலாற்றுப் பூர்வமாக அனுபவித்து வருகின்றோம்.

'சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்ததும் இந்நாடே! இவ்வாறு சந்ததி சந்ததியாக, பரம்பரை பரம்பரையாக, முதிர்ந்த அறிவு பெற்று, ஆழ்ந்த அன்பு கொண்ட அணையாத அறவாழ்க்கையை ஒரு நெறியாகப் பின்பற்றி வந்த எங்கள் முன்னோர்கள் வாழ்ந்து வலுவூட்டி வளப்படுத்திய நாடு இந்த பாரத நாடு. முன்னோர்கள் என்றால் பெண்கள் மட்டும் அவர்களுக்கு உரிய பங்கையும், பொறுப்பையும் ஆற்றவில்லையா? பொது வாழ்வை ஆண்கள் உருவாக்கினார்கள்; அந்தப் பொது வாழ்வுக்கு ஆதாரமான இல்வாழ்க்கையை உருவாக்க மங்கையர்கள் இந்நாட்டை வளர்த்தார்கள். மங்கையர்கள் முயற்சி இவ்வாறு வீட்டிலும், நாட்டிலும், பெருமையும், நிறைவும் பொங்க ஆணும் பெண்ணும் சேர்ந்து பாடுபட்டு, அன்பு வழி நின்று அறவழி சென்று ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டு; வீட்டையும் நாட்டையும் காத்து உருவாக்கிய பாரம்பரியம் உங்களுக்குச் சொந்தம். எனக்குச் சொந்தம். அந்தப் பாரம்பரியம் நம் அனைவருக்கும் சொந்தமானதால்தான் நாட்டின் ஒருமைப்பாடு என்பது ஒரு கோஷம் மட்டுமல்ல, ஒரு சூத்திரம் மட்டுமல்ல, ஒரு சுலோகம் மட்டுமல்ல, அது நம் வாழ்வின் உயிர் மூச்சாகி விடுகிறது.

[1976ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து.]

# "பாரதி" என்னும் சிறப்பு



சுப்பையாவின் (பாரதியாரின் இயற்பெயர்) தந்தை சின்னசாமி ஐயர், இரெட்டப்ப பூபதியின் அவைக்களப் புலவருள் ஒருவராக அரண்மனையில் இருந்தார். தந்தையாருடன் சுப்பையாவும் சேர்ந்து அரண்மனைக்கு அடிக்கடி சென்று வந்தார்.

அரண்மனை போக வர இருந்த சுப்பையாவுக்கு நட்பு ஒன்று கிடைத்தது. அதே அரண்மனையில் சோமசுந்தரம் என்னும் பெயருடைய சிறுவன் ஒருவன் வளர்ந்து வந்ததையறிந்தார். அவன் சுப்பையாவை விட மூன்றாண்டுகள் வயதில் மூத்தவர் எனறாலும், அவரது அழகிய தோற்றம், படிப்பில் திறமை, ஒழுக்க வாழ்வு ஆகியவை சுப்பையாவைக் கவர்ந்தன.

ஒரு சமயம், யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ்ப் பெரும் புலவர் ஒருவர், திருநெல்வேலிக்கு வந்திருந்தார். சொற்பொழிவுகள் பல நிகழ்த்தினார். இறுதியில், ஒரு நாள், புலவர்கள் பலரையும் ஒருங்கே கூட்டி கவிதையில் தேர்வு ஒன்று வைப்பதாகக் கூறினார். அக்கூடத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை அறிய, சுப்பையாவும் சோமசுந்தரமும் சென்றிருந்தனர். யாழ்ப்பாணப் பெரும் புலவர், அத்தேர்வில் தமிழறிந்த எவரும் கலந்து கொள்ளலாம் என அறிவித்தார்.

சற்றடி ஒன்றைக் கொடுத்து, பொருளும் கூறி, கவிதை செய்யுமாறு அறிக்கை செய்யப்பட்டது. மாணவராக இருந்த சுப்பையாவும் சோமுவும் அக்கவிதைப் போட்டியில் கலந்து கொண்டனர். புலவர்களில் பலரும் கலந்து கொண்டனர். சில நிமிடங்களில், இம்மாணவர்கள் இருவரும் தத்தம் கவிதையை முடித்து யாழ்ப்பாணப் பெரும் புலவரிடம் கொடுத்தனர். ஏனைய புலவர்கள் பின்னரே கொடுத்தனர். கவிதைகள் பரிசீலனை செய்யப்பட்டன! சுப்பையா, சோமு ஆகிய இருவரின் கவிதைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டன. சுப்பையாவின் கவிதையில் கலைமகள் அருள் வெளிப்பட்டு நின்றது. அதைக் கண்ணுற்ற யாழ்ப்பாணப் பெரும் புலவர், இவ்விருவரையும் அழைத்து, 'பாரதி' எனனும் பட்டம் அளித்துச் சிறப்பித்தார். அன்று முதல் 'சுப்பிரமணிய பாரதி' 'சோமசுந்தர பாரதி' என இருவரும் அழைக்கப்பட்டனர்.

'பாரதியாரை' சுப்பையா எனற பெயரால் அழைப்பது படிப்படியாக நின்றுவிட்டது பிறகு அவர் 'பாரதியார்' என்ற பெயரால் அழைக்கப்பட்டார்!

தகவல் : குளச்சல் இப்ராகீம்

# பாட்டுப்புலவனின் நூல் முன்னுரைகள்

## ஸ்வதேச கீதங்கள்

"ஸ்வதேச கீதங்கள்'' என்னும் நூல் 1908-ல் முதன் முதல் வெளியாயிற்று. பின் வரும் ஸமர்ப்பணத்தோடும் முகவுரையோடும் கூடியது.

### ஸமர்ப்பணம்

ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவ ரூபம் காட்டி ஆத்துமநிலை விளக்கிய தொப்ப, எனக்குப் பாரத தேவியின் ஸம் பூர்ண ரூபத்தைக் காட்டி, ஸ்வதேச பக்தி யுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச்சிறு நூலை ஸமர்ப்பிக்கின் றேன்.


—ஆசிரியன்

### முகவுரை

ஒருமையும் யௌவனத் தன்மையும் பெற்று விளங்கும் பாரத தேவியின் சரணங் களிலே யான் பின்வரும் மலர்கள் கொண்டு சூட்டத் துணிந்தது எனக்குப் பிழையென்று தோன்றவில்லை. யான் சூட்டியிருக்கும் மலர்கள் மணமற்றன என்பதனை நன்கறி வேன். தேவலோகத்துப் பாரிஜாத மலர்கள் சூடத் தகுதிகொண்ட திருவடிகளுக்கு எனது மணமற்ற முருக்கம் பூக்கள் அணிக் குறைவை விளக்கும் என்பதையும் யான் தெரிந்துள் ளேன். ஆயினும் உள்ளன்பு மிகுதியாக இச் செய்கையிலே துணிவு கொண்டு விட்டேன். சாக்கியன் எறிந்த கற்களையும் சிவபிரான் மலர்களாகக் கருதி அங்கீகரிக்கவில்லையா ? அதனையொப்ப, எனது குணமற்ற பூக்களை யும் பாரத மாதா கருணையுடன் ஏற்றருளுக!

*மயிலாப்பூர்* **ஸி. சுப்ரமணிய பாரதி**
*1908 ஜனவரி 10.*

குறிப்பு : இந்தப் பாடல்களைப் பிர சுரிக்குமாறு என்னைத் தூண்டி, இவை வெளிப்படுவதில் மிகுந்த ஆவல் காட்டி உதவி களியற்றிய மித்திரர்களிடம் மிக்க நன்றி பாராட்டுகின்றேன்.




பாரதி இறந்த பின்பு வெளியான முதல் நூலான சுதேச கீதங்கள் முகப்பு (1922)

## பாஞ்சாலி சபதம்

பாஞ்சாலி சபதத்திற்குப் பாரதியாரின் ஸமர்ப்பணமும் முகவுரையும்

### ஸமர்ப்பணம்

தமிழ்மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும்
இயலுமாறு இனிப் பிறந்து காவியங்கள்
செய்யப் போகிற
வர கவிகளுக்கும்

அவர்களுக்குத் தக்கவாறு
கைங்கரியங்கள் செய்யப்போகிற

பிரபுக்களுக்கும்.

இந்நூலைப் பாதகாணிக்கையாகச்
செலுத்துகிறேன்.

—ஆசிரியன்

### முகவுரை

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினை யுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்களெல் லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைபடாமலும் நடத்துதல் வேண்டும்.

காரியம் மிகப் பெரிது; எனது திறமை சிறிது; ஆகையால் இதனை எழுதி வெளியிடுகின்றேன், பிறருக்கு ஆதர்சமாக அன்று, வழி காட்டியாக.

இந்நூலிடையே திருதராஷ்டிரனை உயர்ந்த குணங்களுடையவனாகவும் சூதில் விருப்பமில்லாதவனாகவும், துரியோதனனிடம் வெறுப்புள்ளவனாகவும் காட்டியிருக்கின்றேன். அவனும் மகனைப் போலவே துர்க்குணங்களுடையவன் என்று கருதுவோருமுளர். எனது சித்திரம் வியாசர் பாரதக் கருத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக இந்நூலை வியாச பாரதத்தின் மொழி பெயர்ப் பென்றே கருதிவிடலாம் அதாவது 'கற்பனை' திருஷ்டாந்தங்களில் எனது 'சொந்தச் சரக்கு' அதிகமில்லை; தமிழ் நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி.

தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தர வேண்டுமென்று கங்கணங்கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண்டினாளாதலின், இதன் நடை நம்மவர்க்குப் பிரியந் தருவதாகும் என்றே நம்புகிறேன்.

ஓம் வந்தே மாதரம்.

**ஸி. சுப்ரமணிய பாரதி**

# ஜன்ம பூமி

1909-ல் "ஜன்ம பூமி" (ஸ்வதேச கீதங்கள் இரண்டாம் பாகம்) வெளியிடப்பட்டது. அதிலுள்ள ஸமர்ப்பணமும் முகவுரையும் வருமாறு:

### ஸமர்ப்பணம்

எனக்கு ஒரு கடிகையிலே, மாதாவினது மெய்த்தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும், சொல்லாமலுணர்த்திய குருமணியும், பகவான் விவேகானந்தருடைய தர்ம புத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந்நூலை சமர்ப்பிக்கின்றேன.

**ஸி. சுப்ரமணிய பாரதி**

### முகவுரை

இனிய நிலவின் ஒளியால் விழுங்கப்பட்டு உலகம் அவாங்க்மனகோசரமாகிய ஸௌந்தர்யத்தைப் பெற்றிருக்கும் சமயத்தில் ஒவ்வொரு கவிஞனுடைய உள்ளமும் தன்னையறியாது குதூஹலமடைகின்றது. சூரியன் உதித்தவுடனே சேதனப் பிரகிருதி மட்டுமேயன்றி அசேதனப் பிரகிருதியும், புதிய ஜீவனையும் உற்சாகத்தையும் பெற்றுத் திகழ்கின்றது. இவற்றினை யொப்பவே, நாட்டில் ஓர் புதிய ஆதர்சம்—ஓர் கிளர்ச்சி—ஓர் தர்மம்—ஓர் மார்க்கம்-தோன்றுமேயானால், மேல் மக்களின் நெஞ்சமனைத்தும், இரவியை நோக்கித் திரும்பும் சூரியகாந்தி மலர்போல, அவ்வாதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன. சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில், சர்வ சுபுங்களுக்கும் மூலாதாரமாகிய ''தேச பக்தி'' என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறைவுடையவனாகிய யானும் தேவியினது கிருபையால் அப்புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாகச் சென்ற வருஷம் சில கவிதை மலர் புனைந்து மாதாவின் திருவடிக்கும் புனைந்தேன்.

நான் எதிர்பார்த்திராத வண்ணமாக மெய்த்தொண்டர்கள் பலர் ''இம்மலர்கள் மிக நல்லன'' என்று பாராட்டி மகிழ்ச்சியறிவித்தார்கள். மாதாவும் அதனை அங்கீகாரம் செய்து கொண்டாள். இதனால் துணிவு மிகுதியுறப் பெற்றேனாகி, மறுபடியும் தாயின் பதமலர்க்குச் சில புதியமலர்கள் கொணர்ந்திருக்கின்றேன். இவை மாதாவின் திருவுள்ளத்திற்கு மகிழ்ச்சி யளிக்குமென்றே நினைக்கின்றேன்;

'குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்'

எனபது வேதமாதலின்.

இங்ஙனம்,

**ஸி. சுப்ரமணிய பாரதி**

# கவிதைத் திறன்

## —டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்

சிறு பிராய முதற்கொண்டே இவருக்குச் செய்யுள் இயற்றும் பழக்கம் உண்டாயிற்று. அக்காலத்திலேயே தேசத்தின் நிலைமை இவருடைய மனத்திற் பதிந்தது. தெய்வத்தினிடத்திலும், தேசத்தினிடத்திலும், பாஷையினிடத்திலும் அன்பில்லாதவர்களைக்கண்டு இவர் மிக வருந்தினார். புதிய கருத்துக்களை மிக எளிய நடையில் அமைத்துப் பாடவேண்டுமென்ற உணர்ச்சி இவருக்கு வளர்ந்து கொண்டே வந்தது.

தேசத்தின் பெருமையை யாவரும் அறிந்து பாராட்டும்படியான பாட்டுக்களைப் பாட வேண்டுமென்ற ஊக்கம் இவருக்கு நிரம்ப இருந்தது. அதனால் இவர் பாடிய பாட்டுக்கள் மிகவும் எளிய நடையில் அமைந்து படிப்பவர்களைத் தம்பால் ஈடுபடுத்துகின்றன. இவர் உண்மையான தேசபக்தியுடன் பாடிய பாட்டுக்களாதலின் அவை இவருக்கு அழியாத பெருமையை உண்டாக்குகின்றன.

பாரதிய தேசீயப் பாட்டுக்களைப் பாடியதோடு வேறு பல துறைகளிலும் பாடியிருக்கிறார். இசைப் பாட்டுக்கள் பலவற்றைப் பாடியிருக்கிறார். சங்கீதத்திலும் பழக்கம் உடையவர்.

பாரதியார் தாம் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், ஜனங்களுக்கு நன்மை உண்டாக வேண்டுமென்ற கொள்கையை யுடையவர். தைரியமுடையவர், இவருடைய புகழ் தமிழ் நாட்டின் புகழாகும்.



# பாரதி நூல் அறுபது

## தொகுப்பு: சீனி விசுவநாதன்


| | புத்தகத்தின் பெயர் | பதிப்பாளர் (அ) பதிப்பாசிரியர் | முதற் பதிப்பு வெளியிடப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1 | ஸ்வதேச கீதங்கள்; முதற்பாகம் | பாரதியார் | 1908 |
| 2 | புதிய கட்சியின் கொள்கைகள் (திலகரின் பிரசங்கங்கள்; மொழி பெயர்ப்பு) | பாரதியார் | 1908 |
| 3 | எங்கள் காங்கிரஸ் யாத்திரை | பாரதியார் | 1908 |
| 4 | ஜன்மபூமி (ஸ்வதேசகீதங்கள் 2-ம் பாகம்) | பாரதியார் | 1909 |
| 5 | மாதாவாசகம் | பாரதியார் | 1910 |
| 6 | ஞானரதம் | பாரதியார் | 1910 |
| 7 | பாஞ்சாலி சபதம் (முதற் பாகம்) | பாரதியார் | 1912 |
| 8 | மாதாமணிவாசகம் | தென்னாப்பிரிக்காவில் வெளியீடு | 1914 |
| 9 | புதிய ஆத்திசூடி | பாரதியார் | 1914 |
| 10 | (பொன்வால்நரி) | பாரதியார் | 1914 |
| 11 | கண்ணன் பாட்டு | பரலி. சு. நெல்லையப்பர் | 1917 |
| 12 | நாட்டுப்பாட்டு | ,, | 1917 |
| 13 | பாப்பாப் பாட்டு | ,, | 1917 |
| 14 | முரசு | ,, | 1917 |
| 15 | மகாகவி சர் ரவீந்திரநாத தாகூர் அருளிய பஞ்ச வியாசங்கள் | சுதேசமித்திரன் புத்தகசாலை | 1918 |
| 16 | பாரத ஜனசபை; முதற்பாகம் (காங்கிரஸ் சரித்திரம்; மொழிபெயர்ப்பு) | ,, | 1919 |
| 17 | பாரத ஜனசபை; இரண்டாம் பாகம் | ,, | 1920 |
| 18 | கதாமாலிகா | ,, | 1920 |
| 19 | சுதேச கீதங்கள்-முதற்பாகம் | பாரதி ஆச்ரமம் | 1922 |
| 20 | சுதேசகீதங்கள்; இரண்டாம் பாகம் | ,, | 1922 |
| 21 | குயில்பாட்டு-கண்ணன் பாட்டு-பாரதி அறுபத்தாறு | பாரதி பிரசுராலயம் | 1923 |

| | | | |
|---|---|---|---|
| 22 | பாஞ்சாலி சபதம்; இருபாகங்களும் இணைந்தது | ,, | 1924 |
| 23 | பகவத் கீதை முன்னுரை | ,, | 1924—25 |
| 24 | பகவத் கீதை உரைவிளக்கம் | ,, | 1924—25 |
| 25 | சுதேச கீத சங்கிரஹம் | ,, | 1925 |
| 26 | சந்திரிகையின் கதை | ,, | 1925—26 |
| 27 | தராசு | பாரதி பிரசுராலயம் | 1928 |
| 28 | நவதந்திரக் கதைகள் | ,, | 1928 |
| 29 | வேதரிஷிகளின் கவிதை | ,, | 1928 |
| 30 | பதஞ்சலியோக ஸூத்ரம் | ,, | 1928 |
| 31 | விநாயகர் நான்மணிமாலை | ,, | 1929 |
| 32 | தேசீய கீதங்கள் | ,, | 1929 |
| 33 | தோத்திரப் பாடல்கள் | ,, | 1930 |
| 34 | வேதாந்தப் பாடல்கள் | ,, | 1930 |
| 35 | காட்சி | ,, | 1930 |
| 36 | சித்தக் கடல் | ,, | 1930 |
| 37 | பாரதிநூல்கள்-கட்டுரைகள் 1. தத்துவம் | ,, | 1935 |
| 38 | 2. மாதர் | ,, | 1930 |
| 39 | 3. கலைகள் | ,, | 1935 |
| 40 | 4. சமூகம் | ,, | 1935 |
| 41 | ஆசாபங்கம் (தாகூர் கதை மொழி பெயர்ப்பு) | கமல நிலையம் | 1937 |
| 42 | நஷ்டபூஷணம் | ,, | 1937 |
| 43 | கதைக்கொத்து | பாரதி பிரசுராலயம் | 1937 |
| 44 | Agni and other poems and translations | ,, | 1937 |
| 45 | Essays and other prose Fragments | ,, | 1937 |
| 46 | ஸ்வசரிதையும் பிறபாடல்களும் | ,, | 1938 |
| 47 | பத்திராதிபர் (தாகூர் கதை; மொழி பெயர்ப்பு) | கமலநிலையம் | 1939 |
| 48 | வேதரிஷிகளின் கவிதை தொடர்ச்சி | பாரதி பிரசுராலயம் | 1941 |
| 49 | பாரதி கீதத்திரட்டு (2ம் பதிப்பு) | ,, | ... |
| 50 | பாரதி மணிமலர் | ,, | 1948 |
| 51 | பாரதி தமிழ் | அமுதநிலையம் | 1953 |
| 52 | சின்னச் சங்கரன் கதை | பாரதி புத்தக நிலையம் | 1956 |
| 53 | தாகூர் சிறுகதைகள் (மொழி பெயர்ப்பு) | அமுத நிலையம் | 1958 |
| 54 | பாரதி புதையல்-முதல் தொகுதி | ,, | 1958 |
| 55 | பாரதி புதையல்-இரண்டாம் தொகுதி | ,, | 1959 |
| 56 | பாரதி புதையல்-மூன்றாம் தொகுதி | ,, | 1975 |
| 57 | பாரதி தரிசனம்-முதல் தொகுதி | நியூசென்சுரி ஹவுஸ் | 1975 |
| 58 | பாரதி தரிசனம்-இரண்டாம் தொகுதி | ,, | 1977 |
| 59 | சக்ரவர்த்தினி-கட்டுரைகள் | வானவில் பிரசுரம் | 1970 |
| 60 | மும்மணிகள் | ,, | 1979 |

**பின் குறிப்பு:**

கூடியவரை மகாகவி பாரதியாரே தமது நூல்களுக்குத் தலைப்பெயரிட்டு விட்டார்.

# பாரதியின் கடித முத்துக்கள்....



# கனவை நனவாக்க கவிதை துணைபுரியும்

பரலி சு. நெல்லையப்பர்

யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனி தாவ தெங்கும் காணோம்'

என்றும்,

'தே மதுரத் தமிழோசை உலக மெலாம் பரவும் வகை
செய்தல் வேண்டும்'

என்றும் பாடிய பாரதியார் பாடல்களின் பெருமையை இன்று பாரெல்லாம் அறிந்து போற்றத் தொடங்கியிருக்கிறது.

அடிமைப்பட்டுக்கிடந்த நாட்டுக்கு விடுதலை ஊக்கம் அளித்த தமது பாடல்களை லட்சக் கணக்காக அச்சிட்டு வெளியிட்டு, வாயுள்ள மக்களெல்லாம் பாடவேண்டுமென்றும், காதுள்ள மக்களெல்லாம் கேட்க வேண்டுமென்றும், கருத்துள்ள மக்களெல்லாம் சிந்திக்க வேண்டுமென்றும், பாரதியார் அந்நாளில் விரும்பினார். ஆனால் அவர்கள் கனவு நனவாக இத்தனை ஆண்டுகள் ஆயின. பழந்தமிழ் மக்களுக்கு மட்டுமன்றிப் பார் அனைத்துக்குமே பொதுவான பாரதியார் பாடல்கள் ஒரு சிலரின் தனியுடைமையாக இருந்த நிலை நீங்கி, சில ஆண்டுகளுக்கு முன் மக்களின் பொது உடைமையாக மாறியது. ஆனால் பெயரளவில் பொது உடைமையாக இருந்த பாரதியார் பாடல்கள் செயலளவில் அவ்வாறு மாறுவது எளிய வேலையல்ல. ருஷியாவிலும், அமெரிக்காவிலும் அரசாங்கத்தாரே தங்கள் நாட்டுச் சிறந்த இலக்கியங்களைக் கோடிக் கணக்காக அச்சிட்டு இலவசமாகவும், பரம ஏழைகளும் வாங்கக் கூடிய மிகக் குறைந்த விலைக்கும் கொடுத்து வருகிறார்கள். பழந்தமிழ் நாட்டிற்குப் புத்துயிரும் புது வாழ்வும் அளித்துவரும் பாரதியார் பாடல்களை நமது அரசாங்கத்தாரே அச்சிட்டு நாடெங்கும் பரப்ப வேண்டும் என்பது என் போன்றவர்கள் கருத்து. ஆனால் அதிகாரிகள் செய்ய முன்வராத பெரிய வேலையைப் பாரதி பக்தரும், எனது நண்பருமான வை. கோவிந்தன் செய்ய முன்வந்தமை பெரிதும் போற்றுதற்குரியது. என்போன்ற பாரதி நண்பர்களின் கனவு இன்று நிறைவேறி விட்டதை நினைத்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நாட்டில் உள்ள படித்தவர்கள்; ஆண் பெண்கள் அனைவரும் இந்த நூலை வாங்கிப் படித்துத் தாங்கள் புது வாழ்வு பெறுவதுடன் நாடெங்கும் மலர்ந்து வரும் புதுவாழ்வு பெருவாழ்வாகுமாறு அவர்கள் துணைபுரிதலும் வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

பாரதியார் தேசபக்தர் மட்டுமல்லர். அவர் சிறந்த தெய்வபக்தரும் ஆவார். அது பற்றியே தேசபக்தி ஒன்று மட்டுமே உடைய சாதாரண மக்கள் காண முடியாத அரிய உண்மைகளையெல்லாம் கண்டு அவற்றைப் பாடியும் எழுதியும் சென்றார். அதனால் அவர் ஒரு தீர்க்கதரிசி ஆவார். பூலோகத்தில் புதியதோர் சத்திய யுகம் தோன்றிக்கொண்டிருக்கிறதென்பதை அவர் பல இடங்களில் பாடியும் எழுதியும் இருக்கிறார்.

'வீழ்க கலியின் வலி யெல்லாம், கிருத யுகந்தான் மேவுகவே' என்றும்

''பொய்க்கும் கலியை நான் கொன்று
பூலோகத்தார் கண்முன்னே
மெய்க்கும் கிருத யுகத்தினையே கொணர்வேன்
தெய்வ விதியிஃதே!''

'கிருத யுகத்தைக் கேடின்றி நிறுத்த
விரதம் நான் கொண்டனன்'

என்றும் அவர் பாடியிருக்கிறார்.

''இன்று தேவர்களை அழைக்கிறோம். இந்த மண்ணுலகத்திலே மீண்டும் கிருத யுகத்தை நாட்டும் பொருட்டாக, அறிவீனம், அசுத்தம், வறுமை, சிறுமை, நோய், கொடுமை, பிரிவு, அநீதி, பொய் என்ற ராட்சஸக் கூட்டங்களை, அழித்து, மனித ஜாதிக்கு விடுதலை தரும் பொருட்டாக' என்று அவர் எழுயிருக்கிறார்.

அசத்தியமும் அதர்மமும் மிகுந்த கலி யுகம் ஒழிந்து புதியதோர் சத்திய யுகம்— கிருத யுகம் தோன்றிக் கொண்டிருக்கிறதென்பதை நாட்டு நடப்பையும் உலகப் போக்கையும் ஆழ்ந்து நோக்குவார் இன்று தெளிவாகக் காணலாம்.

தமிழ் ஜாதியைப் பற்றி பாரதியார் கூறும் ஓர் உறுதிமொழியை இறுதியாகக் கூறி இந்தச் சிறிய முன்னுரையை நான் முடிக்கிறேன்:

'இந்த நிமிஷத்தில் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நான் அறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் சத்தியம் இல்லை. நாளை வரப்போவது சத்தியம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பேரை மாற்றி அழையுங்கள்'.

இந்த வாக்கியங்களை பாரதியார் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் 1916-ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் மூன்றாந் தேதி 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் வெளியிட்டார். தமிழ் மொழி ஆட்சி மொழியாய் விட்டது இன்று. தமிழ் ஓசை இன்று உலகமெங்கும் கேட்கிறது. பூமிதேவியின் தலைப் பிள்ளையான தமிழன் வையகத்தில் மீண்டும் தலைமைப் பதவி வகிக்கப் போகிறான் என்பது பாரதியார் கருத்து. பாரதியார் கனவை நாம் நனவாக்க வேண்டும். அதற்கு அவரது பாடல்கள் அருந் துணை, பெருந்துணையாக விளங்கும்.

வாழ்க பாரதியார் நாமம். வாழ்க தமிழ் மொழி. வந்தே மாதரம்.

குரோம்பேட்டை
சென்னை
13-4-1957.

பரலி சு. நெல்லையப்பர்.

சக்தி காரியாலயம் வெளியிட்டுள்ள 'பாரதியார் கவிதைகள்' மலிவுப் பதிப்பிற்கு பரலி நெல்லையப்பர் முகவுரை!



# சங்கீத விஷயம்

## மகாகவி பாரதியார்

பொதுப் பள்ளிக்கூடத்தில் சங்கீதம் கற்றுக் கொடுக்க வேண்டும். இது மற்ற நாகரிக தேசங்களில் சாதாரணமாக நடந்து வருகிறது. உயிரிலே பாதி சங்கீதம். சாஸ்திரத்தை யாருமே பேணாமலிருந்தால், பாடகர்கூட அதைக் கைவிட்டு விடுவார்கள். ஆதலால் 'சுதேசமித்திரன்' (விசேஷ அனுபந்தம்) பத்திரிகையில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் சங்கீதம் சீர்திருந்த வேண்டுமென்ற கருத்துடன் எழுதிய லிகிதத்தை படித்தபோது எனக்குச் சந்தோஷமுண்டாயிற்று.

இங்கிலிஷ் பாஷையிலே ஒரு பெரிய கவிராயன் சங்கீத ஞானமில்லாதவரைக் கள்ளரென்றும் குறும்பரென்றும் சொல்லிப் பழிக்கிறான். பாட்டு சகலருக்கும் நல்லது. தொண்டையும் எல்லோருக்கும் நல்ல தொண்டைதானென்பது என் மதம். கூச்சத்தாலும் பழக்கக் குறைவாலும் பலர் தமக்கு நல்ல குரல் கிடையாதென்று வீணே நினைத்துக் கொள்கிறார்கள்.

பாட்டுக் கற்க விரும்புவோர் காலையில் சூரியனுக்கு முந்தியே எழுந்து பச்சைத் தண்ணீரிலே குளித்துவிட்டுக் கூடியவரை சுருதியும் லயமும் தவறாதபடி சரளி வரிசை முதலியன பழக வேண்டும். உச்ச ஸ்தாயிதான் எப்போதும் நல்லது. உடம்பை நிமிர்த்து முகத்தை நேரே நிறுத்தி, முகத்திலும் வாயிலும் கோணல் திருகலில்லாதபடி வாயை ஆவென்று சிங்கம் போலே திறந்து பாட வேண்டும். தொண்டையிலே கரகரப்பிருந்தால் வெறு மிளகைத் தின்னவேண்டும். கற்கண்டு சேர்ப்பது நல்லதில்லை.

பாட்டுக் கச்சேரி நடத்தும்போது, நடுவிலே மற்ற வாத்தியக்காரரை வாசிக்கச் சொல்லிவிட்டுப் பாடகர் வெறுமே இருப்பதும் தெம்மாங்கு முதலான வேடிக்கைப் பாட்டுக்கள் பாடுவதும் தமக்கு ரசப்படவில்லையென்று ஸ்ரீநிவாசய்யங்கார் சொல்லுகிறார். அதை நான் ஒரு பகுதி ஆட்சேபிக்கிறேன். வீணை, குழல் முதலிய இசைக் கருவிகளும், மத்தளம் முதலிய தாளக் கருவிகளும் வாய்ப்பாட்டின் உதவியில்லாமல் தனியே இன்பந் தருகின்றன.

வாத்யம் எட்டாத ஸ்வரத்தைத்தொடப் போய்க் கஷ்டப்படாது. தொண்டையிலே கரகரப்பும், அடைப்பும் இருக்கும்போது கச்சேரி நடத்த வராது. சரியானபடி சுருதி சேர்ந்த பிறகுதான் தொழில் செய்யத் தொடங்கும்.

வீணையும் குழலும் பறையும் வாய்ப்பாட்டில்லாமல் தனியே ஒலிப்பது பழைய நாளிலும் உண்டு. கண்ணன் குழலுக்கு இடைப்பெண் ஒத்துப் பாடியதும். எம்பெருமான் தனியே இசைப்பதுமுண்டு. தெம்மாங்கு முதலியன ஹாஸ்ய ரசத்தை உடையவை. அவற்றை முழுதும் நிறுத்திவிடக் கூடாது.

1928ல் பாரதி பிரசுராலயம் வெளியிட்ட தராசு நூல் முகப்பு



பாரதி நூல்கள் பகுதி கக.

தராசு

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி


பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

பிரபவஹு

முதற் பதிப்பு]

[விலை அணா ௪

பாரதியாரின் மனைவி 1941ல் எழுதிய பாரதியார் சரிதம் முதல் பதிப்பு முகப்பு




ஸ்ரீ செல்லம்மா பாரதி

பாரதியார் சரித்திரம்

(1882 - 1921)

"ஷேக்ஸ்பியர், கம்பன், வர்கிலியன், காளிதாஸன் என்னும் கவிமன்னர்களே. எனினும் கவிபுலமை அவர்கள் சிந்தித்தனர். ஆனால் பாரதியாரின் கவியோ புதிய தமிழ் சகாப்தத்தை, புதிய ஜாதியை, புதிய நாட்டை அமைத்தது. தமிழில் புது மறைகள் பாடியது. பாரதியார் மறைந்து போகவில்லை. இதோ நம்முன், நம்முள், நம்முயிரில் நெஞ்சை அள்ளிக் கலந்தவாறு விளங்குகிறார். தமிழர் உள்ளத்தில் ஆவேச வெள்ளமாகப் பொங்கும் இந்த அமரக் கவியின் வரலாற்றை உள்ளவாறு அனைவரும் அறியும் வண்ணம் ஆக்கி அளித்துள்ளார் அன்னார் மனைவியார்"

முதல் முறையாக விரிவான முறையில் வெளியாகிய பாரதி வாழ்க்கை வரலாற்று நூல் (ஆசிரியர் சுத்தானந்த பாரதி-1932)



சுப்ரமண்ய பாரதியார்

அல்லது

தமிழ் நாட்டின் தேசிய கவி.

அரிய ஆராய்ச்சி நூல்.

திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள்

எழுதியது.

பதிப்பாசிரியர்:
திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள்,
ஆசிரியர், "பாரதி,"
உத்தமபாளையம்.

1932

ஆனால் ஒரே மெட்டை வளைத்து வளைத்து போன இடமெல்லாம் சொல்லிப் பயனில்லை. தமிழ் பிழையாகவும், பொருள் ரஸமில்லாமலும் பாட்டுக்கள் இருந்தால் அவற்றை மன்றிலே கொண்டு வருதல் நியாயமில்லை.

இருந்தாலும் மத்தளக்காரனுக்குப் பாட்டுக்காரன் பயந்து கட்டுப்பட்டு நடக்கும் விபரீதம் சில இடங்களிலே காணப்படுவதைக் கண்டனை செய்து ஸ்ரீநிவாசய்யங்கார் சொல்லும் வார்த்தை ஒப்புக் கொள்ளத்தக்கது.

ஏனென்றால், பாட்டுக்காரன் தனது பாட்டுக்களுக்குத் தவறாமல் தாளம்போட்டு வர வேண்டும். இவ்வளவு தாள ஞானம் இருந்தால், பாடகனுக்குப் போதும். அதிகமிருந்தால் மிச்சம். இந்த விஷயந் தெரியாமல் மத்தளக் காரனுக்குப் பாட்டுக்காரன் பயப்படுவது மிகவும் வேடிக்கை.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் ராகப் பழக்கம், வர்ணங்கள், கீர்த்தனங்கள் முதலிய விஷயங்களைப் பற்றி எழுதியிருப்பதெல்லாம் (பெரும்பகுதி) கேட்டவுடன் நியாயமென்று கொள்ளத்தக்கது. கீர்த்தனங்கள் பழகுவது மாத்திரம் அவரவரிஷ்டப்படி போக வேண்டும். எது எப்படியாயினும் யாராவதொரு வித்வான் இந்தத் தமிழ்நாட்டுக்குப் புதிய கீர்த்தனங்கள் ஏற்படுத்தும் வழிகாட்டிக் கொடுத்தால், ஆயிரம் பேர் அதைப் பின்பற்றி மேன்மை பெறுவார்கள்.

இங்குள்ள ஜந்துக்களிலே மனிதருக்கும் பறவைகளுக்குந்தான் பாடத் தெரியும். மற்ற மிருகங்களுக்குப் பாட்டு வராது. பறவைகள் வானத்திலே பறக்கும் வழக்கமிருப்பதால், அவற்றின் மனநிலை சங்கீதத்திற்கு இசைகின்றது போலும்! மனிதன் உடம்பினாலே பறக்காவிட்டாலும் உள்ளத்தைத் திசைவெளியிலே பறக்கும்படி செய்கிறான். அப்போது, இயற்கையிலே பாட்டுத் தோன்றுகிறது. ரசங்கள் ஒன்பது :—

(1) வீரம், (2) ரௌத்ரம் (கோபம்), (3) அற்புதம் (வியப்பு), (4) சாந்தம் (நடுவு நிலை), (5) பயாநகம் (அச்சம்), (6) பீபத்ஸம் (வெறுப்பு), (7) ஹாஸ்யம் (நகை), (8) கருணை சோகம் (துயரம்)இதை அவலம் என்பது பழைய தமிழ் வழக்கு. (9) சிருங்காரம் (காமம்).

வெளிப் பொருள்களைக் காணும்போது அல்லது நினைக்கும்போது மனிதனுடைய உள்ளத்திலே இந்த ஒன்பது சுவைகளில் ஏதேனும் ஒன்று தோன்றும். இரண்டு மூன்று கலந்தும் தோன்றக்கூடும். ரஸ உணர்ச்சியிலே உள்ளத்தை முழுதும் ஈடுபடுத்தக்கூடிய சிலர் கவிதை, பாட்டு, சித்திரம் முதலிய தெய்வக் கலைகளிலே சிறப்படைகிறார்கள். ரஸ உணர்ச்சி இல்லாவிடின் இக்கலைகள் நசித்துப் போகும்.


பிறர் துன்பத்தைக் காணும்போது தனது துன்பம் போல் எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும், பிற துன்பத்தைக் கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்துக் கவிதை செய்யப் பழகுவராயின், முந்தியவன் உண்மையான கவிதையை எழுதுவான்; பிந்தியவன் பதங்களைப் பின்னுவான்; இவனுடைய தொழிலிலே கவிதையிராது. இப்படியேதான் ஒவ்வொன்றிலும்.

ரச ஞானமில்லாதபடி பல்லவிகளும் கீர்த்தனங்களும் பாடுவோர் சங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள். இக்காலத்து சங்கீத வித்வான்களிலே பலர் 'சங்கீதத்திற்கு நவரசங்களே உயிர்' என்பதை அறியாதவர்.

முத்துசாமி தீஷிதர், தியாகையர், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் முதலியவர்களின் கீர்த்தனங்களிலே சிலவற்றை அதிக சங்கதிகளுடன் பாடுவோரே 'முதல்தர' வித்வான்கள். இந்தக் கீர்த்தனங்களெல்லாம் சம்ஸ்கிருதம் அல்லது தெலுங்கு பாஷையில் இருக்கின்றன. ஆகவே, முக்காலே மும்மாகாணி வித்வான்களுக்கு இந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக்களையும் பதங்களையும் கொலை செய்தும், விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவனுக்கு 'ரசம்' தெரிய நியாயம் இல்லை.

நானும் பிறந்தது முதல் இன்றுவரை பார்த்துக் கொண்டே வருகிறேன். பாட்டுக் கச்சேரி தொடங்குகிறது. வித்வான் 'வாதாபி கணபதிம்' என்று ஆரம்பஞ் செய்கிறார். 'ராமாநீ சமான மெவரு' 'மரியாதை காதுரா' வரமுலொ சகி'... ஐயையோ, ஐயையோ ஒரே கதை.

## பாரதியின் கையெழுத்து



எந்த ஜில்லாவுக்குப் போ, எந்த கிராமத்திற்குப் போ, எந்த 'வித்வான்' வந்தாலும் இதே கதைதான். தமிழ்நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால் திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுகளை வருஷக் கணக்காகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தோற்காது உள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

'பூர்வீக மஹான்களுடைய பாட்டுக்களை மறந்து போய்விட வேண்டும்' என்பது என்னுடைய கட்சியன்று. அவற்றை அர்த்தத்துடன் பாட வேண்டும். பதங்களைப் பிழையாக உச்சரிக்கக்கூடாது. பதங்களை வாய் விட்டுத் தெளிவாகச் சொல்ல வேண்டும். விழுங்கிவிடக் கூடாது. பத்து முப்பது கீர்த்தனங்களையே ஓயாமற் பாடி சங்கீதத்தை ஒரு தொல்லையாகச் செய்துவிடக் கூடாது.

புதிய புதிய கீர்த்தனங்களை வெளியே கொண்டுவர வேண்டும். இப்போது சங்கீத வித்வான்களிலே தலைமைப்பட்டிருப்போர், தமிழிலே புதிய மெட்டுக்களில் கீர்த்தனங்கள் செய்ய முயலவேண்டும். நவரசங்களின் தன்மைகளையும், இன்னின்ன ராகங்களை இன்னின்ன விதங்களிலே பாடினால், இன்னின்ன ரசங்கள் உண்டாகும் என்பதையும் கற்றுத் தெரிந்து கொள்ளுதல் அவசியம்.

[ஆதாரம்: 'பாரதி தமிழ்']

# அற்புதம் விளைக்கும் கவிதை

பண்டைப் பழம் பெருமையோடு நம் புது வாழ்வை இணைக்க முயன்ற பெரியார் இருவருள் பாரதியார் ஒருவராவர். பாரதி யார் ஓர் உண்மையான தமிழ்க்கவி. 'காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று' என்னும் தமிழ்நாட்டுப் பழமொழியின் தத்துவத்தை நன்குணர்ந்த வர், பாரதியார். 'உள்ளத்தில் உண்மை யொளி உண்டாயின், வாக்கினிலே ஒளியுண் டாகும்' என்பது இக் கவி தம் சொந்த அனு பவத்தால் கண்டறிந்த உண்மையேயாகும். 'தமிழர் மறந்தாலும் தமிழ் மறவாத இப் புலவர் பெருமான்' தமிழ்நாட்டு ரவீந்திர ராவர். இவர் வங்க நாட்டுப் புலவர் திலகம் போல் ஆழ்ந்தகன்ற பாண்டித்யம் வாய்ந்தவ ரல்லர். எனினும், கவிதையழகில் இவரது அருட்கவிகள் ரவீந்திரரின் பாடல்களுக்குச் சிறிதும் இளைத்துக் காணப்படுவன அல்ல.' 'பண்டொரு நாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகருணனும்;தோற்றம் உனக்கே பெருந் துயில்தான் தந்தானோ' என்று ஆண்டாள் அருளியவண்ணம், பேருறக்கத்தில் கும்ப கருணனையும் வென்று பேச்சு மூச்சின்றிஅசை யாது கிடந்த தமிழகத்தைத் தம் கவி முழக் கத்தால் தட்டியெழுப்பிய பெருமை நம் செந் தமிழ்க் கவிச்சிங்கமான பாரதிக்கே யுரியது. இத்தகைய கவிச்சிங்கத்தை இனிது போற் றாது, கொன்ற 'பெருமை'யும் தமிழ் நாட் டிற்கேயுரியதாகும். பாரதியார் பாடல் களில் சில, 'கல்லைப் பிசைந்து கனியாக்கி' தேசபக்தி வெள்ளத்தே அழுத்தும் ஆற்றல் வாய்ந்தன. சில வற்றியுலர்ந்த தோல்களுக்கும் என்புக்கூடுகளுக்கும் இன்னுயிர் அளிப்பன. இன்னும் சில வறண்டயர்ந்த இதயங்களுக்கு உயர்வெனும் அமுதம் ஊட்டி, பாலைவனமும் பசுஞ்சுடர்ச் சோலையாகப் பொலியும் வண் ணம் அற்புதம் விளைப்பன.

**ஆதாரம்: 'குமரன்' வார இதழ்**
27-9-1928

— சொ.முருகப்பா



துணைவி செல்லம்மாளுடன் பாரதியார்

# துன்பம் போக்கும் தூய கவிதை

கலைமகளுடைய அருளினைப் பெற்ற உண்மைக் கவிவாணர் பாடிய பாடல்கள் அனைத்தும் நலனிறைந்த நீர்மையனவேயாம். தமிழ்நாடு செய்த பெருந்தவப் பயனாக உதித்த சுப்பிரமண்ய பாரதியார் இளவயதிலே வாணியின் அநுக்கிரகத்தைப் பெற்றவராய் விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையுங்கொண்ட இன்றமிழ்ப் பாடல்கள் பலவற்றை உலகுக்கு அளித்தார். இவருடைய செய்யுட்களை ஆராய்ந்து கற்ற ஆன்றோர் பலர் இவரை உலகத்திலே சிறந்து விளங்குங் கவிவாணருள் ஒருவராக மதிக்கின்றனர். கவிச்சுவை மானிடர்க்கு இன்பத்தை விளைக்குங் கால வெல்லை வரையும் இனிமையும் எழிலும் ததும்பிவிளங்கும் பாரதியார் பாடல்கள் போற் றப்படுவது நிச்சயம். துன்பத்திலே படிந்து வாழ்க்கையில் வெறுப்புற்றோர்க்குப் பாரதி யாருடைய சுவை நிறைந்த இன்றமிழ்ச் செய் யுட்களைக் காட்டிலும் சிறந்த மருந்து வேறில்லையென்னலாம்.

தம்முடைய தேசத்தாருக்குத் தேசிய உணர்ச்சியை உண்டுபண்ணும் நோக்கமாக வீரமுரசம் போன்ற தேசியப் பாடல்களை மாத்திரமே பாரதியார் பாடினாரென அனே கர் கருதுகின்றார்கள். உண்மையை ஆராய்ந்து பார்க்குமிடத்து பாரதியார் எழுதிய தேசிய பாடல்கள் மொத்தச் செய்யுட்டொகையில் ஏழிலொன்றுகூட இருக்காது. பாரதியாரின் உண்மைப் பெருமையைக் காண விரும்புவோர் அவருடைய தேசியப் பாடல்களை மாத்திரம் வாசித்து மகிழ்ச்சியடைவதோடு நில்லாது அவரெழுதிய கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு காட்சி, வேதாந்தப் பாடல்கள், பாஞ்சாலி சபதம்-என்னும் இவற்றையும் கருதிப்படிக்க வேண்டும். தமிழ்மொழியறியாத மாந்தர் பொருட்டாகப் பாரதியாருடைய இன்னிசைப் பாடல்களைப் பிறமொழியிற் பெயர்த் தெழுதி உலகெங்கணும் பரப்புதல் வேண்டும்.

**(ஆதாரம்: குமரி மலர், ஆகஸ்ட் 1981)**

— விபுலானந்த அடிகள்

# யுகக் கவிஞன் பாரதி!

'சக்தி காரியாலயம் வெளியிட்டுள்ள 'பாரதியார் கவிதைகள்' மலிவுப் பதிப்பின் முகவுரை!

பாரதி நூல்கள் எதற்குப் புதியதோர் பதிப்பு வந்தாலும் நாம் மனமகிழ்வோம். அதிலும் பாரதி கவிதைகளில் கிடைத்தவை களையெல்லாம் தொகுத்து ஒரே பெரு நூலாக்கி நம்ப முடியாத மலிவு விலையில் ஒரு பிரசுரகர்த்தர் தருகிறாரென்றால், இது சிறந்த பாரதி சேவை என்று உளம் பூரிக்கா மல் வேறென்ன செய்வோம்?

பாரதி உயிரோடிருந்த காலத்தில், தமது நூல்களைத் தாமே ஒழுங்கு செய்து பதிப் பித்து வெளியிட விரும்பினார். தமது கவிதை களையும் வசன நூல்களையும் நாற்பது பிரிவு களாக்கி, ஒவ்வொரு பிரிவிலும் 10,000 பிரதி அச்சடித்து, கவிதைப் பிரிவுகளைப் பிரிவு நாலணா வீதமும் வசனப் பிரிவுகளைப்பிரிவு எட்டணா வீதமும் விற்கத் திட்டமிட்டார். ''மண்ணெண்ணெய் தீப்பெட்டியிலும் சாதா ரணமாக''த் தம் நூல்கள் எங்கும் பரவ வேண்டுமென்று துடித்தார்.

1920-21-ல் போடப் பெற்ற இத்திட்டம் நிறைவேறவில்லை.

முப்பத்தாறு ஆண்டுகளுக்குப் பின், இன்று, பாரதி கூடக் கருதியிராத அளவு மலி வான விலையில், பாரதி நினைத்ததைவிட அதிகப் பக்கங்கள் கொண்டு பாரதி கவிதைத் தொகுதியின் பதிப்பொன்று வெளியாகிறது. புத்தக வெளியீட்டுத் துறையில் பல சாதனை களை நிகழ்த்தியுள்ள சக்தி காரியாலய அதிபர் ஸ்ரீவை. கோவிந்தனே இந்தச் சாதனையை யும் நிகழ்த்தி வைக்க முன் வந்துள்ளார். இதில் வியப்பேதுமில்லை.

புதிய பாரதத்தை சிருஷ்டித்து, உலகில் கலி ஒழித்துக் கிருதயுகம் கொண்டு நிறுத்த விரும்பினான் யுகக் கவிஞன் பாரதி. கவிதை யால் புதுயுகம் படைப்போமென்ற துணிவு அவனுக்கிருந்தது. அந்தத் துணிவு வெறியில் மூண்ட கவிதைகள் பன்றிப் போத்தையும் சிங்க ஏறாக்கி, விந்தை தோன்றிட, இந் நாட்டோர் கீர்த்தியெங்கும் ஓங்கச் செய்யும் திறன்கொண்டு விளங்குகின்றன. இக் கவிதைகள் ஆயிரக் கணக்கில், பல்லாயிரக் கணக்கில் அச்சானால் கூடப் போதாது. பாரதி நூல் இல்லாத இல்லம் இல்லையென லட்சக் கணக்கில் அச்சாக வேண்டும். பாரதி யின் கருத்துக்கள் வீடுதோறும் இவ்வாறு பரவுமேயானால் நம்மைப் பீடித்த பற்பல இன்னல்கள் ஒழிந்துபோம். நம் முன் கிருத யுகம் கண்டு, நந் தமிழ் நாட்டிலும் உலகிலும் கிருதயுகம் மேவச் செய்வோம்.

பாரதி நிலையம்
தி. நகர்,
சென்னை—17.
2-4-1957

**ரா. அ. பத்மநாபன்.**

## எனது குருவை இழந்தேன்...

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு 1 மணிக்கு எனது குருவாகிய ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியார் இம்மண்ணுலகைவிட்டு, விண்ணுலக மடைந்தார் என்ற துக்கச் செய்தியைக் கேட்டு ஆற்றொணாத் துயரடைந்தேன். அவர் புதுச் சேரியிலிருந்த காலத்தில் 'ஜாதி வித்தியாச' மென்னும் தொத்து வியாதியை இந்தியாவி லிருந்து ஓட்டினால்தான் நம் பாரத மாதா விடுதலை பெறுவாள் என்று என்னிடம் அடிக்கடி சொல்லி போதிப்பார். அவர் கவி சிரேஷ்டர் மாத்திரமல்ல. வேத வேதாங்க வேதாந்தி சாஸ்திரார்திகளிலும் நிகரில்லா பாண்டித்திய முள்ளவர். இவர் தம்முடைய சக்தி முழுவதை யும் மத விஷயங்களிலும், ராஜீய விஷயங் களிலும், ஜாதி விஷயங்களிலுமே உபயோகப் படுத்தி வந்தார். காளி தேவியின் சுய ரூபத்தை அவர் கண்ணால் பார்த்ததாகவும் சொல்லி யிருக்கிறார். அவர் பயமென்பதே கிஞ்சிற்று மில்லாத தீரபுருஷரென்றும், பேசும் திறமை உள்ளவர்களுள் சிறந்தவரென்றும், ராஜதந்திரி யெனவும் இப்படிப் பல விதங்களில் சிறந்த புகழ் பெற்ற இப்புண்ணிய புருஷர் நம்மெல்லோ ரையும் விட்டுப் பிரிந்து சென்றதானது பாரதப் புத்திரர்கள் எல்லோரையும் துக்கக் கடலில் ஆழ்த்தியதற்கு எம்மாத்திரமும் தாங்கமுடிய வில்லை. பகவத்கீதையில் பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு ஆத்மாவுக்கு சாவு இல்லை என்று சொல்லியிருப்பது போல, எனது குரு வாகிய ஸ்ரீமான் பாரதியார் சரீரம் மறைந்து போனாலும், அவருடைய ஆத்மாவானது நம் மையே சுற்றிக் கொண்டே இருக்கும். அவரைப் பிரிந்து தவிக்கும் அவரது மனைவியாருக்கும், இரு குழந்தைகளுக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவிப்பதாக சீஷன் ஸ்ரீமான். ரா. கனகலிங்கம் எமக்கு எழுதுகிறார்.

(சுதேசமித்திரன் 1921 செப்டம்பர் 14ல் வெளி யானது)

* * * * * *


(ரா. கனகலிங்கம் புதுவையில் கவி பாரதியாருடன் நெருங்கிப் பழகிய அரிசன மாணவன். இவருக்குத்தான் கவி பாரதியார் புரட்சி முறையில் பூணூல் போட்டு பிராம்மண னாக்கினார்.)

**தொகுப்பு: ரகமி**


















# பாரதியின் திருவடிகள் பதிந்துயர்ந்த இருப்பிடங்கள்







# மகாகவியின் நண்பர்கள்



குவளைக் கண்ணன் என்று அழைக்கப்பட்ட குவளைக் கிருஷ்ண மாச்சாரியார்.




பாரதி நூலை முதன்முதலில் பதிப்பித்தவரும் அவரால் தம்பி என்று அன்புடன் அழைக்கப்பட்டவருமான பரலி சு. நெல்லையப்பர்.



வ.வே.சு. ஐயர்




பாரதியாரின் சீடர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்



நீலகண்ட பிரமச்சாரி



சுப்பிரமணிய சிவா.



பாரதியாரால் பூணூல் அணிவிக்கப்பட்ட ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த கனகலிங்கம்.



மண்டையம் சீனிவாசாச்சாரியார்.




பாரதியார் நடத்திய ஏடுகளில் சில...



எட்டையபுரம் 'பாரதி மணிமண்டபம்'

# பாரதியின் பெருந்தன்மை

*1920-ம் வருஷம் 'சுதேசமித்திர'னில்* 'ரெயில்வே ஸ்தானம்' என்றொரு கதையை எழுதினார் பாரதி. ஒருவன் பல மாதரை மணம் புரிந்து கொண்டால், அதனின்றும் அவனுக்கு துன்பம்தான் விளையும் என்பதும், விவாகத்தில் ஒருவன் இன்பம் காண வேண்டி னால், அவன் ஒருத்தியை மணந்து கொண்டு, அவளிடம் மாறாத, தீராத உண்மைக்காதல் செலுத்துவதே உபாயமாகுமென்பதும் மேற் படி கதையினால் குறிப்பிடப்படும் உண்மை களாகும்.

இந்த உண்மைகளை விளக்கும் பொருட் டாக எழுந்த கதையில், முகம்மதியப் பிரபு ஒருவர் சகோதரமான மூன்று பெண்களை மணம் புரிந்து கொண்டதாக எழுதிவிட்டார்.


மேற்படி கதையைப் படித்த பாரதியா ரின் முகம்மதிய நண்பரொருவர் அவரைச் சந்தித்து, ''தங்கள் கதையில் ஒரு பிழை இருக்கிறது. ஒரு முகம்மதிய பிரபு மூன்று சகோதரிகளை மணம் செய்ததாக எழுதி யிருக்கிறீர்கள். அப்படி சகோதரமான மூன்று பெண்களை மணம் புரிந்து கொள்ளுதல் முகம் மதிய சாஸ்திரப்படி 'ஹராம்' (பாதகம்)ஆகக் கருதப்படுகிறது. தன் மனைவி உயிருடனி ருக்கையில், அவளுடன் பிறந்த மற்ற ஸ்தீரியை ஒரு முஸ்லீம் மணம் புரிந்து கொள் ளக்கூடாது என்பதே எங்களுடைய சாஸ் திரங்களின் கொள்கை' என்று குறிப்பிட்டார்.

முகம்மதிய நண்பரின் விளக்கத்தைக் கேட்ட பாரதி 'சரிதான் அந்த விஷயம் எனக்குத் தெரியாது. மனைவியொருத்தி யின் சகோதரிகளை மணம் புரியும் வழக் கம் ஹிந்துக்களுக்குள்ளே உண்டாதலால், அதுபோல முகம்மதியர்களுக்குள்ளேயே இருக்கலாமென்று நினைத்து அங்ஙனம் தவ றாக எழுதி விட்டேன். எனவே அந்தக் கதாநாயகனாகிய முகம்மதியப் பிரபுவுக்கு அவனுடைய சிற்றப்பன்தன் மூன்று குமாரத்தி களையும் மணம்புரிவித்தானென்பதை மாற்றி தன்னினத்தைச் சேர்ந்த மூன்று பெண்களை மணம் புரிவித்தானென்று திருத்தி வாசிக்கும் படி 'சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதி விடுகிறேன்' என்று பதிலும் சொல்லிவிட்டார்.

நண்பரிடம் கொடுத்த வாக்குப்படி பாரதி ''சுதேசமித்திரன்'' பத்திரிகையில் வெளியிட்ட திருத்தப்பகுதி வருமாறு:

''ரெயில்வே ஸ்தானம்'' என்ற கதையில் நான் மேலே கூறிய சாதாரணத் தவறு புக விட்டது பற்றி பத்திராதிபரும், பத்திரிகை படிப்போரும் என்னைப்பொறுத் துக் கொள்ளும்படி வேண்டுகிறேன். உலகமெல்லாம் மாதர்களுக்கு நியாயம் செய்ய வேண்டுமென்ற கிளர்ச்சி நடப்பதை அனுசரித்து, முஸ்லீம்களும் ஏகபத்தினி விரதம், பெண் விடுதலை, ஆண்—பெண் சமத்துவம் என்ற கொள்கைகளைப் பற்றி மேன்மை அடைய வேண்டுமென்பதே என் கருத்து. இந்தக் கருத்து நிறைவேறும் படி பரமாத்மாவான அல்லா ஹுத்த ஆலா அருள் புரிவாராக.''

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

**டான்சியின் தயாரிப்புகளில் சில:**

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

*(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)*

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR



# பாரதி-யார்?

பொய்க்குங் கலியைக் கொன்று மெய்க்கும கிருத யுகத்தைப் படைக்க—பண்டைச் சிறுமைகளைப் போக்கிட—புதியஞானம் புதியநெறி, புதிய வாழ்க்கை இவை யாவும் தழைத்தோங்கிட—நேரமெல் லாம் தமிழ்க்கவி பாடிய சக்திக்கவிஞர்.

பக்தியுடன்தொழுது, மாநிலமாந்தர் மனம் வெளுக்க வழிதேடி, தமக்கு உண்மை யென்று தெரிந்ததை நாட்டு மக்களுக்கு உரைத்த உண்மைக் கவிஞர்.

''வந்தேமாதரம் என்போம்; எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்'' என்று செவியினிக்கத் தமிழிலே பாடி தேசிய யத்தை வளர்த்த பாரதக் கவிஞர்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற உயர் ஞானத்தை நாளெலாம் உணர்த்திப் பாடிய உயர்கவிஞர்.

'நீணிலம் வாழ்பவரெல்லாம் நிகரென்று' முரசு கொட்டிய உலக மகாகவிஞர்

'குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு மேன்மையுறக் குடிமை நீதி' என்று சமதர்மம் போதித்த புத்துலகக் கவிஞர்

## கவிஞருக்கு ஞாபகச் சின்னம்—

**பாரதியார் திருவாக்கு:**

தமிழ்நாட்டு வீரருக்கும் கவிகளுக்குப் லோகோபகாரிகளுக்கும் இதுவரை எவ்வித மான திருவிழாவையும் காணவில்லை. பூர்வீக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமான பக்தி யுடன் வளர்க்காத நாட்டில் புதிய மகான்கள் பிறக்க வழியில்லை. தப்பித் தவறி ஓரிருவர் தோன்றினாலும் அவர்களுக்குத் தக்க மதிப்பு இராது. பண்டைக் காலத்துச் சக்தி மான் களை வியப்பதும், அவர்களுடையபெருமையை உலகமறிய முழக்குவதும், கூடியவரை பின் பற்ற முயல்வதுமாகிய பழக்கமே இல்லாத ஜனங்கள் புதிய சக்திமான்களை என்ன வகை யிலே கணிப்பார்கள்?

எதனை விரும்புகிறோமோ அது தோன்று கிறது; எதனை ஆதரிக்கிறோமோ அது வளர்ச்சி பெறுகிறது. பேணாத பண்டம் அழிந்து போகும்; பழக்கத்தில் இல்லாத திறமை இழந்துவிடப்படும். அறிவுடையோ ரையும் லோகோபகாரிகளையும் வீரரையும் கொண்டாடாத தேசத்திலே அறிவும் லோகோபகாரமும் வீரமும் மங்கிப் போகும். தமிழ்நாட்டில் இப்போது 'புதிய உயிர்' தோன்றியிருப்பதால், நாம் இவ்விஷயத்தில் தமோ குணம் செலுத்தாமல் கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகாகவி களுக்கு ஞாபகச் சிலைகளும் வருஷோத்ஸவங் களும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

## மறந்தது எது?

பாரதியார் வாழ்ந்து வந்த கடையத்தில் நடந்த ஒரு திருமணத்தின்போது தேவ கோட்டை வித்துவான் ஒருவர் 'வள்ளி திருமணம்' காலட்சேபம் செய்தார்.

வேடர்கள் தங்கள் பயிர்களை மிருகங்கள் அழித்துப் பாழாக்குவதைத் தடுப்பதற்காகச் சாமிக்குப் பூசை போட்டனர். அவர்களில் ஒருவனுக்குச் சாமி ஆவேசம் வந்து, 'பாக்கும் வச்சான், பழமும் வச்சான்; வெத்திலை வச் சான், போயிலை வச்சான்—ஒண்ணு வைக்க மறந்திட்டான். சுண்ணாம்பில்லே, சுண்ணாம் பில்லே'' என்ற பாட்டைப் பாடுவது வழக்கம். இந்தப் பாட்டைக் கேட்டதும் பாரதியார் 'கொல்' என்று சிரித்தார்.

அருகிலிருந்தவர்கள் 'ஏன் சிரிக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள். ''இந்தப் பாட்டு நமது நாட்டு மக்களுக்கும் ஒருவாறு பொருந்தும்!' என்றார் பாரதி. 'எப்படி?' என்று அவர்கள் திருப்பிக் கேட்டனர். 'தமிழ் மக்களுக்குக் கடவுள் நிலமும் வச்சான், பலமும் வச்சான், நிகரில்லாத செல்வம் வச்சான்—ஒண்ணு வைக்க மறந்திட்டான்; புத்தியில்லே, புத்தி யில்லே!' என்றார். நண்பர்கள் விழுந்து சிரித்தார்கள். பாரதியார் சொன்ன உவமை அவர்கள் நெஞ்சை விட்டு அகலவே இல்லை.

—தகவல்: **சீனி விசுவநாதன்.**

## பெண்களுக்கு!

"பெண்களுக்கு மிக முக்கியமானது கற்பு. அதை உயிரைக் காட்டிலும் ஜாக் கிரதையாகக் காப்பாற்றுவது முதற் கடமை. அதற்காகக் கூண்டுக்கிளிபோல் அடைபட்டுக் கிடக்க வேண்டாம்.

உலகத்தில் கணவன் ஒருவன் தவிர பாக்கிப் புருஷர்களெல்லாம் அண்ணன் தம்பி மார்கள். எல்லோருக்கும் பதுங்கி அஞ்ச வேண்டியதில்லை. முக்கியமாகக் கூச்சம்,

வெட்கம் இரண்டும் அநாவசியமான சரக்குகள். நீ பேஷாக எல்லாருடனும் பேசலாம். கணவனிடம் முதல் முதல் வெட்கம், பழகப் பழக அதுவும் வேண்டியதில்லை. அச்சம், நாணம், பயிர்ப்பு என்று புத்தகப் பாடத்தை உருப்போட்டு நம் நாட்டுப் பெண்கள், புருஷர்கள் எல்லாரும் அடிமை வாழ்வில் முழுகி இருக்கிறார்கள்.

நீங்கள் தைரியமாக இருந்தால்தான், உங்கள் வயிற்றில் பிறக்கிற குழந்தைகள் தைரியமாக இருக்கும் கோழைத்தனம் இந்தியாவின் மேன்மையை நாசம் செய்து விட்டது. அதோடு காலமும் உதவி செய்தது.

''நீ புக்ககத்திற்குப் போனாலும் தைரியமாக இரு; பயப்படாதே; ஒட்டுக் கேட்காதே. பிறர் கடிதங்களை உடைத்துப் பார்க்காதே; மனத்தில் உள்ளதை நேரில் சொல்லிவிடு. மனத்தில் வைத்து உருகுவதைவிட வாயினால் சொல்லி விடுவது நல்லது. உன்னால் முடிந்த அளவு அவர்கள் சொற்படி நட. உன்னால் முடியாவிட்டால் விஷயத்தைச் சுத்தமாகச் சொல்லிவிடு. மறைக்காதே! அதில் நன்மை உண்டு.

உன்னை விலை கொடுத்து அவர்கள் வாங்கவில்லை. அவர்கள் வீட்டை நன்றாக விளங்க வைத்து விருத்தி செய்யப் போகிறாய் அந்த வீட்டில் உனக்குப் பூரண உரிமைஉண்டு. பணம் காசு விஷயங்களில் தலையிடாதே. அதைப் பெரியவர்களுக்கு விட்டு விடு. வேலை செய்யப் பின் வாங்காதே. சக்தி மீறிச் செய்யாதே! செய்வதை உன் மனம் ஒப்ப செய். படிப்பை விடாதே. உன் தாய் தகப்பனார் எவ்வளவோ கஷ்டப்பட்டு முக்கியமான சாசுவதமான விஷயங்களைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். முடிந்தால் அபிவிருத்தி செய்; முடியாவிட்டால் இருப்பதை மறக்காதே.

''நான் ஐயரைப் போல் துறவு போதிக்க மாட்டேன். உலகத்தில் பிறந்து எல்லா சுகங்களையும் அநுபவித்து, உலகத்திற்கு உபகாரியாக வாழ வேணும். இரத்த வெள்ளம் பெருக்கி அதனால் சுகமடையலாம் என்பது என் எண்ணத்திற்கு நேர் விரோதம்.

நீ இரண்டு வீட்டிற்கும் விளக்கைப்போல் பிரகாசிக்க வேண்டும். இரண்டு குடும்ப வாழ்க்கை கலப்பது முதலில் கஷ்டமாக இருக்கும். பழகியபின் வழக்கமாய் விடும் கேவலம் அடிமைத் தனத்திற்கு ஒத்துக் கொள்ளாதே. உனக்கு உரிமை உண்டு; புத்தி உண்டு. ஸ்வதந்தரம் உண்டு. தலைநிமிர்ந்து நட. உன் இருபுறமும் உள்ள இயற்கையைக் கண்குளிரப் பார். நேர்ப் பார்வையில் பார், கடைக்கண் பார்வையில் பார்க்கத் தகுந்தவன் கணவன் ஒருவனே. தந்தை, சகோதரர்கள், பிள்ளைகள் முதலியோரை நேராக நிமிர்ந்து பார். இவர்களைக் கடைக் கண்ணால் பார்க்காதே. நிமிர்ந்து உட்கார். பேசுவதை ஸ்பஷ்டமாகப் பேசு. தைரியமாகப் பேசு. இதில் கற்பு கெடுவதில்லை. மேலுக்கு வேஷம் அவசியம் இல்லை!''

**(திருமதி யதுகிரி அம்மாளுக்குப் பாரதி சொன்ன புத்திமதிகள். ஆதாரம்: பாரதி நினைவுகள்—திருமதி யதுகிரி அம்மாள்.)**

# நேசம் மறக்காத நெஞ்சம்

## —தீரர் சத்தியமூர்த்தி



ஸ்ரீ பாரதியாரின் தமிழ்ப் பாடல்கள் எளிய நடையில் இயற்றப்பட்டு மனதை மிகவும் உருகச் செய்துவிடும் தன்மையுடையன. ஆயினும் எவ்வளவு பிரபல்யம் அடைய வேண்டுமோ அந்த அளவுக்கு அவருடைய கவிகள் பிரசித்தியடையவில்லை. ஆனால், அக்கவிகளை எங்கு பாடிய போதிலும் ஒரு மாயசக்தி அதில் மறைந்து கிடத்தல் புலப்படாமற் போகாது. இதை நான் அனுபவத்திற் கண்டிருக்கிறேன.

* * *

ஒரு கவியின் மனத்தே உதயமாகிற வெளிவரும் விஷயம் எப்போதுமே ஸாமான்யமா யிராது. ஸ்ரீ பாரதியார் போன்றவர் இங்கிலாந்தில் பிறந்திருந்தால் அரண்மனைக் கவியாக அவர் கொண்டாடப்பட்டிருப்பார். சுயேட்சை அடைந்த எந்த நாட்டிலாவது அவர் ஜனித்திருப்பாராகில், இவ்வளவு பால்யத்தில் மாண்டிருக்க மாட்டார். தேச பாஷைக்கும், தாம் பிறந்த ஜாதிக்கும் ஒரு மஹத்தான செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பார்.

பங்காள சிரேஷ்டர் ரவீந்திர நாதருக்கு அவர் சமமானவர். நான் மிக படப் பேசுவதாக நினைக்கக் கூடாது. ஸ்ரீபாரதியாரை அறிந்தவர்களுக்கே நான் சொல்வதன் உண்மை செம்மையாகப் புலப்படும். தமது ஆயுள் காலத்தில் பெரும் பாகத்தை அவர் வனவாசத்தில் செலவழித்து விட்டார். தமிழ்நாட்டில் பிறந்து, படாத கஷ்டங்கள் எல்லாம் பட்டு இளவயதிலேயே அவர் இறந்து போய்விட்டார். ஆயினும் கடுகளவாவது இத்தமிழ் நாட்டுக்குத் தேசாபிமானம் இருக்குமளவும், தமிழ் பாஷை இந்நாட்டை விட்டு மறையாதிருக்கும் வரையிலும் ஸ்ரீபாரதியாரின் ஞாபகம் இருந்து கொண்டேதான் இருக்கும்.

# மகாத்மாவும்-மகாகவியும்!



**1919**-ம்வருடம் அண்ணல் காந்தியடிகள் சென்னை வந்திருந்த சமயம் திரு ஜீ. ஏ. நடேசன் அவர்களது சகோதரர் திரு ஜீ.வீ. கல்யாணம் அவர்களது இல்லத்தில் அண்ணல் தங்கியிருந்தார்.

ஒருநாள் பகல் இரண்டு மணி இருக்கும். காந்திஜீ ஒரு கட்டிலில் மெத்தையில் சாய்ந்திருந்தவண்ணம் தம் காரியதரிசி மகாதேவ தேசாய்க்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். சேலம் பாரிஸ்டர் ஆதி நாராயணச் செட்டியார் குடகுக் கிச்சலிப் பழங்களை உரித்துப் பிழிந்து காந்திஜீ அருந்துவதற்காகப் பழரசம் தயாரித்துக் கொண்டிருந்தார். அறையில் ஒரு பக்கம் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஏ. ரெங்கசாமி ஐயங்காரும், எஸ். சத்தியமூர்த்தியும் சுவரில் சாய்ந்து நின்று கொண்டிருந்தார்கள். எதிரே ராஜாஜியும் மற்றும் சிலரும் நின்று கொண்டிருந்தனர். அறையின் வாயில் காப்போனாக வ. ரா. நின்றுகொண்டிருந்தார். யாரையும் உள்ளே விட வேண்டாமென்று கண்டிப்பான உத்தரவு. அச்சமயம் பாரதி அங்கு வந்தார். புதுவையில் தமக்கு அறிமுகமான வ. ரா. அங்கு நிற்பதைக் கண்டு ''என்ன ஓய்'', என்று சொல்லிக் கொண்டே அறைக்குள் நுழைந்து விட்டார்.

பாரதி நேரே காந்தியடிகளை வணங்கி விட்டு அவர் பக்கத்தில் மெத்தையில் உட்கார்ந்துவிட்டார். ''மிஸ்டர் காந்தி! இன்று மாலை ஐந்தரை மணிக்குத் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரு கூட்டத்தில் பேசப் போகிறேன். அக்கூட்டத்திற்குத் தாங்கள் தலைமை வகிக்கமுடியுமா?'' என்று கேட்டார்.

அன்று மாலை தமக்கு என்ன அலுவல் என்று காந்தியடிகள் மகாதேவ தேசாயைக் கேட்டார். வேறு ஒரு அலுவல் இருந்தது.

''இன்றைக்கு நான் வர இயலாது' தங்கள் கூட்டத்தை நாளைக்கு ஒத்திப் போட முடியுமா? என்றார் காந்தியடிகள்.

'முடியாது. நான் போய் வருகிறேன். மிஸ்டர் காந்தி, தாங்கள் ஆரம்பிக்கப்போகும் இயக்கத்தை நான் ஆசீர்வதிக்கிறேன்.' என்று சொல்லிவிட்டு பாரதி வெளியே போய்விட்டார்.

பாரதி போனதும், காந்தியடிகள் 'இவர் யார்? எனறு வினவினார். யாரும் பதில் சொல்லவில்லை. இராஜகோபாலாச்சாரியார்தான், 'இவர் எங்கள் தமிழ்நாட்டுத் தேசியக் கவி' என்று அழகுற சொன்னார்.

இதைக்கேட்ட காந்தியடிகள், 'இவரைப் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும். இதற்குத் தமிழ்நாட்டில் எவருமில்லையா?' என்றாராம்.



# பத்திரிகைப் பணிகள்

பாரதியார் 'தமிழ்ப் பத்திரிகை உலகின் தந்தை' எனப் போற்றப்படும் திரு ஸ்ரீ. சுப்பிரமண்ய ஐயரின் 'சுதேசமித்திரன்' இதழில் 1904-ம் வருடம் துணையாசிரியராகச் சேர்ந்தார். இப்பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டே, 1905-ம் வருடம் ஆகஸ்ட் முதல் 1906 ஆகஸ்ட் வரை 'சக்ரவர்த்தினி' என்ற மாதப் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பையும் வகிக்கிறார்.

இதன்பின், 1906 ஏப்ரலில் உதயமான ''இந்தியா'', வாரப்பத்திரிகையில் பெயர் போடாத ஆசிரியராகத் தொழிற்படுகிறார். ''இந்தியா'', பத்திரிகையின் நோக்கங்களையும் நடைமுறைகளையும் கொண்ட பத்திரிகையாக ஆங்கிலத்தில் வெளிவந்த 'Bala Bharata' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை அணி செய்கிறார் பாரதி.

அரசியல் சூழ்நிலை காரணமாக, 1908 செப்டம்பரில் புதுச்சேரி சென்று வனவாசம் புரிகிறார். மீண்டும், அதே ஆண்டு அக்டோபர் மாத மத்தியிலிருந்து 'இந்தியா' வெளிப்படுகிறது. தம்முடைய நெஞ்சத்து எழும் உணர்ச்சிகளை—அரசியல், சமூக, ஆன்மீகக் கொள்கைகளை; வெளிப்படுத்த ஒரு பத்திரிகை மட்டும் போதாது எனக் கருதிய பாரதியார் 1909-1910 ஆகிய ஆண்டுகளின் கால கட்டங்களில் ''கர்மயோகி', 'தர்மம்' 'சூர்யோதயம்' 'விஜயா' போன்ற இதழ்களிலும் நிறைய எழுதுகிறார். இதில் வேடிக்கை என்னவென்றால் ஒரே சமயத்தில் அனைத்து பத்திரிகைகளும் மக்களின் செல்வாக்கைப் பெற்றுவிட்டன. இதனால், மேற்கண்ட பத்திரிகைகளையெலாம் அரசு பறிமுதல் செய்து விடுகின்றது; அல்லது தடைசெய்து விடுகின்றது.

1913-1915-ம் ஆண்டுகளிலேதான் தியாகி சுப்ரமண்ய சிவா அவர்களின் 'ஞான பாநு' மாதப் பத்திரிகையில் 'கவிதைகள் கதைகள், கட்டுரைகள், வேதாந்த விஷயங்கள் என்றிப்படி எழுதி வந்தார்.

1914-1915 ஆகிய கால கட்டங்களில் சுதேசமித்திரன், ஆங்கிலப் பத்திரிகைகளான New India, Commonwealth, Arya Hindu ஆகியவற்றில் பல்வேறு பிரச்னைகள் குறித்து எழுதினார். 1920 நவம்பர் 15-ந் தேதி முதற் கொண்டு, 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கே பணியாற்ற வந்து, இறக்கும் வரையிலும் எழுதிக்கொண்டே இருந்தார்.




காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தில் கறுப்பன் செட்டியார், ராய சொக்கலிங்கம், பாரதியார், சொ. முருகப்பா, கி. நாராயணன் செட்டியார், மு. நடராஜன் (நிற்பவர்).



# மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் வாழ்க்கைக் குறிப்புகள்

தொகுப்பு—ரகமி

**(டிசம்பர் 11, 1882 —— செப். 12, 1921)**

பெயர்: சி. சுப்பிரமணியன்
செல்லப்பெயர் ''சுப்பையா''

தகப்பனார்: சின்னச்சாமி அய்யர்
தாயார்: லட்சுமி அம்மாள்
பிறந்த இடம்: எட்டயபுரம்(திருநெல்வேலி மாவட்டம்,

| | |
|---|---|
| 1882 டி. 11 | சித்திரபானு வருடம் கார்த்திகை மாதம் 27ம் தேதி பிறந்தார். |
| 1887 | 5 வயது முடிவதற்குள் தாயார் லட்சுமி அம்மாள் காலமானார். |
| 1889 | சுமார் 2½ ஆண்டுகள் கழித்து தகப்பனார் சின்னச்சாமி ஐயர், வள்ளியம்மாளை மறுமணம் செய்து கொண்டார். அதே முகூர்த்தத்தில் மகன் சுப்பிரமணியனுக்கு உபநயனமும் நடந்தது. |
| 1893 | 11 வயதான சுப்பிரமணியனுக்கு எட்டயபுரம் சமஸ்தானப் புலவர்களால் 'பாரதி' (கலைமகள்) என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது. |
| 1894 ஜனவரி | சிற்றன்னை வள்ளியம்மாளுக்கு லட்சுமி என்ற ஒரு பெண் குழந்தை பிறந்தது. |
| 1894—1897 | திருநெல்வேலி ஹிந்து கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் ஐந்தாம் பாரம் வரை பயின்றார். |
| 1897 | சிற்றன்னை வள்ளியம்மாளுக்கு விசுவநாதன் என்ற புதல்வர் பிறந்தார். |
| 1897 ஜூன் 27- | 14 வயதான பாரதிக்கும், 7 வயதான கடையம் செல்லப்பா ஐயரின் மூன்றாவது பெண் செல்லம்மாளுக்கும் கடயத்தில் திருமணம் நடந்தது. |
| 1898 ஜூன் | தகப்பனார் சின்னச்சாமி ஐயர் காலமானார். அப்போது பாரதிக்கு வயது 15 , தம்பி விசுவநாதனுக்கு வயது 1 . |
| 1898—1899 | காசியில் ஹனுமான் கட்டம் சிவமடத்திலுள்ள அத்தை குப்பம்மாளின் அழைப்பின் பேரில் பாரதி காசிக்குச் சென்றார். அங்கு ஜெய்நாராயண பள்ளியில் சேர்ந்து படித்தார். |
| 1900—1901 | காசியில் அலகாபாத் பல்கலைக் கழகத்தில் எண்டரன்ஸ் தேர்வில் முதல் வகுப்பில் தேறினார். |
| 1901 | டெல்லியில் நடந்த தர்பாருக்குச் சென்றிருந்த எட்டயபுர ஜமீன்தார் ஊர் திரும்பி வருகையில் காசியில் பாரதியின் அத்தை வீட்டில் இரு தினங்கள் தங்கி, பாரதியைத் தன்னுடன் எட்டயபுரத்திற்கு அழைத்துவிட்டார். |
| 1901—1904 | 3 ஆண்டுகள் எட்டயபுரம் ஜமீன்தாரிடம் சமஸ்தானத்தில் வேலை பார்த்தார் |
| 1904 ஜூலை | மதுரை புலவர் கந்தசாமி நடத்திய 'விவேகபானு' என்ற பத்திரிகை ஜூலை இதழில் பாரதியின் |

'தன்மை இரக்கம்' என்ற முதல் பாடல் அச்சாகியது.

**1904 ஆகஸ்ட். 1 முதல் 1904 நவம்பர் 10 வரை** எட்டயபுரம் ஜமீன்தாரிடமிருந்து விலகிய அவர் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் மூன்று மாதங்கள் தமிழாசிரியராகப் பணி யாற்றினார்.

**1904 நவம்.** 'சுதேசமித்திரன்' ஸ்தாபகரும், ஆசிரியருமான ஸ்ரீ ஜி. சுப்பிர மணிய ஐயர் பாரதியைத் தமது பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேர்த்துக் கொண்டார்.

**1905** பாரதியாருக்கு மூத்த பெண் தங்கம்மாள் பிறந்தார்.

**1905 ஜூன்** மித்திரனில் கவி பாரதியார் எழுதிய 'வங்கமே வாழிய' என்ற பாடலை முதன் முதலில் வெளி யிட்டனர்.

**1905 நவ** வங்கமொழியில் பக்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' கீதத்தின் மொழி பெயர்ப்பை அவர் 'சக்கரவர்த் தினீ'யில் வெளியிட்டார்.

**1905** காசியில் ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே தலைமையில் நடை பெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

**1906** கல்கத்தாவில் நடைபெற்ற தாதா பாய் நௌரோஜி தலைமையில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். பின்னர், டம்டம் நகரில் மாதா நிவேதிதா தேவியையும், பின்னர் புரட்சித் தலைவரான விபின்சந்திரபால் அவர்களையும் சந்தித்தார்.

**1906 ஏப்ரல்** 34, சென்னை பிராட்வே யில் பாரதியார் 'இந்தியா' என்ற வாரப் பத்திரிகையைத் துவக்கி னார்.

**1906** சென்னை 'இந்தியா' பத்திரிகை அலுவலகத்தில் வ. உ. சிதம்பரம் பிள்ளை பாரதியைச் சந்தித்தல். இருவருமாக 'சென்னை மக்கள் சங்கம்' அமைத்தனர். பின்னர் வ. உ. சி. பிள்ளை அவர்கள் பம்பாய் செல்வதை பாரதியார் வழியனுப்பினார்.

**1907** விபின் சந்திரபாலை சென்னைக்கு கவி பாரதியார் முன் நின்று வர வழைத்து, கடற்கரையில் பிரசங் கங்கள் செய்வித்தார்.

திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பொதுக்கூட்டம் நடந்த இடத் திற்கு 'திலகர் கட்டம்' என்று பெயர் சூட்டிய விழாவில் பாரதி, சுப்பிரமணிய சிவாவைச் சந்தித் தார்.

# அறிஞர் கடமை

## —தமிழ்த் தென்றல் திரு. வி. க.

இந்நாளில் தமிழ்நாட்டில் தமிழ்ப் பெரும் பாவலராயிலங்கிப் புகழுடல் தாங்கிய திரு. சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றி அறியாத தமிழறிஞர் இருத்தல் அரிது. சுப்பிரமணிய பாரதியாரைத் தேசபக்தர் சுப்பிரமணிய பாரதியார் என்று சொல்வது வழக்கம். தேசபக்தி இஃது என்னும் உண்மை கண்டவ ருள் பாரதியாரும் ஒருவர். திரு பாரதியார் தேச பக்தியின் இயல்பைப் பலவாறு பாக்க ளால் ஓதியிருக்கிறார். அவர் பாடல்களை நேயர்கள் ஓதுவதோடு நில்லாது அவை களைத் துருவித் துருவி ஆராய்தல் வேண்டும். ஆராய்ந்தால் தேசபக்திக்குரிய செம்பொருள் பல காணலாம். அவைகளை அகழ்ந்தெடுத் துப் புலவர்கள் சொற்பொழிவுகள் வாயி லாகவும், கட்டுரைகள் வாயிலாகவும் நாட் டார்க்கு அறிவுறுத்தல் நல்லது. அது நாட் டில் தேச பக்தியை வளர்ப்பதாகும். சிறப் பாக நமது நாட்டுக்கு இப்பொழுது அத் தகைய போதனை மிக மிக இன்றியமை யாதது. தேச பக்தியை வீழ்த்தும் பலதிறக் கிளர்ச்சிகள் தலைவிரித்தாடும் இந்நாளில் பாரதியார் பாடல்களின் உள்ளக்கிடக்கை களை நாட்டில் உலவச் செய்ய வேண்டுவது அறிஞர் கடமை.

**1907** சூரத்தில் நடைபெற்ற காங் கிரஸ் மகாசபையில் கலந்து கொண்டு லோக மான்ய திலகரின் கொள்கைக்குத் தீவிரமாகப் பாடு பட்டார்.

**1908 ஜன.** 14 பாடல்கள் கொண்ட நூல் தொகுப்பை 'ஸ்வதேச கீதங்கள்' என்ற தலைப்பில் பாரதியார் தாமே வெளியிட்டார். இதே ஆண்டு, 'ஞானரதம்' என்ற முதல் உரைநடைக் காவியம் 'இந்தியா' பத்திரிகையில் வெளியிடப் பட்டது. அப்போது எருக்கூர் நீல கண்டனைத் தன்னிடம் பயிற்சி யாளராக சேர்த்துக் கொண்டார்.

**1908 ஏப்ரல்** வ. உ. சி. கைது செய்யப்பட்ட வழக்கில் கவி பாரதியாரும் சாட்சி யம் கூறினார்.

**1908 செப்.** சென்னையில் 'இந்தியா' பத்தி ரிகை தடை செய்யப்பட்டது. கவி பாரதியார் மீதும் போலீஸ் நட வடிக்கைகள் எடுக்கலாம் என்று நண்பர்கள் கூறிய ஆலோசனை யின் பேரில் பாரதியார் புதுவைக் குச் சென்றுவிட்டார்.

**1908 அக்.** புதுவையில் பாரதிக்கு குவளை யூர் கிருஷ்ணமாச்சாரி யார் (குவளைக்கண்ணன்) குள்ளச் சாமி, நெருங்கிய நண்பர்களா யினர்.

1908 அக். சென்னையில் நிறுத்தப்பட்ட 'இந்தியா' வார இதழ் புதுவை யிலிருந்து மீண்டும் வெளிவந்தது.

1909 மார்ச் 11 பாரதியாருக்கு இரண்டாவது மகள் சகுந்தலா பிறந்தாள்.

1909 புதுவையில் பாரதியார் 'விஜயா' என்ற பத்திரிகையை வெளியிட்ட தோடு, தொடர்ந்து 'கர்மயோகி' 'தர்மா' முதலிய பத்திரிகைகளை யும் தமிழில் வெளியிட்டார்.

1910 மார்ச் 12 புதுவையில் 'இந்தியா' பத்திரிகை தடை செய்யப்பட்டது.

1910 ஏப். ஸ்ரீ அரவிந்தர் புதுவைக்கு வந்து பாரதியைச் சந்தித்தல்.

1910 அக். பாரீஸ் நாட்டிலிருந்து புதுவைக்கு வந்த வ. வே. சு. ஐயர், பாரதியை சந்தித்தார்.

1910 டிச. வாஞ்சி புதுவையில் பாரதியையும் வ. வே. சு. ஐயரையும் சந்தித்தல்.

தர்மா பத்திரிகை அலுவலகத்தில் புத்தகம் வெளியிடும் விஷயமாக நீல கண்டனுக்கும், வாஞ்சிக்கும் ஏற் பட்ட தகராறைப் பாரதி தீர்த்து வைத்தார்.

1911 ஜூன் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் கொலை வழக்கில் போலீஸாரால் தேடப்பட்ட மாடசாமி புதுவை யில் பாரதியைச் சந்தித்தல், பாரதி தமது சிஷ்யரான கனக சுப்பு ரத்தினம் (பாரதிதாசன்) மூலம் மாடசாமியை மாறுவேடத்தில் தப்பிக்கச் செய்தல்.

1911 ஆகஸ்ட். திருநெல்வேலி கலெக்டர் கொலை வழக்கு சம்பந்தமாகப் புதுவையில் பாரதியார், வ. வே. சு. ஐயர் மீது நடவடிக்கைகள் எடுத்த தோடு, பாரதியாரின் வீட்டையும் போலீஸ் சோதனையிட்டனர்.

1912 புதுவையில் பாரதியார் 'கண்ணன் பாட்டு', 'குயில் பாட்டு' மற்றும் 'பாஞ்சாலி சபதம்' முதல் பாகம் முடித்தல்.

1913 புதுவையில் கவிபாரதியாரின் நண்பரும், அரிஜன சிஷ்யனுமான ரா. கனகலிங்கத்திற்கு 'பூணூல்' அணிவித்துப் புரட்சி செய்தார்.

1914 தென்னாப்பிரிக்காவிலுள்ள நேடால் தமிழ்ச் சங்கத்திற்கு நிதி திரட்டி யனுப்பும் பணியில் ஈடுபட்டார்.

1915 நவ. மித்திரனுக்கு ஏ. ரங்கசாமி ஐயங் கார் ஆசிரியராக வந்ததும் புதுவை யிலுள்ள கவி பாரதியாரை மித்திர னுக்கு, வியாசங்கள் எழுதச் செய் தார்.

1915 டிச. புதுவையிலிருந்து பாரதியார் 'மித்திர'னுக்கு 'காளிதாசன்' 'சக்திதாசன்' என்ற புனைப் பெயர்களில் கட்டுரைகளும் நகைச் சுவைப் பாடல்களும் எழுதினார்.

1916 ஏப். 20 'மித்திரன்' ஸ்தாபகரும், ஆசிரியரு மான ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் (ஏப். 18) காலமானதைக் குறித்து புதுவையிலிருந்து பாரதி 'ஸ்ரீமான் ஐயரவர்களின் ஆத்மா சாந்தி யடைக' என்று அநுதாபச் செய்தி வெளியிடல்.


1917 ஆகஸ்ட். 'கண்ணன் பாட்டு' முதல் பதிப்பை சென்னையில் பரலி சு. நெல்லை யப்பர் வெளியிட்டார்.

1918 நவ. 20 பாரதியார் புதுவையை விட்டு பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் திரும்பி வருதல்.

1918 நவ. வில்லியனூருக்கு அருகில் கவி பாரதியைக் கைது செய்து ரிமாண் டில் வைத்தனர்.

1918 நவ. 24 சிதம்பரத்தில் கேம்ப் செய்திருந்த மாவட்ட மாஜிஸ்டிரேட்






மைய அரசு வெளியிட்ட அஞ்சல் தலை
(11-9-1960)

ஸடோடர்டிடம் கவி பாரதியாரை ஆஜர் செய்தல்.

**1918 நவ. 25** 'மித்திரன்' ஆசிரியர் ஏ. ரங்கசுவாமி ஐயங்கார் சென்னை போலீஸ் கமிஷனர் கானிங்டனுடன் தொடர்பு கொண்டு கவி. பாரதியின் விடுதலைக்கு ஏற்பாடுகள் செய்தார்.

**1918 டிச. 14** கவி பாரதியாரை நிபந்தனைகளுடன் விடுதலை செய்தனர்.

**1918 டிச. 16** கவி பாரதியார் விடுதலையான செய்தி 'மித்திரனில்' ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார் விடுதலை என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

**1919 மார்ச்** பாரதியாரின் மூத்த மகள் தங்கம்மாள் பாரதிக்கும் ஸ்ரீஸ்தானு ஐயருக்கும் திருமணம் கடயத்தில் நடந்தது.

சென்னை கதீட்ரல் ரோடியுள்ள ஜி. ஏ. நடேசன் இல்லத்தில் தங்கியிருந்த மகாத்மா காந்தியடிகளை தரிசித்தல்.

**1919 ஏப்.** கவிபாரதியார் கடயத்தில் தங்கினார்.

**1919 மே. 2** எட்டயபுரத்தில் தங்கியிருந்த போது தமக்கு உதவி அளிக்கும்படி ஸ்ரீ வெங்கடேச ரெட்டப்ப பூபதி ஜமீன்தாருக்கு இரண்டு சீட்டுக் கவிதைகள் எழுதியனுப்பினார்

**1919 அக்.** கானாடு காத்தான் வை. சு. ச. சண்முகனார் வீட்டில் தங்கிய பின், திருவனந்தபுரம், திருநெல்வேலி ஆகிய ஊர்களுக்குச் சென்றார்.

**1919 நவ.** காரைக்குடியில் சில நாட்கள் தங்கிய பின்பு கடயத்திற்குச் சென்றார்.

**1920 ஜூன் 2** பொட்டல் புதூரில் இஸ்லாமியப் பெருமைகளைப் பற்றி பிரசங்கம் செய்தார்.

**1920 ஜூன் 28** பாரதியார் தாம் எழுதிய கட்டுரைகளையும், பாடல்களையும் புத்தகமாக வெளியிட நிதி சகாயத்திற்காகச் சுற்றறிக்கைகளை நண்பர்களுக்கு அனுப்பினார்.

**1920 நவ. 15** 'மித்திர'னில் கவி பாரதியார் மீண்டும் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

**1921 மார்ச் 21** கடலூர் பொதுக்கூட்டத்தில் ஆன்மீக விஷயத்தைப் பற்றி பிரசங்கம் செய்தார்.

**1921 ஜூன்** சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி கோவில் யானை 'அர்ஜுனன்' கவி பாரதியார் போர்த்திருந்த அங்கவஸ்திரத்தைத் தனது துதிக்கையினால் பிடித்திழுத்து, கீழே தள்ளிவிட்டது. விழுந்த அதிர்ச்சியால் ஏற்பட்ட காயங்களுக்குச் சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

**1921 ஜூலை** தன்னை கீழே தள்ளிய கோவில் யானையைப் பற்றி பாரதியார் மித்திரனில் 'கோவில் யானை' என்ற தலைப்பில் வேடிக்கையான கட்டுரையை எழுதினார்.

**1921 ஆகஸ்ட் 23** ஈரோடு அடுத்த கருங்கல் பாளையை வாசக சாலை ஆண்டு விழாவில் பாரதியார் உடல்நலமின்றியே பிரசங்கம் செய்தார்.

**ஆகஸ்ட் 23** தீராத வயிற்றுப் போக்குடன் கவி பாரதியார் 'மித்திரன்' வேலையினின்று ஒருவார காலம் ரஜாவில் சென்றார்.

**1921 செப்.** புதன் கிழமை பாரதியார் 'மித்திரன்' ஆசிரியருக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் 'பராசக்தியின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு திங்கட்கிழமை (12-9-'21) வேலைக்கு வந்துவிடுகிறேன்' என்று துண்டுக் காகிதத்தில் தகவல் அனுப்பின

**1921 செப். 11** ஞாயிறு இரவு தாண்டி (12ந் தேதி திங்கட்கிழமை அதிகாலை) 1.30 மணிக்குத் தமது 39-ம் வயது முடிவதற்குள் காலமாகி விட்டார்.

(1921 செப்டம்பர் 12-ந் தேதி மகாகவி பாரதியார் காலமாகிவிட்டார், என்ற செய்தியோடு 'மித்திரன்' உப தலையங்கத்தில் ''திங்கட்கிழமை 'மித்திரன்' வேலைக்கு வந்துவிடுகிறேன் என்று சொல்லியனுப்பியவர் திங்கட்கிழமையே சாம்பராகிவிட்டது என்ன கொடுமை?'' யென்று வெளியிட்டது குறிப்பிடத் தக்கது.).

**ஆதாரம் :**

1. சுதேசமித்திரன்
2. ஸ்ரீ புவனேஸ்வரி வெளியீடு
''தமிழகம் தந்த மகாகவி''
3. திருநெல்வேலி மாவட்ட சுதந்தரப் போராட்ட வரலாறு

# மகாகவியும் கப்பலோட்டிய தமிழரும்

என். நாகசாமி





இந்தியாவை ஆண்டுவந்த ஆங்கில அரசாங்கத்தார் அளித்த ஆறு வருஷக் கடுங்காவல் சிறைவாசத்தை அனுபவித்து விட்டு வெளியே வந்த தேசபக்தர் வ.உ. சிதம்பரனார் பாரதியாரைப் பார்க்கப் புதுவைக்கு ஓடோடி வந்தார்.

சிதம்பரனார் ரயிலைவிட்டுக் கீழே இறங்கி, ரயில் நிலையத்துக்கு வெளியே வந்து ஒரு வண்டிக்காரனை அழைத்து ''நான் பாரதியார் வீட்டுக்குப் போகவேண்டும்; உனக்கு அவர் வீடு சரிவரத் தெரியுமா ?'' என்று கேட்டார். வண்டிக்காரன் உடனே 'ஐயா அவர் வீடு எனக்குத் தெரியும்; அவரும் எனக்கு நன்றாய்த் தெரியும்; வண்டியில் ஏறிக்கொள்ளுங்கள், நான் உங்களை அவரிடம் பத்திரமாய்க் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறேன்' என்று வணக்கமாய்ச் சொன்னான். பிள்ளையும் அந்த வண்டியில் ஏறிக்கொண்டார். வண்டிக்காரன் அவரை ஏற்றிவந்து பாரதியார் வீட்டுக்கு முன்னால் வண்டியை நிறுத்திவிட்டு, வீட்டுக்குள்ளே வந்து 'சாமி உங்களைத் தேடி ஒரு ஐயா வெளியே வந்திருக்கிறார்; அவர் உங்களைக் கூப்பிடுகிறார்' என்று சொன்னான். குளிக்கப்போன பாரதியார் தெருவில் யார் வந்திருக்கிறது என்று போய்ப் பார்த்தார். பாரதியாரைக்கண்ட பிள்ளை வண்டியைவிட்டுக் கீழே இறங்கி அதிவேகமாய் வந்து பாரதியாரைக் கட்டி ஆலிங்கனம் செய்தார். பாரதியாருக்கு கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பிற்று. பிள்ளையை பாரதியார் மகிழ்ச்சியுடன் இருகரங்களையும் பிடித்துக் கொண்டு மெத்தைக்கு அழைத்துச் சென்றார்.

பாரதியாரும் பிள்ளையும் சிறிது நேரம் அளவளாவிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் நான் கீழேபோய் பிள்ளைக்கு நாஸ்தா தயார் செய்துகொண்டு வந்தேன். அவரும் பல்தேய்த்து, கைகால்கள் கழுவிக்கொண்டு திருநீறு நெற்றியில்பூசிக்கொண்டு சூரிய நமஸ்காரம் செய்தார். பிறகு அவர் நாஸ்தா புசித்தார். பாரதியாருக்கு 'இந்தியா' ஆபீஸ் போய் நாட்டுக்குச் சேவை செய்ய நேரமாய் விட்டது. ஆதலால் உடனே பிள்ளையை இளைப்பாற சொல்லிவிட்டு பாரதியார் நாட்டுத் தொண்டுக்குச் சென்றார். பிரயாணத்தில் தூக்கமில்லாததால் பத்திரிகைகளை,பாய்போல் விரித்து, பத்திரிகைகளையே கட்டாகக்கட்டித் தலையணையாக வைத்துக்கொண்டு, பாய்போல் விரித்த பத்திரிகைகளின் மேல் படுத்துக் கொண்டு அயர்ந்து தூங்கினார் பிள்ளை.

பன்னிரண்டு மணிக்கு மதியச் சாப்பாட்டுக்காக களைப்புடன் பாரதியார் வந்தார். அவர் வந்ததும் பிள்ளையிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். கீழே ஒரு அறையில் எல்லாரும் ஒரே பந்தியாகச் சாப்பிட யாவும் தயார் செய்துவிட்டு, நான் மெத்தைக்குச் சென்று பிள்ளையையும், பாரதியாரையும் சாப்பிட அழைத்தேன்.

நான் அவர்களிருவரையும் அழைத்துக் கொண்டு கீழே சாப்பாட்டு அறைக்கு வந்தேன். ஒரு வரிசையில் பாரதியாரும் அவருடன் ஆபீசில் தொண்டு புரிந்த மூவரும் மற்றொரு வரிசையில் அதிதியாகிய பிள்ளையும் ஜாகையில் அன்று சமையல் செய்த மூவரும்சாப்பிட உட்கார்ந்தோம்.

நான் எல்லாருக்கும் சாப்பாடு பங்கிட்டுவிட்டு மீதியை மத்தியில் வைத்தேன். தேவையானதை எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிட வைத்துவிட்டு நானும் அவர்கள் கூடச் சாப்பிட உட்கார்ந்தேன். எல்லாரும் உரையாடிக் கொண்டு தேவையானதை எடுத்துச் சாப்பிட்டோம். 'சிறைவாசத்திலிருந்து வந்த பின் இன்றே நான் சுவையுடன் வயிறு நிறைய சந்தோஷமாய் சாப்பிட்ட நாளாகும்' என்று சொன்னார் பிள்ளை. பிறகு கைகளை அலம்பிக் கொண்டு அவரவர்கள் வேலைக்கு எல்லோரும் போய் விட்டோம். பிள்ளை மட்டும் பத்திரிகைகளைப் பார்த்துக் கொண்டு நேரத்தைச் செலவழித்தார்.

சாயங்காலம் ஆறு மணிக்கு பாரதியார் 'இந்தியா' ஆபீசிலிருந்து வேலையை முடித்துக் கொண்டு திரும்பி வந்து, பிள்ளையைக் கடலோரம் அழைத்துச் சென்றார். சிறிது நேரம் கடலோரம் உலாவி சுத்தமான குளிர்ந்த காற்றை உட்கொண்டுவிட்டு இருவரும் திரும்பி வந்தார்கள். சற்று நேரம்கழித்து எல்லாரும் மத்தியானம் போல்,

உட்கார்ந்து இராச் சாப்பாட்டைச் சாப்பிட்டோம்.

அதன்பின் அன்று நல்ல நிலவாயிருந்ததினால் மெத்தைக் களத்தில் பத்திரிகைகளை விரித்து எல்லோரும் உட்கார்ந்தோம். 'நமது தாய்நாட்டுக்காக நான் சிறையில் பாடுபட்டதைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேளுங்கள்' என்று பிள்ளை சொல்ல ஆரம்பித்தார். 'என் தேச சேவையை அடக்க வேண்டுமென்ற ராஜ நிந்தனை வழக்குக் கொண்டு வந்து ஆறு வருஷம் கடுங்காவல் தண்டனை எனக்கு ஆங்கில அரசாங்கம் கொடுத்தது. நான் சிறைவாசம் செய்தபொழுது கேழ்வரகு அரைத்தல், கருங்கல் உடைத்தல், எண்ணெய்ச் செக்கு இழுத்தல், போன்ற கடின வேலைகளையே செய்தேன். கடவுளை வேண்டிக் கொண்டு நம் நாட்டுக்காகவே இவ்வித கஷ்டமான வேலைகளையெல்லாம் செய்தேனென்ற எண்ணம் என் மனத்தில் அப்படியே ஊறிவிட்டது. கஷ்டமான வேலையை நான் செய்த பொழுது எனக்கு அது சிரமமாகவே தோன்றவில்லை. அவ்வித ஆழ்ந்த எண்ணத்துடன் நான் மனப்பூர்வமாய் என்னை அர்ப்பணம் செய்திருந்த நம் நாட்டின் பொருட்டே பாடுபட்டேன். நீங்களும் அவ்வித எண்ணத்துடன் உங்களை நாட்டுக்கு அர்ப்பணம் செய்துவிட்டுப் பாடுபட வேண்டும்'' என்று சொல்லி முடித்தார் பிள்ளை. அவர் சிறையில் பட்ட கஷ்டங்களை நாங்கள் மனம் உருகக் கேட்டு வருந்தினோம். பிறகு நாங்கள் எழுந்து போய் பேப்பர் படுக்கைகளை விரித்து, இறைவனை வணங்கி விட்டுத் தூங்கினோம்.

பிள்ளை மூன்று தினங்கள் எங்கள் ஜாகையில் தங்கினார். அதிகாலையில் பாரதியாருடன் உடற்பயிற்சி செய்தார் பிள்ளை. மூன்று தினங்களும் வெவ்வேறு சாப்பாட்டுப் பண்டங்களை மிகவும் ருசியாய் அவர் சாப்பிட்டார். எல்லாவற்றையும் நாங்களே செய்து கொண்டு. எங்கள் கால்களிலேயே நின்று கொண்டு, நாட்டுக்குப் பத்திரிகை மூலம் தொண்டு செய்து கொண்டு இருந்ததைக் கண்ட பிள்ளை எங்களை மனமார மெச்சினார்.

மூன்றாம் நாள் இரவு பிள்ளை தம் ஊருக்குப் புறப்பட்டார். எல்லோரும் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று அவரை ரயிலில் அனுப்பினோம். பிள்ளை பாரதியாரை ஆலிங்கனம் செய்த பிறகு எங்களைப் பார்த்து ''எவ்வித கஷ்டத்தையும் பொருட்படுத்தாது நாட்டுக்கு உங்களை அர்ப்பணம் செய்து விட்டு சோர்வடையாது நாட்டுக்கே பாடுபடுங்கள், பாடுபடுங்கள்' என்று சொல் எல்லோரையும் வாழ்த்தினார். நாங்களும் அவரை நமஸ்கரித்து மகிழ்ச்சியுடன் அனுப்பினோம்.

[சென்னை சாரதி பிரசுரம் வெளியிட்டுள்ள "புதுவையில் தேச பக்தர்கள்" என்ற புத்தகத்திலிருந்து.]



## "சாதி மதங்களைப் பாரோம்!"

பழைய பழக்க வழக்கங்களில் பலவற்றை வேரொடு பெயர்த்து எறிந்துவிட வேணும் என்று பாரதி துடிப்பார். திருமதி செல்லம்மா இந்த விஷயத்தில் அடிக்கடி அபிப்பிராய பேதப்படுவார். வீட்டின் சமையலறையில் செல்லம்மா 'மடி' யாக ஆசாரத்துடன் சமையல் செய்து கொண்டிருப்பார். பாரதியார் வெளியிலிருந்து வந்து, கை, கால், கழுவி, நேராக உள்ளே போய்ச் சமையல் பாத்திரங்களில் வைத்திருப்பதைத் தொட்டுவிடுவார். 'பத்து, தொட வேண்டாம்!' என்று செல்லம்மா ஆட்சேபிப்பார். பாரதி அதைப் பொருட்படுத்தவே மாட்டார். இருவருக்கும் வாக்குவாதம் பலக்கும். முடிவில் இவரது பேச்சே உயர்ந்து நிற்கும்; செல்லம்மா பேசாமல் இருந்துவிடுவார்.

யார் சாப்பிட அழைத்தாலும் சரி, பாரதியார் மறு மொழியில்லாமல் ஒப்பி விடுவார். ஜாதி, மதம் ஒன்றையும் பார்க்க மாட்டார். வாயில் பாடுவதைப் போலவே, நடத்தையிலும் செய்து காட்டுவார். மனத்தில் நினைத்தால் போதும், செயலிலும்காட்டி விடுவார். எவ்வளவு கஷ்டமானாலும் சளைக்க மாட்டார்; யார் என்ன சொன்னாலும் பொருட்படுத்த மாட்டார்.

—"பாரதி நினைவுகள்" என்னும் நூலில் யதுகிரி அம்மாள்.

## காவடிச் சிந்து

அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துகள் புகழ் பெற்றவை. ஒருசமயம் எட்டயபுரம் அரசரும் மற்றும் சில பிரமுகர்களும் அண்ணாமலை ரெட்டியாரின் சிந்துகளைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இதைக் கண்ட இளம் பாரதி லேசாக நகைத்தார். 'நகைத்துப் பயனில்லை உங்களால் முடியுமானால் இயற்றுங்கள் பார்க்கலாம்' என்றார் ஒரு புலவர். 'இன்று மாலைக்குள் ஒரு சிந்துடன் வருகிறேன்' என்று கூறி, அப்படியே மாலையி கீழ்வரும் சிந்துடன் அரண்மனைக்கு வந்தார் பாரதி. உடனே புலவர்களை அழைத்து, அவர் முன்னிலையில் இப்பாடலை அரங்கேற்றம் செய்வித்தார் அரசர். புலவர் யாவரும் போற்றினர். அந்தச் சிந்தின் ஒரு பகுதி மட்டும் கிடைத்துள்ளது.

இப்பாடலைப் பாரதியாரின் தம்பி ஸ்ரீ சி. விசுவநாதன் 1929ல் ஆங்கிலத்தில் வெளியிட்ட பாரதி சரிதத்திலும், தி. ஜ. ர. அவர்கள் 1940ல் வெளியிட்ட 'புதுமைக் கவி பாரதியார்' என்ற நூலிலும் காண்கிறோம்.

பச்சைத் திருமயில் வீரன்
அலங் காரன், கௌ மாரன்-ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன், அடி
பணி சுப்பிர மணியர்க்கருள்
அணி மிக்குயர் தமிழைத்தரு
பக்தர்க் கெளியசிங் காரன்-எழில்
பண்ணு மருணாசலத் தூரன்.

ஆதாரம்: ரா. அ. பத்மநாபன் தொகுத்த 'பாரதி புதையல்



# பாரதிக்கு நூற்றாண்டு

## வரலாற்றில் சில ஏடுகள்

தொகுப்பு : சீனி விசுவநாதன்

**1921 செப்.** மகாகவி பாரதியார் மரணத்தைக் கடந்த பின்னர், தீரர் சத்திய மூர்த்தி அவர்கள் அம் மகாகவியின் நூல்களை முறையாகப் பதிப்பித்து வெளியிட வேண்டும் என்று வேண்டு கோள் விடுத்தார்.

**1922** பாரதி நூல்களைப் பதிப்பிக்கப் 'பாரதிஆச்ரமம்' என்றதொரு அமைப்பு உருவானது.

**1923** எதிர்பார்த்த அளவு நூல்களின் விற்பனை உற்சாகப்படுத்தும் அளவுக்கு இல்லாததால், நூற் பதிப்புப் பணியில் தேக்கம் ஏற் பட்டது.

**1924** 'பாரதி பிரசுராலயம்' தோற்றம்; முறையாகத் திட்டமிட்டு, பாரதி யார் நூல்களைப் பதிப்பிக்கக் கருதிச் செயல்பட்டது.

**1924 செப். 11** முதன் முதலாகச் சென்னையில் பாரதியின் திருநாள் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. திரு சுப்ரமணிய சிவா இந்தமுயற்சியை மேற்கொண்டார்.

**1944** பாரதிக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்த பேராசிரியர் கல்கி அவர்கள் முயற்சி எடுத்தார்; அதற்காக நிதியும் திரட்டினார்.

**1945 ஜூன் 3** மகா கவி பாரதி மணிமண்டப அடிக்கல் நாட்டு விழா எட்டய புரத்தில் நடைபெற்றது. மண்ட பத்திற்கான அடிக்கல்லை ராஜாஜி நாட்டினார். இவ்விழாவில் புகழ் பெற்ற எழுத்தாளர்கள், அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

**1947 அக். 13** எட்டயபுர காணி நிலத்தில் கவின் பெறுமாளிகையாம் 'பாரதி மணி மண்டபம்' எழுந்தது. ராஜாஜி அவர்களே திறப்பு விழா நிகழ்ச் சிக்கு நாயகராய்த் திகழ்ந்தார்.

**1949** சென்னையில் இயங்கி வந்த 'பாரதி சங்கம்' என்ற அமைப்பை கல்கி முறைப்படிப் பதிவு செய்தார்; பாரதியார் நூல்களைப் பொது வுடைமையாக்க வேண்டும் என்ற கிளர்ச்சியும் தமிழகத்தில் எழுந் தது.

அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு ஓ. பி. ராமசாமி ரெட்டியார் பாரதி நூல்களின் பதிப்புரிமையைப் பாரதியாரின் இளைய சகோதரர் திரு. சி. விசுவ நாத ஐயரிடமிருந்து பெற்று, அரசு டைமையாக்கினார். திரு. ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் தம்மிட மிருந்த பாரதி பாடல்களின் ஒலிப் பதிவு உரிமையை அளித்தார்.

**1949 ஆக 6.** மகாகவியின் கையெழுத்துப் பிரதி களில் சிலவற்றைத் திரு சி. விசுவ நாத ஐயர் அரசிடம் ஒப்படைத் தார்.

**1950—52** சென்னை அரசு பாரதி நூல்களைப் பதிப்பிப்பதற்காக ஆலோசனைக் குழு ஒன்றை நியமித்தது.

**1953—54** ''பாரதியார் கவிதைகள்'' நூல் அரசுப் பதிப்பாக வெளியிடப் பெற்றது.

**1957 ஏப்.** பாரதியாரின் கவிதைகள் வசன கவிதை ஆகியவை கொண்ட தொகுதியின் மலிவுப் பதிப்பு சக்தி காரியாலயத்தினால் ரூ. 1.50 விலையில் வெளியிடப்பட்டது. வெளியீட்டு விழாவில் அறிஞர் அண்ணா கலந்து கொண்டார்.

**1959** பாரதி உரை நூல்களின் பதிப்பு அரசு வெளியீடாக வெளிவரத் தொடங்கியது.

**1960 செப். 11** மத்திய அரசு பாரதியாரின் அஞ்சல் தலையை வெளியிட்டது.

**1962 டிச. 11** தமிழக அரசு, மகாகவியின் 81-ம் பிறந்த நாளைச் சிறப்பான முறை யில் சென்னையில் கொண்டாடி யது. கட்சி வேற்றுமைகளை மறந்து எல்லா அரசியல் தலைவர் களும், அறிஞர்களும் விழாவில்

பங்கு கொண்டு பாரதிக்குப் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

1968 தமிழகத்தின் தலைநகரான சென்னைக் கடற்கரையில் 2-ம் உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி பாரதியின் சிலை திறக்கப்பட்டது.

1976 செப். 'ஒருமைப்பாட்டு விழா'வாகப் பாரதி விழாவைத் தமிழக அரசு பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்து வள்ளுவர் கோட்டத்தில் கொண்டாடியது.

பாரதி ஒளி-ஒலிக் காட்சியை அரசு சென்னையிலும்- மாவட்டங்களிலும் நடத்தியது.

சென்னை 'பைகிராப்ட்ஸ் சாலைக்குப் 'பாரதியார் சாலை' எனப் பெயர் சூட்டப்பட்டது.

1981—82 பாரதி நூற்றாண்டு.

---



# அண்ணலின் கண்டனம்!

[பாரதியாரின் பாடல் நூல்களை 1928ல் அன்றைய சென்னை அரசாங்கம் பறி முதல் செய்த தடையுத்தரவு பிறப்பித்த போது அண்ணல் காந்தியடிகள் தமது 'யங் இந்தியா' எனும் பத்திரிகையில் எழுதியதில் ஒரு பகுதியின் மொழி பெயர்ப்பு :]

நான் இந்த இதழின் பிறிதோரிடத்தில் காலஞ்சென்ற பாரதியார் பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பின் முதற் பகுதியை வெளியிட்டிருக்கிறேன். சரியாகச் சொல்ல வேண்டுமானால் பர்மா அரசாங்கத்தின் உத்தரவின் மீது சென்னை அரசாங்கம் பாரதியின் பாடல்களைப் பறிமுதல் செய்துள்ளது. பர்மா அரசும் எந்த நீதிமன்றத்தின் உத்தரவின் மீதும் பறிமுதல் செய்ததாகத் தெரியவில்லை, தன் சொந்த நிருவாகப் பொறுப்பிலேயே இம்மாதிரி செய்துள்ளது. இந்தப் புகழ் பெற்ற கவிஞனின் பாடல் புத்தகங்கள் சென்ற முப்பது ஆண்டுகளாக மக்கள் புழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன. சென்னைஅரசாங்கத்தின கல்வி இலாகாவும் இக்கவிஞனின் பாடல்களைப் பள்ளி மாணவர்களின் பாடப் புத்தகங்களில் சேர்க்கத் தீவிரமாக ஆலோசித்து வந்திருக்கிறது என்பது இப்போது நீதி மன்றத்தின் முன்னுள்ள சாட்சியங்களிலிருந்து தெரிகிறது. இப்பாடல் புத்தகங்கள் இந்தியாவில் எங்கிருந்தாலும் பறிமுதல் செய்யப்பட வேண்டியவையாம். மாகாண அரசுகளுக்கு இவ்வளவு விரிவான அதிகாரம் இருக்கிறதென நான் கேள்விப்பட்டதுகூட இல்லை. நாம் வாழும் காலத்தின் தன்மை இது. எனினும் அரசின் செய்கை நாளடைவில் மக்களின் கவனத்தை சர்த்துவிட்டது. இந்தி பிரசாரக் காரியாலயத்தைச் சேர்ந்த ஸ்ரீஹரிஹர சர்மாவும், பதிப்பாளர்களும் காலஞ்சென்ற கவிஞரின் ஏழை மனைவியின் சார்பில் பொதுஜன விழிப்பை ஏற்படுத்தினர். இவ்விஷயம் சென்னைச் சட்டசபை வரை எட்டி அங்கு விவாதிக்கப்பட்டது. சட்ட விரோதமானது என்று மிகத் தெளிவாகத் தெரியப்படுத்திப் பறிமுதல் உத்தரவை ரத்து செய்யும்படி அரசாங்கத்துக்கு நீதி மன்றம் உத்தரவிடவேண்டுமென்று கோரி ஸ்ரீஹரிஹர சர்மா வழக்குத் தொடுத்தார். அதன் விளைவாக ஒரு சமாதானம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அரசு தன் பறிமுதல் உத்தரவை வாபஸ் பெற்று நூல்களைப் பதிப்பகத்தாருக்குத் திருப்பித்தர இருக்கிறது. கவிஞரின் ஏழை மனைவிக்கும் அரசு நஷ்ட ஈடு கொடுக்க இருக்கிறது. எனவே வழக்கு திரும்பப் பெறப் பட்டது.

**தகவல்: எஸ். வி. எஸ்.**

### பாரதி குடும்பத்தினர் எழுதிய நூல்கள்— விவரம் :

தம்பி : சி. விசுவநாதன் பி.ஏ. எல். டி;
Barathi and his works (1929)

மனைவி : செல்லம்மாள்:
பாரதியார் சரித்திரம் (1944)

மூத்தமகள் : தங்கம்மா பாரதி
அமரன் கதை (1946)
பாரதியும் கவிதையும் (1947)
பிள்ளைப் பிராயத்திலே
எந்தையும் தாயும் (1978)

இளையமகள் : சகுந்தலா பாரதி
என் தந்தை (1974)

பேத்தி : விஜயபாரதி
1. சக்தி வாழ்க (1967).
2. C. Subramaniya Barathi.
3. C. Subramaniya Barathi personality and poetry (1975).
4. மகாகவி பாரதி—ஒரு திறனாய்வு—1978.




# பாரதி ஒரு பத்திரிகையாளர்


**சி. என். கிருஷ்ணபாரதி**
தனி அலுவலர்,
பாரதி நூற்றாண்டு விழாக்குழு


**பா**ரதி ஒரு சுதந்திரப் போராட்ட வீரன்; நாட்டிற்படரும் சாதிப்படைக்கு மருந்து ; மீண்டும் மதங்கள் அண்டா நெருப்பு; 'பெண் விடுதலையின் பொருட்டாக தர்மயுத்தம் தொடங்குங்கள்' என்று குரல் கொடுத்த மாவீரன், தமிழால் எதுவும் முடியுமெனச் சாதித்த பேரறிஞன், உலகின் பல்வேறு முடை நாற்றமிக்க மூடப்பழக்க வழக்கங்களைச் சாடிய மனிதன் என்றெல்லாம் அவனைப் பற்றியறிகிறோம். இத்தகைய முற்போக்கு உணர்வுகளால் மட்டுமே உருவாக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற உயிர்த் தத்துவம் இவரெனக் கண்டோம்.

ஒரு மகாகவி என்ற முறையில் தனது கவிதைத் திறத்தால் மட்டுமே பெருநீதிகளை நிலைநாட்ட முற்படவில்லை. ஷெல்லி, விட்மன் போன்ற பெருங்கவிஞர்களின் கவிதைப் படைப்புகளில் காணப்படும் புரட்சி எண்ணங்களைக் கண்டெடுத்து அன்றைய மேலை நாடுகளில் வாழ்ந்த புரட்சியாளர்கள் மக்களை தட்டி எழுப்பியதாக வரலாறு கூறும். ஆனால் பாரதி அக்கவிஞர்களுக்கு மேலே ஒருபடி சென்று விடுகிறார். தான்பாடும் ஒவ்வொரு பாட்டும், எழுதும் ஒவ்வொரு கட்டுரையும், கதையும் மக்கள் உள்ளத்தை மாற்றுகிறதா என்பதைப் பரிசோதனை செய்தறிந்த மாபெரும் விஞ்ஞானியாகத் திகழ்ந்தார்.

பாரதிக்குக் கவிதையுணர்வு சொல்லாமற் பாகம்பட்டது. அவரது தந்தையின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பல்லக்குக்குப் பின்புறமும், பாழடைந்த கோயிலுக்குள்ளும் மறைந்திருந்து கம்பரையும், வள்ளுவரையும், இளங்கோவையும் சங்க இலக்கியங்களையும், பிற்கால சமய இலக்கியங்களையும் ஆர்வத்தோடு கற்றார். 'தமிழைப் படிக்காதே, தாத்தா வீட்டிற்குப் போகாதே' என்பதுதான் அவரது தந்தையின் கட்டளையாம். இயற்கையிலேயே புலமை பெற்றவராக நாவலர் சோமசுந்தர பாரதியாரால் அழைக்கப்படும் பாரதியாரின் தந்தைக்கு ஒரு சலிப்பு. ''தமிழைப் படித்து என்ன செய்யப் போகிறான்?' ஆங்கிலமும், கணிதமும், பொறியியலும் கற்றால் தமது பெருங்கனவான ஓர் தொழிற்சாலையை உருவாக்கலாமே என்பது தந்தையின் நினைவு. அந்தக் காலத்திலேயே (1884 வாக்கில்) சொந்தமாக ஒரு பஞ்சறைக்கும் தொழிற்சாலை நிறுவியவர் பாரதியாரின் தந்தை திரு. சின்னச்சாமி அய்யர். அதனை வெற்றி பெறாது தடுத்தனர் அன்றைய ஆங்கிலப்பஞ்சாலை முதலாளிகள். அவர் உருவாக்கிய பஞ்சாலையின் இடிபாடுகளை இன்றும் எட்டயபுரத்திற்கருகில் காணலாம்.

தனது தந்தையின் பெருங்கனவு பாரதிக்கு வெறும் பணம் சேர்க்கும் ஆசையாகத்தான் தெரிந்தது.

'ஓங்கி நின்ற பெருஞ்செல்வம்
யாவையும்
ஊணர் செய்த சதியால்
இழந்தான்' என்றும்
'வேர்ப்ப வேர்ப்பப் பொருள்
செய்வ தொன்றையே
மேன்மைகொண்ட தொழிலெனக்
கொண்டனன்' என்றும்
'தேசத்தார் புகழ் நுண்ணறி
வோடுதான்
திண்மை விஞ்சிய நெஞ்சின
னாயினும்
நாசக்காசினில் ஆசையை
நாட்டினன்
நல்லன் எந்தை துயர்க்கடல்
வீழ்ந்தனன்'

என்றும் தனது சுயசரிதைக் கவிதையில் கோடிட்டுக் காட்டுகிறார்.

பாரதியின் கவிதைப் போராட்டம் வென்றது. இத்தகு தந்தையின் உள்ளத்தையும் குளிர வைக்கும் புலவர் அவையில் தனது ஒன்பதாவது வயதிலிருந்தே பீடுமிக்க கவிஞராக ஒளிரத் தொடங்கி, பதினோராவது வயதில் 'சுப்பையா'— சுப்பிரமணிய பாரதியாகப் பட்டம் பெற்றுத் திகழ்கிறார்.

பாரதியின் வாழ்வில் அரண்மனை வாழ்வு நீண்டநாள் சுவைக்கவில்லை. சந்திரவம்சம் சூரியவம்சம், சனிசுவர வம்சம் என்றல்லாம் ஒரு ஜமீந்தாரைப் புகழ்ந்தாக வேண்டும். தனது சுயசரிதமாகப் புனைபெயர்களுடன் எழுதிய 'சின்ன சங்கரன் கதை'யில் அந்த காலத்துக் கவிராயர்களது இலக்கணத்தை இப்படித்தான் விவரித்துக் கொண்டே போகிறார்.

தந்தை இறந்ததும் காசிக்குச் செல்லுகிறார். அங்குதான் பரந்த உலகத்தைக் காணத் தொடங்குகிறார். சமுதாயத்தில் இழிவு படுத்தப்படும் பெண்களின் நிலைகண்டு குமுறத் தொடங்குகிறார். பலமொழித் தேர்ச்சியும் நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட போக்கும், முறுக்கு மீசையும், தொங்கு தலைப் பாகையும், கோட்டும் அணியும் வழக்கத்தை மேற்கொள்ளுகிறார். மீண்டும் எட்டயபுர ஜமீன்தாரின் நேரடி விருப்பத்திற்கிணங்க சிலகாலம் எட்டயபுரத்திலிருந்து விட்டு விடுதலை பெற்ற பின்னர் சிட்டுக்குருவியாய் பறந்து விடுகிறார்.

மதுரையில் ஒரு 'தற்காலிக விடுப்பினால் காலியாக இருந்த பணியில் தமிழாசிரியராக மூன்று மாதங்கள் பணிபுரியத் தொடங்கியபோதுதான் மதுரைத் தமிழ்ச் சங்கம் கண்ட பாண்டித்துரைத் தேவர், அரசஞ்சண்முகனார் போன்ற தமிழறிஞர்களின் அறிமுகத்தைப் பெறுகிறார். அவரது முதல் கவிதை விவேகபானு என்னும் இதழில் முதன் முதலாக வெளியிடப்படுகிறது. பாரதியின் மேதை ஒரு பள்ளிக்குள் மட்டும் அடங்கிக் கிடக்க முடியுமா?

பத்திரிகைகள் என்பவை மேல் தட்டில் வாழ்பவர்களது சுக துக்கங்கள் - ஆசை, நிராசைகள் இவைகளைப் பற்றி மட்டுமே சொல்லிவரும் ஏடுகளாக அன்றிருந்தன. சமுதாயத்தின் சீர்கேடுகளைக் களைய வேண்டுமென்பதற்காகவும், உரிமைக் குரலெழுப்பவும் பிறந்தது 'இந்து' ஆங்கில ஏடு. அதன் ஆசிரியர். குழாத்தில் ஒருவராக இருந்த திரு. ஜி. சுப்பிரமணிய ஐயருக்கு இதிலும் மனநிறைவில்லை. மக்களது உணர்வை இன்னும் பெருமளவில் பகிர்ந்து கொள்ள ஏடுகள் தமிழில் வரவேண்டுமென ஆர்வங்கொண்டு 'சுதேசமித்திரன்' நாளிதழைத் தொடங்கினார். ஆனால் அதற்கும் நல்ல தமிழில் எழுதி மக்களோடு உறவாட ஆசிரியர்கள் வேண்டுமே? அப்படித் தேடியபோது கிடைத்த மாமணிதான் அன்றைய தமிழாசிரியர் சுப்பிரமணிய பாரதியார்.

1904-ஆம் ஆண்டிலிருந்து இறுதி மூச்சுவரை 17 ஆண்டுகள் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டார் பாரதி. அவரது 39 ஆண்டு வாழ்வில் பெரும்பகுதி பத்திரிகைக்காரராகவே தானிருந்தார். முதலில் ஆங்கிலச் செய்திகளைத் தமிழாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். மக்களது உள்ளத்தை சர்க்கும், எளிய தமிழில் கட்டுரைகள் வரைந்தார். 'சர்வதேச வர்த்தமானங்களும்' 'உள்நாட்டு விவகாரங்களும்' எழுதிக் குவித்துக் கொண்டிருந்த பாரதிவெறும் பேனா பிடித்த இயந்திரமாக மட்டும் இருந்துவிட முடியுமா? அன்றிருந்த தேசியக் கனல் அவரையும் பற்றியது. அன்றைய காங்கிரசில் வளர்ந்து வந்த மிதவாதக் கொள்கையைச் சாடினார். ஆனால் அவர்கள் வளர்த்த சமூகச் சீர்திருத்தக் கொள்கைகள் இவரை சர்த்தன. இருப்பினும் பெரியவர் தாதாபாய் நவ்ரோஜி, மராட்டிய மாவீரர் திலகர், வங்கத் தலைவர் விபின்சந்திர பாலர், பாஞ்சால சிங்கம் லாலா லஜபதி ராய் ஆகியோர்களது சுதந்திர வேட்கைமிக்க சொற்பொழிவுகளும், எழுச்சி மிக்க எழுத்துக்களும், தட்டி எழுப்பிய செயல்களும் பாரதியைச் சுதந்திரப் பாசறை வீரராக்கிவிட்டன. தமிழகத்தின் திலகராயிருந்த வ. உ. சி. யின் நட்பும், சிந்தனை வீரன் சுப்பிரமணிய சிவாவின் உறவும்அவரது நாட்டுப் பற்றுக்கனலை மேலும் வளர்த்தன. சுதேசமித்திரன் ஆசிரியர் தீவிர தேசபக்தராக இருந்தும் பாரதியின் கனல் அவருக்கும் கொஞ்சம் அச்சத்தைக் கொடுக்கத் தொடங்கியது. ஆசிரியரைக் காப்பாற்ற பாரதி புனை பெயரில் பல ஆவேசக் கட்டுரைகள் எழுதினார். அவரது வரலாற்று உணர்வுக்கு வடிகாலாகச் 'சக்கரவர்த்தினி' என்ற மாத இதழ் தொடங்கப்பட்டது. தனது எழுத்தால் மட்டுமே மனநிறைவு பெறாத பாரதி இருமுறை தமிழ் நாட்டுக் கவிஞர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். தேசபக்திப் பாடல்கள் எழுதும் கவிஞர்கள் தமது பத்திரிகைக்கு எழுதுமாறு கேட்டுக்கொண்டார். அதனால் பலனேதும் கிடைத்ததாகத் தெரியவில்லை. பாரதியின் கவிதை உள்ளம் இன்னுமா உறங்கிக் கிடக்கும்? தேசிய உணர்வோடு கலந்த கவிதை மழை பொழியத் தொடங்கிவிட்டது. தமிழ் நாடெங்கும் இப்புதுக் கவிதைகள் வியப்பையும், ஆர்வத்தையும் தூண்டிவிட்டன. தமது கவிதை செய்த மாபெரும் மாயா ஜாலத்தைப் பார்த்த பாரதி அவைகளைப் பட்டி தொட்டியெல்லாம் பரப்ப ஆர்வங்கொண்டார். சிறுகவிதை நூலொன்று இலவசமாக வெளியீட்டு மக்களிடை வினியோகிக்க உள்ளங்கொண்டு பணவுதவி தேடினார். அவரால் மிதவாதியெனப் பெரிதும் தாக்குதலுக்குள்ளான திரு. கிருஷ்ணசாமி ஐயர் இக்கவிதைகளைக் கேட்ட மாத்திரத்திலேயே அதன் பதிப்பிற்கான தொகையைக்கொடுத்துவிட்டார். அதன் பின்னர்தான் கவிஞர் தம்மைச் சாடி எழுதிய சுதேசமித்திரன் துணை ஆசிரியர் என்று தெரிந்து கொண்டார். "தீவிரவாதிகளென்போர் இவ்வளவு ஆழமான தமிழ்ப்பற்றும் தேசபக்தியும் கொண்டவர்களாக இருக்கிறார்களே!" என்று கூறி பாரதியை ஊக்குவித்தார்.

உணர்ச்சி வேகத்தில் மட்டுமே பாரதி தனது கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதி வெளியிடவில்லை. அவரது ஒவ்வொரு எழுத்தும் தமிழ்ச் சமுதாயத்தைத் தட்டி எழுப்ப வேண்டும் என்பதிலேயே கருத்துக் கொண்டார். தமிழ்ச் சாதியை மேன்மையுறச் செய்ய தனது எழுத்துப் பணி மட்டுமின்றிநல்லகருத்துகள் கிடைக்குமிடமெல்லாம் தேடியலைந்தார்.

'சக்கரவர்த்தினி' மாத இதழில் அன்று வங்காளத்தில் பெரும்புகழ் பெற்றிருந்த வந்தே மாதரப் பாடலைத் தமிழில் மொழி பெயர்த்தார். அதற்காகச் சிறப்பானதோர் முன்னுரையும் எழுதினார். இம்மாத இதழின் ஆசிரியராகத் துவக்க முதல் பதிமூன்று மாதங்கள் மட்டுமே இருந்ததாகத் தெரிகிறது. இவ்விதழின் சிலஇதழ்கள் தற்போதுதான் திரு. சீனி. விசுவநாதன் முயற்சியால் கிடைத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவ்விதழ்களில் பாரதி பெரும்பாலும் மக்களுக்கு அறிவூட்டும் கட்டுரைகளையும், பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் எழுதி வந்தார். பெண் விடுதலை பற்றிய கட்டுரைகளும் எழுதப் பட்டுள்ளன. தனது கொள்கையிலிருந்து மாறுபட்ட கோகலே பற்றியும் கட்டுரை வெளிவந்துள்ளது. 'பாரதகுமாரிகள்' என்ற கட்டுரையில் பழம்பெருமை வாய்ந்ததாகக் கூறப்படும் பாரத நாட்டில் "இப்போது ஆண்மையிழந்து, சுயமதிப் பற்று தேசாபிமானத்தின் பெயரறியாமல் நோய், மிடி, அறியாமை என்ற படுகுழிகளிலே வாழ்ந்துகிடக்கும் பேதைகளா பிறக்க வேண்டும்?" என்றும் மனம் வெதும்புவதுடன் புதிய நாடுகளான ஜப்பான், ரஷ்யா போன்ற நாட்டு மக்களின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டி விளக்குகிறார். தேசத்தின் சக்தி ரூபங்களாகிய மாதர்களை அறிவின்மையென்னும் பேரிருளில் ஆழ்த்தி வைத்துவிட்டுத் 'தேசாபிவிருத்தி,தேசாபிவிருத்தி' என்று கூக்குரலிடுவோரின் பேதைமையை என்னென்போம் என்று இடித்துக் காட்டுகிறார்.

சுதேசமித்திரன், சக்கரவர்த்தினி ஆகிய இதழ்களில் நிறுவனர்களின் கட்டுக்குள் நின்று எழுதுவதில் முழு நிறைவு பெறவில்லை பாரதி. பரந்த உணர்வோடும், தேசியப் பற்றுடனும் இவ்விதழ்கள் நடத்தப் பெற்றிருப்பி

னும் பாரதியின் தீவிரவாதப் பெருக்கு அவற்றையும் விஞ்சி நல்லதோர் வடிகாலை எதிர் நோக்கி ஏங்கி நிற்கும் நேரத்தில் மண்டயம் சீனிவாச அய்யங்கார் 'இந்தியா' வார இதழைத்துவக்கினார். இவ்விதழைப் பாரதியாருக்காகவேதான் துவக்கினாரோ என்னவோ? முதலில் மித்திரனில் இருந்து கொண்டு பகுதி நேர ஆசிரியராகப் பணி புரிந்த பாரதி பின்னர் முழுநேர ஆசிரியராகிவிட்டார். தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதய்யர் போன்றவர்கள் சுதேசமித்திரன் பத்திரிகையிலேயே தொடர்ந்திருக்கவேண்டுமென இரு தரப்பிலும் வாதாடிய போதும் பாரதியார் முடிவை மாற்ற முடியவில்லை. பதிப்பாளர், ஆசிரியர் பெயர்கள் வேறாக இருப்பினும் 'இந்தியா' அவருக்குச் சொந்த வீடாயிற்று.

தனது தீவிர வாதக் கொள்கைகளைத் தட்டுத் தடங்கலின்றி மக்கள் உள்ளத்தில் பதியுமாறு எழுதத் தொடங்கினார். மிதவாதத் தலைவர்களைப் பற்றியும் அவர்களது கொள்கைகளையும் அஞ்சாது விமர்சித்தார். அன்றைய ஆங்கில அரசின் கொள்கைகளையும், அயல்நாட்டு செய்திகளையும் தெளிவாக மக்கள் விரும்பி ஆவலுடன் படிக்குமளவு கதைபோல் எழுதுவார். அன்றைய அரசியல் நிலவரங்களை வேடிக்கைக் கதைகளாக்கி விமர்சித்ததும் உண்டு. இதழ்களென்றால் வெறும் அரசியல் விவகாரங்கள்தான் எழுத வேண்டுமென்ற நிலையை மாற்றி சமுதாயமாற்றத்திற்கான ஆக்கபூர்வ யோசனைகள், பெண் விடுதலை, தீண்டாமை ஒழிப்பு, விஞ்ஞான வளர்ச்சி ஆகியவை பற்றி அவ்வப்போது ஆய்வுக் கட்டுரைகள் மக்கள் கருத்துக்களை சர்க்கும் கருத்து மேடை, கடிதங்கள் ஆகிய புதிய துறைகள் பலவற்றை ஊக்குவித்தார். அவரது மற்றொரு போற்றத்தக்கதும் துணிச்சலானதுமான செயல் கருத்துப்படங்களை மிகப் பெரிய அளவில் வெளியிட்டதுதான். பெரும் பிரச்சினைகளையெல்லாம் உடனே மனதில் பதியுமாறு கருத்துப் படங்களாக வரைய வைத்தார். அப்படங்கள் தலையங்கம் பக்கத்தில் மட்டுமின்றி அட்டைப் படத்திலும் வரத்தொடங்கின. கருத்துப் படங்களின் விபரத்தைக் கதையாகவோ, விளக்கமாகவோ எழுதத் தவறியதேயில்லை. ஓரளவு படித்த மக்களையும் ஈர்க்க வேண்டுமென்பதில் பெருங் கவனம் செலுத்திய முதல் பத்திரிகையாளர் பாரதிதானென்றால் அது மிகையல்ல. பத்திரிகைத் துணுக்குகள், கேலித் துணுக்குகள் எல்லாவற்றிலுமே முற்போக்குச் சிந்தனைதான்! பெருங்கருத்துகளை மிக எளிதாகப் புரிந்து கொள்ள அவர் பயன்படுத்திய சாதனங்கள் பலப்பல.

*1906, 1907*-ஆம் ஆண்டுகளில் இந்தியா இதழில் பாரதி எழுதி வெளியிட்ட கட்டுரைகளின் இரண்டு தொகுப்புக்களைத் திரு இளசை மணியன் அவர்கள் 'பாரதி தரிசனம்' என்ற பெயரில் பெருமுயற்சி எடுத்து வெளியிட்டிருக்கிறார். தவறுகள் எங்கு எவர் செய்தாலும் கண்டிப்பது மட்டுமல்ல நல்லவை எவர் செய்தாலும் ஏற்கும் பண்பினை இக்கட்டுரைகளில் காணலாம். எட்டையபுரம் ஜமீன்தார் தேசியப் போக்குக்கு எதிர்ப்புக் காட்டியபோது கண்டித்தும், அதன்பின் அவர் பணிந்து வந்த போது போற்றியமையும் இதற்கொரு சிறந்த சான்றாகும்.

கோகலே மிதவாதியாக இருப்பினும் ஒரு காலத்தில் அன்னியத் துணிகளை வெறுத்தொதுக்கினார் என்று செய்தியறிந்து பாராட்டுகிறார். அத்துடன் அச்செய்தி அனுப்பியவரையும் பாராட்டத் தவறவில்லை.

வ. உ. சி. யின் தேசியப் பணிகள், கப்பலோட்டிய தீரம் ஆகியவற்றைக் கட்டுரைகளாகவும் கருத்துப் படமாகவும் 1907 சனவரி முதல் மே வரைக்கும் வெளியிட்டுள்ளார். தொழிலாளர் இயக்கங்களுக்கு அவர் அளித்து வந்த ஒத்துழைப்பும் ஆர்வமும் அளவிடற்கரியனவாகும்.

இந்தியா பத்திரிகை 'யங் இந்தியா' 'பால பாரதா' என்ற ஆங்கில இதழ்களையும் பாரதியை ஆசிரியராகக் கொண்டு நடத்தியது. திலகர் போன்ற பெருந் தலைவர்களின் கொள்கைகளை ஆங்கிலம் கற்றவர்களிடமும் பரவச் செய்ய இவ்விதழ் பயன் பட்டது. ஆங்கிலத்திலும் மிகவும் வலிமை மிக்க ஆசிரியராகப் பாரதி திகழ்ந்தார்.

பாரதியின் அதிதீவிர எழுத்துக்கள் அன்றைய அன்னிய அரசை நடுநடுங்கச் செய்தன. ''இந்தியா''வின் மீது அவர்களது பார்வை திரும்பியது. ''இந்தியா''வின் சட்டரீதியான ஆசிரியராகவிருந்த திரு. சீனிவாசன் கைது செய்யப்பட்டு தண்டனை அடைந்தார். அடுத்து பாரதியார் கைது செய்ய வேண்டிய நிலை உருவாகிவரும்போது நண்பர்களது உறுதியானவேண்டுகோளை ஏற்று பாண்டிச்சேரியில் புகலடைந்தார்.

அங்கு சென்றும், அவரது எழுத்தார்வம் குன்றவில்லை. 'இந்தியா'வும் பாரதியில்லாது வாழ முடியவில்லை. மண்டயம் சீனிவாச்சாரியார் அவர்கள் பெருமுயற்சி செய்து 'இந்தியா' வார இதழை அச்சகத்துடன் பாண்டிச்சேரிக்கு மிகக் குறுகிய காலத்தில் மாற்றிவிட்டார். பாரதியின் இடந்தேடி விருந்துவந்து விட்டது. சொல்ல வேண்டுமா ஆர்வத்திற்கு? கனல் கக்கும்கட்டுரைகள் மீண்டும் தொடர்ந்தன. கார்ட்டூன்கள் நிறைந்த பத்திரிகை மீண்டும் மலர்ந்தது. இந்தியப் பகுதியிலிருந்து எத்தனையோ ஆர்வமிக்க இளைஞர்கள் செய்திகளைச் சேகரித்து அனுப்பத் தொடங்கினர். விற்பனையும் பெருகியது. பாரதிக்கு இடமாற்றமே தவிர ஆர்வப்பணிக்குக் குந்தகமேதும் ஏற்படவில்லை. ஆனால் ஒரு சர்வதேசிய நிகழ்ச்சி இப்பணிக்கும் தொல்லை அளிக்க ஆரம்பித்தது.

முதல் உலகப் போர் தொடங்கியதும் இங்கிலாந்தும் பிரான்சும் நட்பு நாடுகளாயின. ஆகவே ஆங்கில அதிகாரிகள், காவல் துறையினர் ஆகியோரின் நட்டமாட்டம் புதுச்சேரியில் பெருகத் தொடங்கியது. 'இந்தியா' இதழும் செல்ல முடியவில்லை. அதற்கான செய்திகளின் வருகையும் குறைய ஆரம்பித்தது. 'இந்தியா' மிகவும் தொல்லைகளுக்குள்ளான நிலையில் பாரதியின் பத்திரிகைப் பணி துவள ஆரம்பித்தது.

இக்காலத்தில் அரவிந்தர் தொடங்கிய 'கர்மயோகின்' இதழின் தமிழ் வெளியீடாகிய 'கர்மயோகி' என்ற இதழை நடத்தும் பொறுப்பைப் பாரதி ஏற்றார். 'தர்மம்' 'சூரியோதயம்' இதழ்களிலும் எழுதி வந்தார். பின்னர் 'விஜயா' என்ற நாளேட்டிலும் பணி புரியத் தொடங்கினார். சுப்பிரமணிய சிவா நடத்திய 'ஞானபானு' விலும் பின்னர் எழுதத் தொடங்கினார். NewIndia, Common wheel Arya, Hindu போன்ற இதழ்களுக்கும் கட்டுரைகள் எழுதி வந்தார்.

புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில் பாரதியின் தத்துவக் கருத்துக்கள் யோகி அரவிந்தர், வ. வே. சு. அய்யர் போன்றாரின் நட்பால் புதுவடிவு பெற்றன இலக்கியப் பணியும் பெருமளவில் வளர்ந்தது. கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில்போன்ற இலக்கியப் படைப்புகள் இக் காலத்தில் உருவாயின. சுதேசமித்திரன்' தனது ஆரம்ப துணை ஆசிரியரைக் கைவிடாது அவ்வப் போது சில கட்டுரைகள், கவிதைகள், கதைகள் பெற்றுக் கொண்டு மாதந்தோறும் குறிப்பிட்ட தொகை அனுப்பிவந்தது.

# மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா

கடந்த நூற்றாண்டில் தோன்றி, இந்த நூற்றாண்டில் நம் நாட்டின் புகழுக்கும் பெருமைக்கும் காரணமாக விளங்கிய பெருமக்களில் ஒருவர் மகாகவி பாரதியார்.

பாட்டுக்கொரு புலவனாக-பைந்தமிழ்த் தேர்ப்பாகனாக-செந்தமிழ்த் தேனீயாக-சிந்துக்குத் தந்தையாக—அனைத்துக்கும் மேலாக மக்கள் கவியாக விளங்கிய மாபெரும் மனிதர் கவியரசர் பாரதியார்.

மகாகவி பாரதி நூற்றாண்டு விழாவை 1981–ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் நாள் முதல், 1982-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் நாள் முடிய ஓராண்டுக காலம் சிறப்பான முறையில் கொண்டாட தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. தொடக்க விழா, பாரதியார் பிறந்த ஊரான எட்டையபுரத்தில் டிசம்பர் 11, 12, 13 ஆகிய மூன்று நாட்கள் நடை பெறும்.

தொடக்க விழாவிற்கும் 1982-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் நாள் முடிய நடை-பெறவிருக்கும் நூற்றாண்டு நிறைவு விழாவுக்கும் இடையிலுள்ள ஓராண்டுக் காலத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் ஏனைய மாநிலத் தலைநகரங்களிலும், டெல்லியிலும், குறிப்பிட்ட சில வெளிநாடுகளிலும் விழாவினை நடத்தலாம் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் இருந்து திரும்பிய பின்னரும் கடையம், எட்டயபுரம் போன்ற ஊர்களில் வாழ்ந்த போதிலும் சுதேசமித்திரன் போன்ற இதழ்களுக்கு எழுதி வந்தார். அவரது பத்திரிகை உணர்வு சும்மாயிருக்க விடவில்லை. உடல் நலம்குன்றியிருந்த போதிலும் பிடிவாதமாக மீண்டும் சுதேசமித்திரன் நாளிதழில் சேர்ந்து பணிபுரிந்தார். இறுதிக் காலம் வரை பாரதி பத்திரிகைப் பணிகளிலேயே ஈடுபட்டார். உடல் நலமில்லாது விடுமுறை எடுத்திருந்து மீண்டும் திரும்பி வருவதாக எழுதியிருந்தநாளுக்கு முந்தைய நாளில் உயிர் நீத்தார். அவர் மறைவிற்கு வருத்தம் தெரிவித்து மித்திரன், இந்து போன்ற நாளிதழ்கள் தலையங்கம் எழுதின.

பாரதியின் பத்திரிகைப்பணி பாரதியின் வாழ்வில் மட்டுமின்றி தமிழ்நாட்டுப் பத்திரிகை வாழ்வில் ஒரு புரட்சிகரமான திருப்பு முனை என்பதை நாம் மறக்கக் கூடாது. ஒரு மகாகவியாகவும் தேசிய சமூகச் சீர்திருத்தத் தலைவராகவும் பெருமளவு உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் பாரதியின் இதயத்தின் அடித்தளத்தில் மக்கள்தொடர்பு உணர்வு மண்டிக் கிடந்ததை நாம் மறந்துவிட முடியாது.

சிறந்த கருத்துக்கள், எண்ணங்கள், விஞ்ஞானப் புதுமைகள் ஆகியவை மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டிருந்தார். கருத்துக்களோ செய்திகளோ தவறாக வெளியிடப்பட்டால் அவற்றைத் திருத்திக் கொள்ளுவதில் பாரதி பின்னடையவேயில்லை. தமது செய்தி அல்லது எழுத்தால் திருந்தியவர்களைப் போற்றவும் தவறியதில்லை. இவற்றிற்கெல்லாம் மேலாக தமது ஆதர்சத் தலைவர்களென ஏற்றுக் கொண்ட பெருந்தலைவர்களது பேச்சிலும், சொல்லிலும் தவறாகப் பட்டதையும் எடுத்துக் காட்டத் தவறவில்லை.

காந்தியடிகளின் பெருமையையும் சிறப்பையும் தென்னாப்பிரிக்காவில் அவர் போராட்டம் நடத்தியபோதே முதன்முதலாக அனைந்திந்திய அளவிலேயே உணர்ந்த மாபெரும் தீர்க்கதரிசி பாரதிதான். திலகரின் தீவிர வாதத்தைப் பரப்பி வந்த பாரதி காந்தியடிகளிடம் எதிர்கால அரசியல் தலைமைக் கரு வளர்ந்து வருவதை நன்குணர்ந்தார். அவரது இந்தியாவில் வெளியான கட்டுரைகள் மாத்திரமின்றி கருத்துப் படங்களும் இதைப் பறை சாற்றுகின்றன. வங்காளம், பாஞ்சாலம், மராட்டியம் போன்ற மாநிலங்களுக்கு ஈடாகத் தீவிரவாத அரசியலில் வீறு நடை போடத்துவங்கிய தமிழகத்தைக் காந்தி யுகத்திற்குத் தயார் செய்த பெருமையும் பாரதியைத்தான் சாரும். காந்தீயத் தலைமையை ஏற்ற ராஜாஜி போன்ற தலைவர்களும் இதனை நன்குணர்ந்து போற்றியுள்ளனர்.

அதுபோன்ற சமதர்மக் கருத்துக்களையும் ரஷ்யப் புரட்சியின் துவக்க காலத்திலேயே உணர்ந்து அதன் சிறப்பை மக்கள் உள்ளத்தில் வேரூன்றச் செய்தவரும் பாரதிதான். சமதர்மக் கருத்து பரவ இந்திய நாட்டில் அமைதிப் புரட்சி நடத்த வேண்டுமென்பதையும் அவரது 'செல்வம்' என்ற கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது.

தீவிரவாத அரசியலில் பழிக்குப் பழி வாங்கும் உணர்வை முழுக்க முழுக்க ஆதரிக்காத முதல் தீவிரவாதி பாரதி. ஓர் ஆங்கில நாளிதழ் கொடுங்கோலனான லார்டு கர்சனின் மனைவியின் மரணம் தெய்வ தண்டனை என்று கூறியதைக் கண்டித்து எழுதினார் பாரதி. காரணம், 'பகைவனுக்கு அருள்வாய்' என்ற பண்பை பத்திரிகையாளர் வளர்க்க வேண்டுமென்பது பாரதியின் கருத்து ஆகும்.

ஆவேசக் கவிஞனாகவும், பத்திரிகையாளராகவும் பேச்சாளராகவும் திகழ்ந்த பாரதியின் நகைச்சுவை, நையாண்டிக் கட்டுரைகள் ஆகியவை ரசித்துப் பின்பற்றத்தக்கன. பெரிய கருத்துக்களையும் தத்துவங்களையும்கூட மனதைத் தொடும் கதைகள் மூலம் வெளியிட்டார். மக்களைக் கொதிக்க வைக்கும் பல நிகழ்ச்சிகளையும், சிரிக்க வைத்தே சிந்திக்கச் செய்தார். அவரது 'தராசு'க் கட்டுரைகள் இதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

பாரதியின் பத்திரிகைப்பணி மகத்தான தொன்றாகும். இன்றைய புதுமைப் பத்திரிகையுலகிற்குப் பெரியதோர் வழிகாட்டியான பணிகள் பலவும் செய்த பெருமை பாரதிக்கு உண்டு. அவரது மேதைத்தன்மையும், துன்பங்களைக் கண்டு பொங்கும் அருட் பண்பும் தமிழன் உயர உயரப் பறக்க வேண்டுமென்ற பேரார்வமும் அவரைப் பெருங் கவிஞராய் பெரும் போராட்ட வீரராய் புகழ்மிகு பத்திரிகையாளராய் திகழச் செய்த ..

வாழ்க பாரதி.



# கற்றோரை ஈன்ற கரிசல்மண் பூமி

**இ**ளசை;

எட்டையபுரத்துக்கு இப்பெயரும் உண்டு.

1557—ல் தோன்றிய ஊர் எட்டையபுரம் என்பர். திருநெல்வேலிச் சீமையில் ஒட்டப் பிடாரம் வட்டத்தில் அமைந்த இவ்வூர் கரிசல் மண் நிறைந்த ஊராகும்.

விடுதலைப் போராட்டக் காலத்தில் வீரம் கமழ்ந்த ஊரெல்லாம் இதனைச் சுற்றியுள்ளன.

'மானம் பொழியுது பூமி விளையுது' வாணி பத்துக்கு வந்து இங்கே ஆள முயல்பவனே, அந் நியனே உனக்கு ஏன் கப்பம்' என்று சூளுரைத்த கட்டபொம்மன் ஆண்ட பாஞ்சாலங்குறிச்சி:

கப்பலோட்டிய வீரத்தமிழ்மகன் வ. உ. சிதம்பரனார் பிறந்த ஒட்டப்பிடாரம்:

தமிழ்நாட்டின் வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற தியாக மறவர்கள்-விடுதலைப் போராட்ட வீரர்களும் வாழ்ந்த தென்பாண்டி மண்டலத்தின் பெருமைக்குரிய ஊர்களில் ஒன்றுதான் எட்டைய புரம்.

எட்டையபுரத்தில்தான் எத்தனைப் புலவர் கள், எத்தனைக் கவிஞர்கள்.

தமிழுக்கு அணி சேர்த்த கடிகை முத்துப் புலவர் எட்டையபுரத்தில் பிறந்தவர். அவரின் மாணாக்கராக இருந்தவர் உமறுப்புலவர்.

சீறாப்புராணத்தை அளித்த உமறுப் புலவர் எட்டையபுரத்துக்காரர். இவரின் தர்க்காவும் எட்டையபுரத்தில் உள்ளது.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்து சாமி தீக்ஷிதர் இறுதிநாட்களில் வாழ்ந்த ஊரும் இதுவே. அவரது நினைவகம் இங்கேதான் உள்ளது.

பாட்டுக்கொரு புலவனாக விளங்கிய பாரதி இந்த நூற்றாண்டின் ஈடில்லா மக்கள் கவியாக திகழ்ந்த பாரதியார் பிறந்த ஊர் இது.

பாரதியோடு படித்து பைந்தமிழ் வளர்த்த அருந்தமிழ்ப் புலவர் நாவலர் சோமசுந்தர பாரதியார் பிறந்த ஊரும் இது.

கன்னித் தமிழ் வளர்த்த கற்றோரை ஈன்ற இந்தக் கரிசல் மண் பூமியில்தான் நெல் லைச் சீமையில் விளையும் பருத்தியில் பாதி விளைகிறது. பாரதியால்—பைந்தமிழ் வளர்த்த பாவலர்களால் பெரும் பேற்றினைப் பெற்ற எட்டையபுரம் எதிர்காலத்தில் மேலும், சீரும் சிறப்பும் பெற தமிழ்நாடு அரசு ஆக்கப்பூர்வ மான பல திட்டங்களை நிறைவேற்றிட உள்ளது.

## "வந்தே மாதரம்" பாரதி

**1920**-ம் ஆண்டு சுதேசமித்தி ரன் காரியாலயம் சென்னை ஜார்ஜ்டவுன் எர்ரபாலு செட்டி தெருவில் இருந்தது. அச்சமயம் கவிபாரதியார் புதுச்சேரியிலிருந்து திரும்பி வந்து மீண்டும் சுதேச மித்திரனில் பணியாற்றினார். தினசரிகாலை ஆபீசுக்கு வந்ததும் ஆசிரியர் ஸ்ரீ. ஏ. ரங்கஸ்வாமி ஐயங்கார் அறை மற்றும் நிர் வாகி பதவியிலிருந்த ஸ்ரீ ஸி. ஆர் ஸ்ரீநிவாஸன் அறைபக்கம் மூடிய பாதி கதவுகள் வரை வந்து எட்டி பார்த்துவிட்டு, ''வந்தேமாதரம்! பாரதி வந்துவிட்டேன்'' என்று கணீரென்ற குரல் கொடுத்தவாறு தமது இருப்பிடத்திற்குச் சென்று விடுவார். பாரதியார் நடையில் விறைப்பு இருக்கும். தனக்கே உரித்தான பாணியில் முன் பாதங் களை எம்பி எம்பி நடந்து வரு வார். கையை இடுப்பில் கட்டிக் கொண்டு உலாவுவார். பத்தி ரிகை வேலைகள் முடிந்ததும் ஊழியர்கள் பாரதியார் இருப் பிடத்திற்கு வந்து பேசுவதுண்டு. பேச்சு வாக்கிலேயே ஊழியர்கள் பாரதியாரை, ''ஏதாவதுபாட்டுப் பாடுங்கள் கேட்கிறோம்' என்று கேட்பார்கள். அதற்கு பாரதி யார் 'பாட்டா பாட வேண்டும்? நினைத்தபோது பாட வராதே. பராசக்தி என்னைத் தூண்டினால் தான் பாடுவேன். வேண்டு மானால் அவளிடம் முறை யிடுங்கள்' யென்று கூறிவிட்டு, தனது மீசையை முறுக்கி விட்டு விறைப்பாக இங்குமங்கும் நடப் பார். ஊழியர்கள் விட்டு விடு வார்களா? உடனே, 'தாயே! பராசக்தி! எங்கள் பாரதியைப் பாடச் சொல்லுங்கள்' என்று வேடிக்கையாக கூறுவார்கள். இது கேட்டதும் பாரதி 'பாட்டுதானே கேட்டீர்கள். இதோ பாடு கிறேன். கேளுங்கள்' யென்று கூறிவிட்டு ஆகாயத்தைப் பார்த் துக்கொண்டேபராசக்திப் பாட்டு களைப் பாடிவிட்டுச் செல்வார்.

இதுபோலவே பிற்பகலில் சாப்பிடுவதற்காகப் பச்சை வாழைப்பழமும் நாட்டுச் சக்கரை யும் வாங்கி வந்து கொடுத்ததும் அதனைக் கையில் வாங்கி ஆகா யத்தில் சூரியனுக்குக் காட்டி விட்டு ஏதோ முணுமுணுத்து விட்டு பின்னர் தான் சாப்பிடுவது வழக்கம். வாழைப்பழம் சக்க ரையை நண்பர்களுக்கும் கொடுப் பார்.


**ஆதாரம்:** **அமரகவி பாரதியாரின் 50-வது ஆண்டுநினைவு அஞ்சலி-சிறப்புப் பகுதி. 'சுதேசமித்திரன்' 11-9-1971.**

**தொகுத்தது : ரகமி.**

# மகாகவி
# பாரதியார்
# நூற்றாண்டு விழா


## ஓர் அறிவிப்பு

மகாகவி பாரதியார் நூற்றாண்டு
விழாவை 1981 டிசம்பர் 11ம் நாள்
முதல் 1982 டிசம்பர் 11-ம் நாள்
வரை சிறப்பாகக்
கொண்டாட அரசு தீர்மானித்
துள்ளது. இந்நூற்றாண்டு
விழாவினையொட்டி, பாரதியார்
நூல்களை வெளியிடுதல்,
நூற்றாண்டு மலர் வெளியிடுதல்,
கண் காட்சி, கலைக்கூடம்,
நினைவு மண்டபங்கள் அமைத்தல்
ஆகியவற்றிற்கு அரசு திட்டமிட்டுள்ளது.
பாரதியாரோடு தொடர்புடைய
பெருமக்கள் தமக்குத் தெரிந்த.
தம்மிடமுள்ள வரலாற்று
நிகழ்ச்சிக் குறிப்புகள், புகைப்
படங்கள், கடிதங்கள்,
கட்டுரைகள், எழுத்து வடிவங்கள்,
பத்திரிகைகள், சிறப்பு மலர்கள்
ஆகியவற்றை ஆதாரங்களுடன்
கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி
உதவுமாறு வேண்டுகிறோம்.
பணி முடிந்ததும் அவை மறு
படியும் உரியவர்களிடம்
நன்றியுடன் ஒப்படைக்கப்படும்.
அரிய சேமிப்புகளாக இருப்பின்
உரிய அன்பளிப்பு அளிக்கப்படும்.



*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-*

**தனி அலுவலர்,**
**மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா,**
**செய்தி, சுற்றுலா (தமிழ்)**
**பண்பாட்டுத்துறை**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை-600 009.**


CORPORATION OF MADRAS HEALTH DEPARTMENT.

DEATHS in the 26th Registration District of the City of Madras for the year 1921

✱ 'September 12, Brahmin, C. Subramaniya Bharathi, Male, 38, Sub-Editor, acute dysentery 10 days, 67, T. P. Koil street, C. Viswanatha Iyer, Brother, 67, T. P. Koil street'' என்று ஆங்கிலத்தில் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மகாகவி பாரதியாரின் மறைவினை ஒட்டி அத்துயர நிகழ்ச்சி சென்னை மாநகராட்சி மரணக் குறிப்பேட்டில் பதியப்பட்டதின் அசல் படிவம்.



# தமிழருக்கு வாழ்த்து!

## மகாகவி பாரதியார்

தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகின்றது.

உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கிறார்கள். தெய்வங்கண்ட கவிகள், அற்புதமான ஸங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்து விட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக்கண்ணாடியிலே போய்ப் பார்.

நமது நாட்டு ஸ்திரீகளிலே பலர், சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீர்யம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன.

தமிழா, பயப்படாதே. ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. ''ஜாதியிரண்டொழிய வேறில்லை'' என்ற பழந் தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை ''வாழ்க்கைத் துணை'' என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்துகொண்டு பின்பு நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள்போல் நடந்து கொள்ளாதே.

தமிழா, உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க் கதைகள் மிதமிஞ்சி விட்டன. உனது மதக் கொள்கைகள், லௌகிகக் கொள்கைகள், வைதீக நடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலைதூக்கி ஆட இடங்கொடுத்து விட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும், வெளியிலும் தனிமையிலும், கூட்டத்திலும், எதிலும் எப்போதும் நேர்மையிருக்க வேண்டும். உண்மையிருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்க வேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தலங்களுக்கெல்லாம் உயிர்.

உண்மை சாஸ்திரங்களுக்கெல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால், தமிழா, எல்லாச் செய்திகளிலும் நிலவும்படி செய்.

தமிழா, எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை. எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. ''முந்திய சாஸ்திரந்தான் மெய், பிந்திய சாஸ்திரம் பொய்'' என்று தீர்மானம் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஒரு கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? ''தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லிய மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள்'' என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது.

இவ்வுலகில் நான்கு புருஷார்த்தங்கள் என்று பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

இவற்றுள் அறமாவது கடமை. அது, உனக்கும் உனது சுற்றத்தாருக்கும், பிறர்க்கும் நீ செலுத்த வேண்டிய கடமை. 'பிறர்' என்பதனுள் வையகம் முழுதும் அடங்கும். கடமையில் தவறலாகாது. தொழில்களெல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

பொருள் என்பது செல்வம். நிலமும், பொன்னும் கலையும் புகழும் நிறைந்திருத்தல், நல்ல மக்களைப் பெறுதல், இனப்பெருமை சேருதல், இவையெல்லாம் செல்வம். இச் செல்வத்தைச் சேர்த்தல் மனித உயிருக்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாம் கட்டளை.

இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து முதலிய ரஸவஸ்துக்களை அனுபவிப்பது. இவ்வின்பங்கள் எல்லாம் தமிழா, உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகுமுடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக. பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பம் எய்துக.

வீடாவது பரமாத்மாவின் அறிவு கலந்து நிற்பது ''வீடு'' என்ற சொல்லுக்கு ''விடுதலை'' என்பது பொருள். மேற்கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களும் ஈடேறிப் பெரியாருக்கு ஈசன் தானாகவே வீட்டு நிலையருள் செய்வான். தமிழா, உனது புருஷார்த்தங்கள் கூடுக!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்...அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
Sir

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23
தமிழரசு

